வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றம்

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 26.06.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 202 | பக்கங்கள் : 20


07
அ. இ. அ. தி. மு. க. பிளவை தடுக்கும் முயற்சியில் பா. ஜ. க.?


08
ஒத்துழைப்பிரை கோரும் பிரதமர்


10
தமிழ்த் தேசியம் என்பது நிறம்மாறி சிறிலங்கா தேசியமாகி வருகிறது!


11
வீட்டுத் தோட்டம்...! இனி இதுவே ஒரேவழி...!!

# தமிழ் அரசியல்வாதி ஒருவரினால் ஐக்கிய மக்கள் சக்திக்குள் குழப்பம்!

## உயர்மட்ட தலைவர்கள் சிலர் அதிருப்தியில்

கொழும்பு, ஜூன். 26

**ஐக்கிய மக்கள் சக்திக்குள் தமிழ் அரசியல்வாதி ஒருவரின் தலையீடு காரணமாக, அந்தக் கட்சிக்குள் உட்கட்சி முறுகல் நிலை தோன்றியிருப்பதாக கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.**

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்றக் குழு கூட்டத்துக்கு மாத்திரமன்றி, அந்தக் கட்சியின் முக்கிய உள்ளகக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளும் இந்த தமிழ் அரசியல்வாதி, அந்த கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சில முக்கிய முடிவுகளை எடுக்கத் தூண்டுவதுடன், அந்த முடிவுகளையே கட்சி செயல்படுத்தவும் வேண்டும் என கட்சியின் ஏனைய தலைவர்களை வற்புறுத்தி வருவதாகவும் மேற்படி தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அத்தோடு, அவரது இத்தகைய செயற்பாடுகளைக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மௌனமாக ஆதரிப்பதாகவும், இதன் காரணமாகக் கட்சி

19

# எரிபொருள் கப்பல் வருவதில் தாமதம்

## வரிசையில் நிற்கவேண்டாம்

கொழும்பு, ஜூன். 26

எரிபொருள் கப்பல் நாட்டுக்கு வருகை தருவது மேலும் தாமதம் அடையும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வார ஆரம்பத்திலும் அடுத்த வாரமும் வரவிருந்த பெற்றோல், டீசல் மற்றும் மசகு எண்ணெய் கப்பல்கள் மேலும் தாமதமடையும் என விநியோகஸ்தர்கள் தொடர்பு கொண்டு தெரிவித்ததாக அவர் கூறியுள்ளார்.

வங்கி நடைமுறைகள் மற்றும்

19



# மன்னார் வைத்தியசாலை பணியாளர்கள் போராட்டம்

## பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தி

யாழ்ப்பாணம், ஜூன். 26

சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி படுத்தக் கோரியும், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும் நேற்று சனிக்கிழமை காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்

19

# அமெரிக்க உயர்மட்டக் குழு இன்று இலங்கைக்கு வருகை

## பல தரப்புகளுடன் பேச்சு

கொழும்பு, ஜூன். 26

அமெரிக்க திறைசேரித் திணைக்களம் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உயர்மட்ட தூதுக் குழுவொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவுள்ளது. இக்குழுவினர் 29 ஆம் திகதி

19

# 10 அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய அரசு அனுமதி!

கொழும்பு, ஜூன். 26

திறந்த கணக்குகள் மூலம் இந்நாட்டுக்கு 10 அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரசி, சீனி, கோதுமை மா, பருப்பு உள்ளிட்ட 10 அத்தியாவசிய பொருட்களை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படுவதாக வர்த்

19

# திருச்சி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் 30 பேர் தற்கொலை முயற்சி

## தீக்குளித்த ஒருவர் ஆபத்தான நிலையில்

தமிழ்நாடு, ஜூன் 26

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள அகதிகளுக்கான சிறப்பு முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்கள் 30 பேர் மாத்திரை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த 30 பேரும் மீட்கப்பட்டு தற்போது சிகிச்

19



# நகரப்பகுதி பாடசாலைகள் வாரத்தில் 3 நாள் இயங்கும்

கொழும்பு, ஜூன். 26

கடந்த வாரம் இயங்காத நகரப் பகுதி பாடசாலைகளை வாரத்தில் 3 நாட்களுக்கு இயக்கக் கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் பாடசாலை கற்பித்தல் பணிகளை முன்னெடுப்பது குறித்த அறிவித்தலைக் கல்வி அமைச்சு

19

# திக்கம் வடிசாலை தென்னிலங்கை நிறுவனத்துக்குத் தாரை வார்ப்பு!

பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின் எதேச்சாதிகாரம் என ஐங்கரநேசன் சாடல்

( விவரம் 3ஆம் பக்கத்தில்)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# போதையால் மாறும் பாதை!



## இன்று (ஜுன் 26) சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம்

உலகில் சுமார் மூன்று கோடிக்கும் மேற்பட்டோர் போதைப் பொருள் பயன்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. சபையின் போதைப் பொருள் மற்றும் குற்ற ஆவண அலுவலகம் 2020ஆம் ஆண்டு வெளியிட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 2.50 லட்சம் பேர் போதைப்பொருளால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றனர். கடந்த 10 ஆண்டு களில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் அது தொடர்பான கோளாறுகள் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை 71சதவீதம் அதிகரித்துள்ளது என்கிறது ஐ.நா. வின் அறிக்கை.

இந்தியாவில் மட்டும் 1.4 கோடி பேர் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிடியில் சிறுவர்களும் சிக்கியுள் ளனர் என்கிற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் 17 முதல் 25 வயது வரை உள்ளவர்களின் எண்ணிக்கையே அதிகம். மேலும் போதைப் பொருள் பயன்படுத்துபவர்களில் மூன்றில் ஒருவர் பெண் என்பது மேலும் நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது.

புகை பிடித்தல், புகையிலை, குட்கா, பான் மசாலா, மதுபானம் எனத் தொடங்கும் தீய பழக்கங்கள், கஞ்சா, அபின், கொக்கைன், பிரவுன் சுகர் என அடுத் தடுத்த போதைப்பொருட்களை நோக்கி போதை அடிமைகளை அழைத்துச் செல்கின்றன. தீய நட்பு வட்டாரங்களால் அறிமுகமாகும் இப்பழக்கம், நாள டைவில் தொடரும் வழக்கமாக மாறி விடுகிறது. சிறுவர்கள், இளைஞர்கள் கைகளில் பணப்புழக்கம் அதிகரிக்கும் போது, அவர்கள் அதற்கேற்ப தங்களுக் குத் தேவையான போதைப் பொருட்களையும் தேர்ந்தெடுக்கின்றனர்.

குற்றம் இழைக்க எண்ணும்போது சராசரி மனிதர்களுக்கு ஏற்படும் பயம், போதைப் பழக்கமுடைய மனிதர்களிடம் காணப்படுவதில்லை. அவர்களுக்கு ஒருவித தைரியம் வந்து விடுகிறது. சராசரி மனிதர்களின் தைரியமும், போதை ஆசாமிகளின் தைரியமும் வேறுவேறு. இதை குருட்டு தைரியம் என்றும் கூறலாம்.

பெண் குழந்தைகள், சிறுமிகள், பெண்கள் ஆகியவர்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானோர் ஏதேனும் ஒரு போதைப் பொருளைப் பயன்படுத்தும் பழக்கம் உள்ளவராக இருக்கிறார். போதைப் பொருள் பயன்படுத்துபவர்கள் மட்டுமே குற்றச் செயல்களில் ஈடுபடு கின்றனரா? சாதாரண மனிதர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடு வதில்லையா? இந்த கேள்விகளை அவ்வளவு எளிதில் கடந்து செல்ல முடிலாது. அது வேறொரு விவாதம்.

போதைப் பொருட்களால் ஏற்படும் விளைவையும், உடல் மற்றும் மனதள வில் ஏற்படுத்தும் பாதிப்புகளையும் உணர முடியாவிட்டால், அதற்கு அடிமையானவர்களால் அதிலிருந்து மீள முடியாது என்கிறது மருத்துவ ஆய்வு.

அரசும் தன்னார்வ நிறுவனங்களும் எவ்வளவு விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும், மருத்துவ ஆலோசனைகள் வழங்கினாலும் சிலர் போதைப்பொருளைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றனர். பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்தாலும், குணமான சில நாட்களிலேயே அவர்கள் மீண்டும் அதைத் தொடங்கி விடுவதைக் காண முடிகிறது.

"இருக்கும் வரை இருப்போம், இறப்பு வந்தால் போவோம் என்று கூறு பவர்களைக் கண்டிருப்போம். அவ்வளவு மலிவானதாகி விட்டதா மனித உயிர்? "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று பாடிவிட்டு சென்றார் ஔவையார். அதை ஏனோ அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள், உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கும் உள்ளாகின்றனர். தன்னைத்தான் கட்டுப்படுத்தவிய லாத அபாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவர்களின் சுய கட்டுப்பாடு உடை படுகிறது. இதனால் எதற்கும் துணிந்தவர்களாகி விடுகின்றனர். உடலும், மனமும் சமநிலையை இழக்கும்போது, ஒருவன் எல்லாவற்றையும் இழந்தவனாகின்றான் என்பதே உண்மை.

நீதிமன்றத்தில் குவியும் விவாகரத்து வழக்குகள் ஒருபுறம் இருக்க, நீதி மன்ற வாசலுக்கே செல்லாமல் முறியும் உறவுகள் ஏராளம். இதனால் கேள்விக்குறியா வது அவர்களுடைய பிள்ளைகளின் எதிர்காலம் தான். தாய் தந்தையின் வழிகாட்டுதலின்றி வளரும் குழந்தைகள் வழிதவறிச் சென்ற நிகழ்வுகள் ஏராளமாகும். தனிநபரின் போதை இன்பத்திற்காக உறவுச் சங்கிலிகள் அறுபடுவதை காணும் நம் மனம் கலங்குகிறது.

யாராக இருந்தாலும் அவர்கள் மனதில், சமூகத்தில் நாம் கௌரவமாக வாழ வேண்டும், மற்றவர்களால் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுவது இயல்பே. ஆனால், போதைக்கு அடிமையாகிறவர்களின் தன்னிலை மறந்த தேவையற்ற பேச்சு, தவறான நடத்தை போன்றவை அவர்கள் மீதான மதிப்பைக் கெடுத்து விடுகின்றன. ஒருவர் சமூகத்தின் பார்வையில் ஒரு முறை அவமதிப்புக்கு உள்ளானால், அவர் அதை மீட்பது அவ்வளவு எளிதல்ல."போதை "என்ற தீய பழக்கம் மனித வாழ்வின் பெரும்பகுதியை தள்ளாடச் செய்கிறது. போதை அடிமைகளுக்கு விழிப்புணர்வு, அறிவுரை, ஆலோசனை வழங்குவது ஒருபுறமிருந்தாலும், அவர் கள் தங்களை மாற்றிக்கொள்ளாதவரை போதைப் பழக்கத்திலிருந்து மீண்டுவர இயலாது. மனதளவில் மாற்றத்தை விரும்பி, போதைப்பழக்கத்தை விட்டுவிட முயல்பவர்களை மருந்து மாத்திரை மூலம் எளிதில் குணப் படுத்தி விடலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

போதைப்பொருள் பயன்பாட்டை ஒழிப்போம் அழகான வாழ்க்கை அவலமாவதைத் தவிர்ப்போம்!

**முனைவர் த. சத்தியசீலன்**

# அமெரிக்கக் கொள்கை மையமாக உள்ளது சர்வதேச நாணய நிதியம்

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன். 26

அமெரிக்காவின் கொள்கை மையமாக சர்வதேச நாணய நிதியம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர்,

ரஷ்யா-உக்ரைன் மோதலுக்கு சர்வதேச நாணய நிதியமும் பங்களித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் காரணமாக, உக்ரைன் நேட்டோவில் சேர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.



இதேவேளை, நீண்ட கால அடிப்படையில் அரபு நாடுகளிடம் இருந்து எரிபொருளை அல்லது டொலரை பெறுவதற்கான வழிமுறையை கண்டறியவேண்டும்.

எவ்வாறாயினும், இலங்கையால் டொலரைப் பாது காக்க முடியாது. எதிர் காலத்தில் வட்டி செலுத்துவதற்கும் டொலர்களை பெறமுடியாது.

எனவே சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை உறுதிப்படுத்திய பின்னர் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை ஏன் பெற முடியாது - என்றார். (அ)

# எரிபொருள் நிலையங்களின் தாங்கிகள் திறப்பதில் பொலிஸ் தலையிடக்கூடாது

## பொலிஸ் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜுன். 26

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தாங்கிகளை திறப்பதில் தலையிடுவதைத் தவிர்க்குமாறு பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸாருக்கும் அறிவித்துள்ளது.

எரிபொருள் தாங்கிகளை திறக்குமாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள பொலிஸாரிடம் கோருவதை தவிர்க்குமாறும் பொலிஸ் தலைமையகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய முயற்சிகள் ஆபத்தானவை என்றும் பாதுகாப்புக் கவலைகளை எழுப்புவதாகவும் ஒரு அறிக்கை கூறியுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குவியும் பொதுமக்கள், எரிபொருள் முடிந்து விட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கூறியதும் கொந்தளிக்கின்றனர். அத்துடன், எரிபொருள் கொள்கலன்களை திறந்து காட்டுமாறு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதைய டுத்து மக்களை அமைதிப் படுத்த பொலிஸார், கொள் கலன்களை திறந்து, எரி பொருள் இருக்கிறதா இல்லையா என்பதை பொது மக்களுக்கு அறிவிக்கின்றனர்.

சர்ச்சைக்குரிய இவ்வாறான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பலவற்றில், எரிபொருள் பதுக்கி வைத்திருந்து, கையும் மெய்யுமாக சிக்கியும் வருகிறது.

எனினும், இவ்வாறு எரிபொருள் களஞ்சியக் கதவுகளை திறந்து பொதுமக்களுக்கு காட்டுவதை தவிர்க்குமாறு பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பாதுகாப்பை உறுதி செய்து, பொதுமக்களை ஒழுங்குபடுத்துவது மாத்திரமே பொலிஸாரின் கடமையென அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு இலங்கையில் பெரும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜுன். 26

இலங்கையில் தற்போது, சுமார் 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் 2 அல்லது 3 மாத காலப் பகுதியில் மேலும் 163 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 47.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபை உறுப்பு நாடுகளை கோரியுள்ளது. (அ)

# வாழைச்சேனை எரிபொருள் நிலையத்தில் குழப்ப நிலை!

மட்டக்களப்பு, ஜுன். 26

மட்டக்களப்பு, வாழைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்தின்போது ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக அமைதியின்மை ஏற்பட்டது.

மண்ணெண்ணெய் கிடைக்கும் என நேற்று அதிகாலை முதல் நீண்ட வரிசையில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனப் பலரும் காத்திருந்தனர். இதேபோன்று மீனவர்களும் பிறிதொரு வரிசையில் காத்திருந்தனர்.

காலை 9.30 மணியளவில் காத்திருந்த மக்களுக்கு ஒரு லீற்றர் அளவே மண்ணெண்ணெய் வழங்கப்படும் என அறிவித்தல் வழங்கி விநியோகம் செய்ய ஆரம்பிக்கப்பட்ட வேளை காத்திருந்த மக்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

தங்களது தேவையைப் பூர்த்தி செய்ய வழங்கப்படும் மண்ணெண்ணெய்யின் அளவு போதாது என்றும், 5 லீற்றர் அளவே தேவை என்றும் வலியுறுத்தி மண்ணெண்ணெய்யைப் பெற்றுக்கொள்ள மக்கள் மறுப்புத் தெரிவித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இதன்போது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டு குழப்ப நிலை காணப்பட்டது.

பின்னர் குறித்த விடயத்துக்கு நியாயம் வேண்டி அருகிலுள்ள வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று நிலையப் பொறுப்பதிகாரி வசந்த பண்டார விடம் தங்களது நிலைப்பாட்டை மக்கள் தெரிவித்தனர்.

நிலைமைகளை கேட்டறிந்து கொண்ட பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து மக்களது கோரிக்கை தொடர்பாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருடன் கலந்துரையாடிய பின்னர் 4 லீற்றர் வழங்குவதற்கு முடிவு காணப்பட்டு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. மீனவர்களுக்கும் 15 லீற்றர் அளவு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. (அ)

# திக்கம் வடிசாலை தென்னிலங்கை நிறுவனத்துக்குத் தாரை வார்ப்பு!

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின் எதேச்சாதிகாரம் என ஐங்கரநேசன் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன். 26

திக்கம் வடிசாலையின் உரிமத்தைத் தங்களிடம் மீளவும் கையளிக்குமாறு அதை நிர்வகித்து வரும் வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள் நீண்டகாலமாகக்கோரி வருகின்றனர். பல போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர். ஆனால், இப்போது இவர்களைப் புறந்தள்ளி, இவர்களுக்கே தெரியாமல் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜ, திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கையைச் சேர்ந்த வி.ஏ டிஸ்ரிலறிஸ் என்ற நிறுவனத்துக்கு 25 வருடக் குத்தகைக்குத் தாரை வார்த்துள்ளார். பேரினவாத எதேச்சாதிகாரப் போக்குடன் வடமராட்சி பனைத் தொழிலாளர்களின் வாழ்வுரிமையைத் தட்டிப்பறித்து தனது இனத்தவர்களிடம் கையளித்துள்ளார் என்று தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

திக்கம் வடிசாலை தொடர்பாக நேற்று சனிக்கிழமை பொ. ஐங்கரநேசன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

பனை தமிழ் மக்களின் இயற்கை வளங்களில் முதன்மையானது. இதிலிருந்து பொருளாதார ரீதியாக அதியுச்சப் பயனை அறுவடை செய்ய வேண்டும் என்ற நோக்குடனேயே பனை அபிவிருத்திச் சபை தாபிக்கப்பட்டது. ஆனால், இதன் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களில் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் பனை பற்றிய பட்டறிவையோ, படிப்பறிவையோ கொண்டிராமல் அரசியற் சிபார்சை மட்டுமே தகுதியாகக் கொண்டிருந்தார்கள். ஆளுங்கட்சியில் அல்லது அதற்கு முண்டு கொடுக்கும் தமிழ்க்கட்சிகளில் இருந்து தேர்தலில் தோற்றுப் போனவர்களுக்குப் பிரதியுபகாரமாகத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. இவர்களால் பனைத் தொழில் சீரழிந்து இறங்கு முகமே கண்டது. இப்போதைய தலைவர் கிரிசாந்த பத்திராஜவும் அதையே கனக்கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கிறார்.

திக்கம் வடிசாலை 1983 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலும் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதியிலும் உருவாக்கப்பட்டது. சுயாதீனமாக இலாபத்தோடு இயங்கிவந்த இந்த வடிசாலை 1987இல் வடமராட்சியில் இடம்பெற்ற ஒப்பறேசன் லிபறேசன் இராணுவத் தாக்குதல் காரணமாகப் பலத்த சேதமடைந்தது. இதனால், பனை அபிவிருத்திச்சபையிடம் இருந்து உதவிபெற நேரிட்டது. ஆனால். ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாகப் பனைத் தொழிலாளர்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி 2001ஆம் ஆண்டு அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திக்கம் வடிசாலை பனை அபிவிருத்திச் சபையின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. அப்போதிருந்தே திக்கம் வடிசாலையின் சுயாதீனம் பறிபோனது.



பனை அபிவிருத்திச் சபையின் தலைவர்கள் அரசியல் நியமனம் என்பதால் அவர்களின்கீழ் இருந்துவந்த திக்கம் வடிசாலையின் வளங்களும் அரசியற் தேவைகளுக்கே பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. இதனாலேயே, திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சபையிடமிருந்து விடுவிக்க வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள் நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். பனை தமிழர்களின் தேசியவளம் என்பதால் இது ஒட்டுமொத்தத் தமிழர்களின் பிரச்னையும் ஆகும். திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கை முதலாளிகளிடமிருந்து மீட்கவும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜவின் பேரினவாத எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தும் பனைசார் உற்பத்தித் தொழிலாளர்களின் பின்னால் தமிழர்களாக நாம் அனைவரும் அணிதிரண்டு போராடுவோம்-என்றார். (அ)



# ஜப்பானிடம் மன்னிப்பு கோரிய அமைச்சர் நிமல்!

கொழும்பு, ஜூன். 26

“ஜப்பானுடனான நெருங்கிய அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளால் இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கு ஜப்பான் பல உதவிகளை வழங்கியுள்ளது. இதனை ஒருபோதும் மறக்கமாட்டோம்.”

இவ்வாறு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவருடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மையில் எடுக்கப்பட்ட சில அரசியல் தீர்மானங்களால் ஜப்பானும், இலங்கையும் கையொப்பமிட்ட முக்கியத்துவமிக்க அபிவிருத்தித் திட்டங்கள் இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் அமைச்சர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜப்பான் அரசாங்கத்தின் கடனுதவியுடன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் தாமதமாகி வருவது தொடர்பில் தூதுவரின் கவனத்திற்குக் கொண்டு சென்ற அமைச்சர், விசேட அறிக்கையொன்றையும் கையளித்தார்.

அதேவேளை, திருகோணமலை துறைமுகத்திற்கு அருகாமையில் புதிய கைத்தொழில் பூங்காவிற்காக ஏற்கனவே காணி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், ஜப்பானிய முதலீட்டாளர்களை இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிக்குமாறும் அமைச்சர் ஜப்பானிய தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# 600 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன். 26

630 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலைக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் நேற்று முன் தினம் இரவு இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

53 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபருக்கு நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# வவுனியா பறனட்டகல் விபத்தில் மூவர் காயம்

வவுனியா, ஜூன். 26

வவுனியா பறனட்டகல் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி சென்ற ஜீப் ரக வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் வாகனச் சாரதி உட்பட மூவரே காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# யாழ்.பல்கலை ஊடகத்துறை தலைவர் ரகுராம் பேராசிரியராக பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன். 26

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி. ரகுராம் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக் கழகப் பேரவை நேற்று வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக



மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி சி. ரகுராமின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி. ரகுராம் ஊடகக் கற்கைகளில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (அ)

# எரிபொருள் நிலையத்தில் மோதல் வெள்ளவாயவில் நால்வர் படுகாயம்

கொழும்பு, ஜூன். 26

வெள்ளவாய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, நான்கு பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்கள் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபரொருவர் மொனராகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 21,600 லீற்றர் பெற்றோல்,33,400 லீற்றர் டீசல் பதுக்கிய 675 பேர் பொலிஸாரினால் கைது!

கொழும்பு, ஜூன். 26

எரிபொருளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த 675 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அத்துடன், எரிபொருளைப் பதுக்கி வைத்துள்ளவர்களை கைது செய்ய, நாடு தழுவிய ரீதியில் இதுவரை 670 சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதன்போது 21 ஆயிரத்து 600 லீற்றர் பெற்றோலும், 33 ஆயிரத்து 400 லீற்றர் டீசலும், 11 ஆயிரத்து 100 லீற்றர் மண்ணெண்ணெய்யும் மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

# சுகாதாரத்துறைக்கு எரிபொருள் கிடைக்காவிட்டால் வைத்தியசாலை சேவையை மக்கள் இழக்கநேரிடும்

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன். 26**

**சுகாதாரத்துறையினருக்கான எரிபொருள் விநியோகத்தின்போது குழப்பத்தை ஏற்படுத்த முனைவோர் மற்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கண்டிக்கின்றோம் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

துரதிஷ்டவசமான இந்நிலைமை நீடிக்குமானால் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் முடங்கும் நிலை ஏற்படுவதை யாராலும் தவிர்க்க முடியாது போகும். அப்போது வைத்தியசாலை சேவைகளை முற்றாக வடமாகாண மக்கள் இழக்கவேண்டி ஏற்படலாம். அதனால் காப்பாற்றக் கூடிய பல அப்பாவிகளின் உயிர்கள் மட்டுமல்லாது இன்று குழப்பம் விளைவிப்பவர்களின் உயிர்கள்கூட பலியாக நேரிடலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்-

உயிர் காக்கும் மிக அதி உயர் அத்தியாவசிய சேவையான சுகாதார சேவையில் பணியாற்றும் ஊழியர்கள் தமது கடமைகளை தொடர்ந்து மேற்கொண்டபடி எரிபொருளையும் தமது குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக அவர்கள் தமது கடமை நிலையங்களான வைத்தியசாலைகளுக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் ஏனைய பணிமனைகளுக்கும் கடமைக்கு வருவதற்கான தமது தனிப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருளைப் பெற முடியாது மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர்.

இதனால் படிப்படியாக சுகாதார சேவை முடங்கும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த நேரத்தில் சுகாதார அமைச்சு சுகாதார பணியாளர்களுக்காக விசேட ஏற்பாட்டின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு ஒழுங்குகளை செய்தது.

அதற்காக மாவட்டம் தோறும் தெரிவு செய்யப்பட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வெள்ளிக்கிழமைகளில் சுகாதாரப் பணியாளர்களுக்கு மட்டும் எரிபொருள்களை விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு ஒழுங்குகளை செய்திருந்தது.

நேற்று முன் தினம் முதல் தடவையாக இந்த ஒழுங்குக்கு அமைய சுகாதாரப் பணியாளர்களுக்கு எரிபொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, வாரத்தில் ஒரு நாள் மட்டும் சுகாதார பணியாளர்களுக்கு என தெரிவு செய்யப்பட்ட ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டும் இருந்து எரிபொருள் வழங்குவதற்காக செய்யப்பட்ட இந்த ஒழுங்கை பல இடங்களில் பொது நல நோக்கற்ற பொதுமக்களில் சிலர் தீவிரமாக எதிர்த்ததுடன் குழப்ப நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் பொலிஸாருக்கு மேலதிகமாக விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புடனேயே எரிபொருளை விநியோகிக்கக்கூடியதாக இருந்தமை மிகுந்த மன வருத்தத்துக்குரியது.

இவை அனைத்துக்கும் மேலாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதாரப் பணியாளர்களுக்கு என ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகத்தை ஒருங்கிணைப்பதற்காக அந்த மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ந.சரவணபவன் ஈடுபட்டிருந்தார். அப்போது சில பொதுமக்கள் அங்கு வரிசையில் காத்திருந்த தாதிய உத்தியோகத்தர்கள் சிலரை நகரவிடாமல் தடைகளை ஏற்படுத்தினர்.

வைத்திய கலாநிதி சரவணபவன் அவர்களிடம் சென்று தாதிய உத்தியோகத்தர்களை முன்னோக்கி நகர அனுமதிக்குமாறு கேட்டபோது அதற்கு மறுத்து அவருடன் வாக்குவாதப்பட்டவர்களுள் ஒருவரால் அவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வடமாகாணத்தின் சுகாதார பணியாளர்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நாகரிகமற்ற, மனிதாபிமானமற்ற, செயலை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். தாக்குதலுக்குள்ளான வைத்திய கலாநிதி சரவணபவன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின் தற்போது வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதலை மேற்கொண்ட நபரும் பொலிஸாரினால் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போர்க்காலத்தில் இன்றிலும் விட மிகக் குறைவாக எரிபொருள் இருந்த காலத்தில்கூட சுகாதாரத் துறையினருக்கான முன்னுரிமை எங்கும் மறுதலிக்கப்படவுமில்லை, எதிர்க்கப்படவுமில்லை என்பதையும் நாம் மறக்க முடியாது.

துரதிஷ்டவசமான இந்நிலைமை நீடிக்குமானால் வடமாகாண சுகாதார சேவைகள் முடங்கும் நிலை ஏற்படுவதை யாராலும் தவிர்க்க முடியாது போகும். அப்போது வைத்தியசாலை சேவைகளை முற்றாக வடமாகாண மக்கள் இழக்க வேண்டி ஏற்படலாம். அதனால் காப்பாற்றக்கூடிய பல அப்பாவிகளின் உயிர்கள் மட்டுமல்லாது இன்று குழப்பம் விளைவிப்பவர்களின் உயிர்கள் கூட பலியாக நேரிடலாம்.

களத்தில் பணியாற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குடும்ப நல உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய சகல சுகாதார பணியாளர்களும் கடமைகளுக்கு வருவதை தவிர்த்து எரிபொருள் வரிசைகளில் காத்திருக்கும்போது டெங்கு மரணங்கள், தாய்-சேய் மரணங்கள் என்பவை பன்மடங்கு அதிகரிப்பதை தவிர்க்க முடியாது போகும்.

சுகாதாரத்துறை மக்கள் அனைவரதும் உயிர்காக்கும் அத்தியாவசிய சேவை என்பதை புரிந்துகொண்டு எதிர்காலத்திலாவது சுகாதாரப் பணியாளர்கள் தடையின்றியும் தாமதமின்றியும் வேலைக்கு வருவதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் முன்னுரிமைச் சேவைகளுக்கு இடையூறு செய்யாது பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் இவற்றுக்கு எதிராக குழப்பங்களை ஏற்படுத்துகின்ற சமூக விரோத சக்திகளுக்கு எதிராக பொது மக்கள் குரல் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

# சுகாதார பணிப்பாளர் மீதான தாக்குதல் மிகமோசமான சமூகப்பிறழ்வுச் செயல்!

## சிறிதரன் எம்.பி. கடும் கண்டனம்

*கிளிநொச்சி, ஜூன். 26*

எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த, கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ந.சரவணபவன் மீது நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வன்மையான கண்டனத்துக்குரியது. அத்தியாவசிய சேவைகளுள் முதன்மையானதாக உள்ள சுகாதாரத்துறையின் பதவிநிலை உத்தியோகத்தரும், வைத்தியருமான அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுமளவுக்கு காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டுள்ளமை இந்த மாவட்டத்தின் மிகமோசமான சமூகப்பிறழ்வுச் செயலாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஒட்டுமொத்த அரச சேவைத்துறையினரது பாதுகாப்பையும் கேள்விக்குட்படுத்தி, அவர்களிடையே அச்ச நிலையைத் தோற்றுவித்த இச் சம்பவத்துக்கு எதிராக எனது கண்டனங்களைப் பதிவுசெய்வதொடு, இதுவிடயமாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

முழு நாடும் எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும் எரிபொருள் விநியோகம், ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நீண்டதோர் வரிசையுகத்தை தோற்றுவித்திருக்கிறது.

இரவு, பகல், மழை, வெயில் பாராது அன்றாடத் தேவைக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் நிற்கும் அரச உத்தியோகத்தர்கள் அதிலும் குறிப்பாக பெண் உத்தியோகத்தர்கள் மீது அவதூறான வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டு, அவர்கள் ஆகப்பெரும் மன அழுத்தங்களோடு எரிபொருளைப் பெறாமல் அழுதபடியே வீடு திரும்பிய பல சம்பவங்கள் கடந்த ஓரிரு நாட்களில் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றுள்ளன.

எரிபொருள் என்பது அனைத்துத் துறைசார் தரப்பினருக்கும் அடிப்படைத் தேவையாக உள்ள இன்றைய காலச் சூழலில், தமது அன்றாடக் கடமைகளுக்கு அப்பால் நாளும், பொழுதுமாய் எரிபொருளுக்குக் காத்திருப்போர் கோபம், விரக்தி உள்ளிட்ட பல்வேறுவிதமான மனோநிலைகளோடு இருந்தாலும், அதே உணர்வுகளோடும், எதிர்பார்ப்போடும் காத்திருக்கும் சக மனிதர்களிடம், பொதுவெளியில் பிரயோகிக்கத்தகாத வார்த்தைகளாக அந்த மனோநிலையை வெளிப்படுத்துவது அவர்களை கடுமையாகப் பாதிக்கும் என்பதையும், அத்தகையை முரண் கருத்துக்கள் சமூக மற்றும் குழு வன்முறைகளுக்கு வழிகோலக்கூடும் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் உணரத்தலைப்படவேண்டும்.

துறைசார் வேறுபாடுகளற்று எல்லோரும் எரிபொருளுக்காக காத்திருக்க வேண்டியுள்ளபோதும், அவரவர் பணிகளின் அவசியம் கருதி சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய வேண்டிய சமூகக் கடப்பாடு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உண்டு. குறிப்பாக உயிர் காக்கும் சேவையாளர்களான மருத்துவர்களும், தாதியர்களும் கூட நீண்டிருக்கும் வரிசைகளில் நின்று எரிபொருளைப் பெறுவது இந்த நாட்டின் ஆகப் பெரும் அவல நிலையின் வெளிப்பாடே!

எரிபொருளுக்கான தேவைப்பாடுகள் எல்லோருக்கும் உள்ளது என்பதை உணர்ந்தவர்களாக, சமூகப் பொறுப்போடும், மனிதாபிமானத்தோடும், எமது பண்பாட்டையும் அதன்வழியான சமூகக் கடப்பாடுகளையும், வார்த்தை வரைமுறைகளையும் மீறாதவர்களாக, இந்த சமூகப் பேரிடரை எதிர்கொள்ளும் வல்லமையை எல்லோருமாக இணைந்து ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# அமெரிக்க ஜனாதிபதியுடன் இலங்கை தூதுவர் சந்திப்பு!



*நியூயோர்க், ஜூன். 26*

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பில், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு, அமெரிக்காவால் வழங்கப்படக்கூடிய பங்களிப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

Eelanadu ஈழநாடு
26.06.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க தூதரகத்தின் கவனத்திற்கு?

இலங்கையை மீட்கும் முயற்சிகளுக்கு உதவுவது தொடர்பில் அமெரிக்கா ஆராய்வதாக தெரிகின்றது. இதனடிப்படையில் கடந்த இரண்டு வாரங்களில், சிறு மற்றும் நடுத்தர வியாபார முயற்சிகளுக்கான உதவியாக 120 மில்லியன் டொலர்களையும், பாலுற்பத்தி தொழிற்துறை மேம்பாட்டிற்காக 21 மில்லியன்களையும், 5.75 மில்லியன்களை மனிதாபிமான உதவிக்கானதாகவும் அமெரிக்கா அறிவித்திருக்கின்றது. இதனைத் தொடர்ந்து, நிலைமைகளை ஆராயும் நோக்கில், அமெரிக்க உயர்மட்ட குழுவினர் இலங்கை வரவுள்ளனர்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து பேசுபொருளான மனித உரிமைகள் நிலவரம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இப்போதும் அது கேள்விக்குறியுடனேயே நகர்கின்றனது. கடந்த பதின்மூன்று வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட சர்வதேச அழுதங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் வெறுப்படைந்திருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி விடயத்தில் சிறு தூரத்தைக்கூட இலங்கையின் ஆட்சியாளர்கள் இதுவரையில் கடக்கவில்லை. இந்த அடிப்படையில் நோக்கினால், இலங்கையின்மீது இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட மேற்குலக அழுத்தங்கள் வெற்றியளிக்கவில்லை.

இதனை பிறிதொரு வகையில் கூறுவதானால், அமெரிக்காவின் உலகளாவிய மனித உரிமைசார்ந்த அழுத்தங்களின் பின்புலத்தில், இலங்கையின் மீதான அழுத்தங்கள் தோல்வியடைந்திருக்கின்றன. யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, பொறுப்பு கூறலை வலியுறுத்தி 2012இல் முதலாவது பிரேரணையை அமெரிக்கா முன்கொண்டுவந்தது. அன்றைய சூழலில் அது, அமெரிக்க பிரேரணையென்றே பரவலாக அழைக்கப்பட்டது. அமெரிக்க தலையீட்டின் மூலமாகவே, இலங்கையின் மோசமான மனித உரிமை மீறல் விவகாரம் சர்வதேசத்தின் கவனத்தை பெற்றது. ஆனால், பிரேரணைகள் தொடர்ந்தனவே தவிர, பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான கோரிக்கைகளுக்கு எவ்வித வெற்றியும் இதுவரையில் கிட்டவில்லை.

இவ்வாறானதொரு சூழலில்தான், நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது. இதற்கு, அமெரிக்கா உதவி செய்வது தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கும் அமெரிக்க முயற்சி நிச்சயம் வரவேற்கப்படவேண்டியதுதான்.

ஆனால், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதுடன் மட்டும் விடயங்கள் முடிந்துவிடப்போவதில்லையென்பதை அமெரிக்க அதிகாரிகள் உணரவேண்டும். தமிழ் மக்களுக்கான நீதி, பொருளாதார நெருக்கடிக்கு அப்பாற்பட்டது. அமெரிக்காவின் உதவிகளுக்காக காத்திருக்கும்போதே இலங்கையின் ஆட்சியாளர்கள், சீனாவின் ‘ஒரு சீனா’ கொள்கையை ஆதரிப்பதாகவும், ஐக்கிய நாடுகள் சபை சீனாவின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடாதென்றும், அண்மையில் ஐ.நாவில் வலியுறுத்தியிருந்தனர். ஆனால் மறுபுறுமோ, தாய்வான் விடயத்தில் சீனாவின் ‘ஒரு சீனா’ கொள்கையை அமெரிக்கா கடுமையாக எதிர்த்துவருகின்றது. தாய்வானின் சுயாதீனத்தை அமெரிக்கா அங்கரித்திருக்கின்றது. ஆனால், அமெரிக்காவின் டொலர்களுக்காக காத்திருக்கும் நிலையிலிருக்கின்றபோதே, மறுபுறம் அமெரிக்காவின் மூலோபாய நிலைப்பாட்டை வெளிப்படையாகவே கொழும்பு எதிர்கின்றது. இது, கோட்டாபயவின் நடுநிலை வெளிவிவகாரக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பாடான விடயமாகும். ‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பதுபோல், கொழும்பின் சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறு பாம்புக்கு வாலையும் மீனுக்கு தலையையும் காட்டும் அரா மீன் போன்றவர்கள் என்பதையே, அவர்களது மேற்படி நடவடிக்கை தெளிவாக எடுத்தியம்புகின்றது. பொருளாதார உதவிகளைக்கூட சரியாக பயன்படுத்துவார்களாக என்பதற்கும் எவ்வித உத்தரவாதமும் இல்லை.

அமெரிக்க மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை சரியாக சென்றடையுமா என்பதிலும் சந்தேகங்கள் உண்டு. தமிழ் மக்கள் கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள். சிங்கள மக்கள் இப்போது அனுபவிப்பதை, தமிழ் மக்கள் ஏற்கனவே முப்பது வருடங்களாக அனுபவித்தவர்கள். ஆனால், யுத்தத்திற்கு பின்னரான சூழலில், தமிழ் மக்களின் பொருளாதார மீட்சிக்காக அமெரிக்கா உட்பட, மேற்குலக நாடுகள் பாரிய மனிதாபிமான உதவிகளை வழங்கியதாக சான்றில்லை. இப்போதும், அமெரிக்க உதவி நிறுவனம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாரியளவான நன்கொடைகள், கொழும்புமைய அரசுசாரா நிறுவனங்களையே சேர்கின்றன. சிங்கள பகுதிகளே முக்கியத்துவப் படுத்தப்படுகின்றன. இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் சிந்திக்கும்போது, அமெரிக்க தூதரகம் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பிலும் கவனம்செலுத்த முன்வரவேண்டும்.

**வாரசாரம் - *அரசியல் நிருபர்***

# மீண்டும் சரத் வீரசேகர?



*கண்ணில் தெரிகின்ற பெற்றோல் ‘கியூ’ காட்சிகள் கற்பனைக்கெட்டாதவை. சுதந்திர இலங்கை என்றுமே கண்டிராத நெருக்கடி நிலை என்று பிரகடனமாகின்றபோது, அதனை பரவலாக எளிதில் உணர்த்துகின்ற காட்சி இந்த பெற்றோல் கியூ. மருத்துவ நிலைமைகளை மதிப்பிட்டு, இலங்கை முழு அளவிலான மனிதாபிமான அவசர நிலையை எதிர்கொண்டுள்ளதாக ஐ. நா. மனிதாபிமான ஒருங்கிணைப்பு அலுவலகம் எச்சரிக்கிறது.*

*கோட்டாபய ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட இந்த நிலைமைக்கு கோட்டாபய அரசுமீது நேரடியாக குற்றஞ் சுமத்தினாலும், இதற்கு முன்னரான அரசுகளும் இக் குற்றப் பொறுப்பில் பங்கேற்கவேண்டியவை என்பதும் பொதுவாக உணரப்படுகிறது. அத்துடன், ஆட்சிக்கு வந்த அரசுகள் இந் நாட்டின் இனத்தவரான தமிழர்களின் விவகாரங்களில் கடைபிடித்த இனவாத நடவடிக்கைகளும் உருவாக்கப்பட்டு, தீர்க்கப்படாத இனப் பிரச்னையும், இப்போது எதிர்கொள்ளும் இந் நெருக்கடிக்கான அடிப்படைக் காரணி என்ற ஒன்றும் முக்கியமாக கூடவே உணரப்படுகிறது.*

*ஆனால், அடிப்படையானதாக உணரப்படும் இந்த இனப் பிரச்னை தொடர்பான காரணி, இந்த வேளையில் எந்த அளவில், யாரால் அக்கறையோடு, கரிசனையில் கொள்ளப்படுகிறது?*

*காலிமுக திடலின் ‘கோட்டா கோ கம’ வில்கூட இது உண்மையிலேயே விசுவாசமாக உணரப்படுகிறதா? அங்கு பேசப்படும் ‘முறைமை மாற்றம்’ இந்த விதமாகத்தான் அமைகிறதா?*

*இப்படி இந்த விவகாரம், நாடு நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வழிதேடும் அபாய நிலையிலும், கேள்விக் குறியுடன் மாத்திரமல்ல, ஆச்சரியக் குறியுடனும் வெளிப்படுகிறது. குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்ட புத்தர் சிலை பிரதிஷ்டை நடவடிக்கை இதன் பரிமாணத்தை நன்கு தெளிவுபடுத்துகிறது. தமிழ் மக்கள் காண்பித்த எதிர்ப்பால் கடைசி நிமிடத்தில் கைவிடப்பட்ட இந் நடவடிக்கை, நீதிமன்றத்தையும் அலட்சியப்படுத்தும் இராணுவ நடவடிக்கையாகவும் மேற்கொள்ளப்பட்ட ஓர் அரசு நடவடிக்கை. தொல்லியல் திணைக்களம் இதில் சம்பந்தப் படவில்லை என்று அதனுடன் தொடர்புடையவர்கள் தெரிவிக்கையில், பௌத்த பிக்குகளுடன் இராணுவத்தினரும் இணைந்திருந்த இந் நடவடிக்கைக்கு ஜனாதிபதி பொறுப்பானவர்.*

*அண்மைக்காலங்களில் இத்தகைய விவகாரங்களில் சற்று குரல்காட்டாதிருந்த கோட்டாபய அரசின் முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பாராளுமன்றத்தில் மீண்டும் தன் குரலை உயர்த்தியிருக்கிறார். சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு என்று, தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு எச்சரிகை விடுக்கும் ஒரு தோரணையில், குருந்தூர் மலையின் இவ் விவகாரம் தொடர்பில் அவர் அங்கு பேசியிருக்கிறார். எனினும் பின்னர், கூட்டமைப்பு எம். பி., த. சித்தார்த்தன் சரத் வீரசேகரவுக்கு அங்கு பதிலளித்திருக்கிறார். இந்த விவகாரம் தொடர்பில் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் ஆற்றிய தெளிவான அந்த உரை, மிக காத்திரமானது. தமிழர் பிரதேசங்களில் காணப்படும் பௌத்த மத தொல்லியல் சின்னங்கள் பற்றி மட்டுமல்லாது, அநுராதபுரம். பொலநறுவை போன்ற இடங்களில் காணப்படும் இந்துமத தொல்லியல் சின்னங்களையும் சுட்டிக்காட்டி, தொல்லியல் சின்னங்களின் பேணல் முறைமையை தெளிவுபடுத்திய அவர், இலங்கையில் இவ் விடயத்தில் அரசுகளின் நோக்கத்தையும், அது ஏற்படுத்தும் - ஏற்படுத்திய விளைவுகளையும் சுட்டிக்காட்டி, நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைக்கு இதுவே காரணம் என்பதனையும் வலியுறுத்தியுள்ளார்.*


*இதேவேளை, யாழ்ப்பாணம் இந்திய கலாசார மண்டபத்தில் இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்த வட மாகாண ஆளுநர் அந்த நிகழ்வுக்கு செல்லவில்லை. அவரை எதிர்பார்த்து, நிகழ்ச்சியை ஆரம்பிக்காது அரைமணிநேரம் காத்திருந்ததாகவும் சொல்லப்படுகையில், யாழ்ப்பாண மாநகர முதல்வரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டதால் ஆளுநர் அதில் கலந்துகொள்ளவில்லை என்றும் சொல்லப்படுகிறது.*

*ஆரியகுளம் புனரமைப்புடன் ஆளுநருக்கும் மாநகர முதல்வருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் பொதுவாக அறியப்பட்டவை. ஆரியகுளம் அருகே அமைந்த நாக விகாரையுடன் இந்த முரண்பாடு தொடர்பு படுத்தப்பட்டிருந்தது. ‘கொழும்பு ரெலி கிராப்’ இணைய பத்திரிகையில் ‘கரிகாலனி’ன் கட்டுரையொன்றும் இதுதொடர்பில் வெளியாகியிருக்கிறது.*

*ஆக, யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநரால் பௌத்த மத சார்புடனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அதன் அர்த்தம் என்ன?*

*உள்நாட்டில் அபிப்பிராயங்கள் எப்படி இருந்தாலும், இன்றைய நெருக்கடியில் இலங்கைக்கு உதவிக்கொண்டிருக்கும் நாடுகள் - அமைப்புக்கள், கோட்டாபய அரசை ‘வீழ்த்த’ நிச்சயம் நினைக்கவில்லை. அந்த தெளிவான புரிதலில் தலைநிமிரும் ஜனாதிபதியும் சகாக்களும், சிங்கள மக்களிடம் இழந்துவிட்ட தமது செல்வாக்கை இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் நிலைநாட்டிவிட, பௌத்த மத வாதத்தை மீண்டும் கையி லெடுக்க முனைவதை இச் செயல்பாடுகள் காண்பிக்கின்றனவா?*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -35

# உணவு பற்றிய உணர்வுப் பகிர்வு

கணபதி சர்வானந்தா

இவ்வாரம் பகிரப் பலவுண்டு. இருப்பினும் முக்கியமானது எனக் கருதப்படும் உணவு பற்றிய விடயங்களை பகிரலாம் என்றிருக்கிறேன். உணவுப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, விலையேற்றம் என்பன பற்றிப் பேசப் பலவுண்டு. பகிரப் பலவுண்டு. உடலை உயிரோடு வைத்திருக்க உணவு வேண்டும். அவ் உணவுக்கே தட்டுப்பாடு வரலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்ற தற்காலச் சூழ்நிலையில் எமது சிந்தனை எவ்வாறு விரிவடைய வேண்டும் என்று பேசுவதே சாலச் சிறந்தது.

உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் போது அவைக்கான கேள்விகள் குறைய வேண்டும். மாறாகக் கேள்விகளும் அதிகரித்துக் கொண்டு போவது மட்டுமல்லாது அவை சமூகத்தின் அமைதியைக் குறைப்பதாகவும் சமூகத்துக்குப் பங்கம் விளைவிப்பதாகவுமே காணப்படுகின்றன. இது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். ஆனால் நாம் சிந்திப்பது போதாது என்று சொல்லவருகிறேன்.

இன்றும், இன்னும் தெற்கிலங்கையில் இருந்து வரும் எரிபொருள் தாங்கிகளுக்காக... அதிலிருந்து கிடைக்கும் சில துளிகளுக்காக... பல மணி நேரக் காத்திருப்பு? அது பற்றிய ஒரு சம்பவம்.

எரிபொருளுக்காகக் காத்திருந்த ஒருவர் அதனைப் பெறுவதற்காகத் தனது மோட்டார் கார் சகிதம் வரிசையில் நின்றிருந்தார். நிரப்ப வேண்டிய இயந்திரத்தை அவர் நெருங்கியபோது ஏற்கனவே அவர் வைத்திருந்த மூன்று லீற்றர் எரிபொருளைச் செலவு செய்திருந்தார். ஈற்றில் அங்கு அவருக்கு ரூபா.500 பெறுமதியான எரிபொருளே கிடைத்தது. வேறு வழியின்றி புலம்பலோடு அதனைப் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார். இந்தக் கதையினூடாக நுகர்வு தொடர்பாகப் பல விடயங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொள்கிறோமா, இல்லையா? என்பது வேறு கதை.

தற்போது நாம் காணும் இந்த நிலைமைகள் தற்காலிகமானது எனக் கருதுவோரை நோக்கி நான் கேட்பது என்ன வென்றால்.. தற்காலிகமானதுதான் என்று வைத்துக் கொள்வோம். அந்தத் தற்காலிக நிகழ்வைக் கடந்து செல்லத் தற்காலிக மாற்றீடு ஒன்றைப் பற்றி நாம் சிந்தித்திருக்க வேண்டும். சிந்தித்திருக்கிறோமா? சிந்தித்தாக இல்லையே!

இருந்தும் ஒரு சிலர் சில மாற்றங்களைத் தாம் செய்திருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். ஒரு புதிய சமூக மாற்றத்தைக் கொண்டுவர ஒரு சிலரின் பங்களிபென்பது போதாது, பலரது பங்களிப்புடனே அது சாத்தியமாகலாம். ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வர இது ஒரு நல்ல சந்தர்பம் என்று எண்ணுகிறேன். இதனை ஒரு வாய்ப்பாகக் கருதி புதிய பொறிமுறை ஒன்றை வகுத்து அதனூடாகப் பயணித்தோமானால் எதிர் காலம் சுபீட்ச முள்ளதாக அமைய நிறைய வாய்ப்புண்டு.

இதுவரை தமிழர் அரசியல் பற்றிச் சிந்தித்து வந்த தமிழ் கட்சி ஒன்று தற்காலச் சூழ்நிழலைக் கேற்றவாறு ஒரு சமூக மாற்றம் நிகழ வேண்டும் என்ற வகையில் சில வேலைத்திட்டங்களை முன்வைத்து நகர்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. “என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்! ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?” என்ற சினமா வரிகளைத் தாங்கிய கைத் துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு அக் கட்சித் தொண்டர்கள் யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் உணவு பயிரிடுவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர். அவர்கள் விநியோகித்த அப் பிரசுரத்தில் காணப்பட்ட விடயங்கள் பின்வருமாறு...

பாலும் தயிரும் பனாட்டும் ஒடியலும் மரவள்ளியும் முருங்கையும் அவர் தம் வாழ்வில் நிறைவைக் கொடுத்தன. அவர்கள் அஞ்சியதுமில்லை. கெஞ்சியதுமில்லை.

அன்றொரு நாள் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர் எமது மண்ணில் அடி பதித்த வேளையில், முடியோடும் கொடியோடும் நாம் நிமிர்ந்திருந்தோம்.

காலம் மாறியது.எங்கள் சுதந்திரத்துக்குக் கைவிலங்கு போடப்பட்டது.வயலுக்கும் கடலுக்கும் கொடுத்த மேன்மை, அரச பதவிகளுக்குத் தாவியது. உடைகளில் வந்த மாற்றங்கள் போலவே உணவுப் பழங்கங்களும் மாறத் தொடங்கின. எமது பாராம்பரிய வாழ்க்கை பலவீனப்பட்டது.

இயற்கை அரவணைப்பில் கிடைத்து வந்த ஆரோக்கியம் தூரத்துக் கனவாகத் தொலைந்து போனது... இந்த அவல நிலையில் எத்தனை சோதனைகள்! எழுதிட முடியாத வேதனைகள்!!

நேற்றுவரை, தலைநகர் கொழும்பில் ஆதிக்கவாசிகள் அவசரமாய் தீட்டிய சாதிக்க முடியாத சாகசத் திட்டங்கள்... யதார்த்தம் புரியாத மேதாவிச் சிந்தனைகள்.... இப்பொழுது ஒரேயடியாக இலங்கைத் தீவையே குப்புறப் புரட்டிப் போட்டுள்ளன.

ஒய்யாரக் கொண்டையாம்,தாழம்பூவாம்! உள்ளே இருப்பது ஈரும் பேனுமாம்” இன்று இலங்கையைப் பார்த்து உலகம் இரகசியமாய்ச் சிரிக்கிறது.

அயல்நாடு பிச்சைபோடாமல் விட்டிருந்தால் எல்லோரின் ஆட்டமும் எப்போதோ முடிந்திருக்கும்.

ஆட்சியாளர்கள் எதையும் செய்யட்டும். அல்லல்படுபவர்கள் நாங்கள். அடுத்து என்ன செய்யப் போகிறோம்?

எமது மண்ணில் ஒரு ஒரு சதுர அடி நிலம் கூட இனிமேல் தரிசாக இருக்கக் கூடாது என்ற கோஷத்தோடு வீட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கான செயற்திட்டங்களை தமிழ் தேசியக் கட்சி தற்போது முன்வைக்கத் தொடங்கியிருக்கிறது. அக் கட்சி தனது தொண்டர்கள் சகிதம் பசுமைப் புரட்சி ஒன்றிற்குத் தயாராகுமாறு மக்களை நோக்கி வேண்டுகோளை விடுத்துள்ளது. அதன் முதற் கட்டமாக வீட்டுத் தோட்டங்களை உடடினயாக ஆரம்பிப்பதற்காக மரவள்ளிக் கிழங்குத் தடிகளை அவர்கள் இலவசமாகக் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அவர்கள் போல அனைத்துத் தரப்பினரும் தத்தம் மட்டத்தில் தமது வசதிக் கேற்ப செயற்திட்டங்களை முன்வைக்க வேண்டிய கட்டாயத்துக்குள் இருக்கிறோம்.ஒரு விதையை விதைக்கச் சிறு மணித் துளிகளே போதும், தற்காலிக சொகுசைத் தரவல்ல எரிபொருளுக்காகப் பல மணி நேரம் காத்திருப்பதை விட...!!!

# இந்தவார ராசிபலன் 26.06.2022 - 02.07.2022

ஜுன் 26 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 12

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : திரையோதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

செலவுகள் அதிகரிக்கும். செயல்களில் வேகமும் லாபமும் உண்டாகும்.உங்களுடைய எண்ணங்கள் எளிதாக நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். தள்ளி வைத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். புதிய நட்புகளிடம் அதிகமான நெருக்கம் வேண்டாம். யோகமான வாரம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

செலவுகள் அதிகரிக்கும். செயல்களில் சிரமம் இருக்கும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். அதன்பின் உங்களுடைய எண்ணங்கள் நிறைவேறும். பொறுப்புகள் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகள் குறித்து திட்டமிடுவீர்கள். உங்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாரம் இது. குடும்பத்திற்காக சுபச்செலவுகள் ஏற்படும் என்றாலும் அதற்கேற்ற வரவுகளும் ஏற்படும். திட்டமிட்டு செயல்பட அனைத்திலும் வெற்றி காண்பீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வருமானம் அதிகரிக்கும். நினைத்ததை அடைவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். மனம் மகிழும்படியான நிலை உண்டாகும்.நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். புதிய முயற்சிகள் நிறைவேறும். உங்கள் முயற்சிகள் நன்மையளிக்கும். நெருக்கடிகள் விலகும். அந்நிய மனிதர்கள் உங்களுக்கு அனைத்து வகையிலும் உதவி புரிவார்கள். யோகமான வாரம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

செல்வாக்கு உயரும். தொழில், உத்தியோகத்தில் ஆதாயமான நிலை உருவாகும். பணவரவு அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். குடும்பத்தினரின் நலனில் அக்கறை கொண்டு செயல்படுவீர்கள்.நீங்கள் ஈடுபடும் செயல்களில் சாதகமான நிலை ஏற்படும். உங்களின் வாதத்திறமையால் செல்வாக்கு உயரும். சுபச்செலவு உண்டாகும்.வேலை தேடி வந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நினைத்ததை சாதிக்கும் வாரமாகும். உங்கள் முயற்சிகளில் நீங்கள் மேற்கொள்ளும் அளவிற்கு நன்மைகளை அடைவீர்கள். தொழிலில் இருந்த தடை விலகும். அரசு வழியில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். அரசு வகையில் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். சூரியனைக் கண்ட பனிபோல் சங்கடங்கள் விலகும். உறவுகள் மத்தியில் செல்வாக்கு உயரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் உங்கள் செயல்களில் சங்கடமும் நெருக்கடியும் இருக்கும். அதன்பின் திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். சிலருக்கு திருமணம், புதிய வீட்டுக்கு குடி போகுதல் என்ற எண்ணங்கள் நிறைவேறும். யோகமான வாரம். முயற்சிகள் இழுபறியாகும். அலைச்சல் அதிகரிக்கும். மனதில் சிரமம் தோன்றும். வருமானம் அதிகரிக்கும். பொன் பொருள் சேரும்.நிதானம் அவசியம். புதிய முயற்சி வேண்டாம். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சிகளில் வெற்றி உண்டாகும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். எதிர்பாராத நெருக்கடி வரலாம். ஆதாயம் அடைவீர்கள். எண்ணம் நிறைவேறும். நட்புகளால் மகிழ்வீர்கள். முயற்சிக்கேற்ப ஆதாயம் உண்டாகும். உத்தியோகம், தொழில் சுமாராக செல்லும். விருப்பங்கள் நிறைவேறும். நிதானத்துடன் யோசித்து செயல்படுவது நல்லது. எதிர்பார்த்த வருவாய் வரும். சிரமங்கள் விலகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். சுபச்செலவுகள் ஏற்படும். வீடு மனை வாங்குவீர்கள். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வருவாய் திருப்தி தரும். திருமண வயதினருக்கு நல்ல வரன் தேடி வரும். வேலை வாய்ப்புக்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. திட்டமிட்டிருந்த செயல்களில் அனுகூலம் ஆதாயம் உண்டாகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். மனக்குழப்பம் விலகி தெளிவடைவீர்கள். சிலருக்கு இட, பணிமாற்றம் ஏற்படும். தொழிலில் லாபம் காண்பீர்கள். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மற்றவர் மீது நம்பிக்கை இல்லாமல் உங்கள் செயல்களில் நீங்களே நேரடியாக ஈடுபடுவீர்கள். குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த வருமானம் வரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

முயற்சிகள் இழுபறியாகவே இருக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள். விரும்பியதை அடைவீர்கள். எதிரி தொல்லை விலகும். அலைச்சல் அதிகரிக்கும். முயற்சி தாமதமாகும். உத்தியோகம், தொழிலில் எதிர்பார்த்த நன்மைகளை அடைய முடியாமல் போகும். குடும்பத்தில் இருந்த சங்கடம் விலகும். நீண்ட நாள் எண்ணங்களைப் போராடி நிறைவேற்றிக் கொள்வீர்கள். விலகிச் சென்ற உறவுகள் தேடி வருவார்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

முயற்சிகள் எளிதாக நிறைவேறும். விருப்பம் நிறைவேறும். பொறுப்பு அதிகரிக்கும் உங்களை வெறுத்தவர்களும் பாராட்டுவார்கள். நினைத்ததை சாதிப்பீர்கள். மனம் மகிழும்படியான சம்பவம் நடந்தேறும். பூர்வீக சொத்துகள் குறித்த உங்கள் முயற்சி கைகொடுக்கும். ஆதாயம் காண்பீர்கள். நீண்டநாள் எண்ணம் நிறைவேறத் தொடங்கும். திருமண வயதினருக்கு நல்ல வரனும், வேலைக்காக காத்திருப்பவருக்கு நல்ல வேலையும் அமையும்.


### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

செலவு அதிகரிக்கும் பணம், பொருள்களைக் கையாள்வதில் கவனம் தேவை. உங்கள் செயல்களில் லாப நிலை இருக்கும். நிதி நிலை உயரும்.எண்ணம் நிறைவேறும். பேச்சில் கவனம் தேவை. இல்லையெனில் சங்கடம் வரலாம். உங்களுடைய அணுகுமுறை மாறும். லாப நிலை உண்டாகும். குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கணவன் மனைவிக்குள் இருந்த பிரச்னை விலகும். நண்பர்களின் உதவியுடன் வெற்றி காண்பீர்கள்.

# அ. இ. அ. தி. மு. க. பிளவை தடுக்கும் முயற்சியில் பா. ஜ. க.?

## சமூக - அரசியல் கொள்கைகள் என்பதெல்லாம் வெறும் வாய்ச்சொல்தான்!



கடந்த ஞாயிறன்று நடந்த நம் சந்திப்பிற்குப் பிறகு ஒன்றும் பெரிதாக நடக்கவில்லை. உங்களிடம் நான் சுவாரஸ்யமாகப் பகிர்ந்துகொள்ள, ஓரிரு சிறிய நிகழ்வுகள் கொஞ்சம் சலசலப்பை ஏற்படுத்தின. ஊடகங்களை ஊக்கப்படுத்துவதற்கு. எம் ஜி ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் வளர்க்கப்பட்ட அ இ அ தி மு க, அம்மாவின்மறைவுக்குப் பிறகு புயல் காற்றில் அல்லாடும் காற்றாடிபோல் தோன்றும் அடுத்த அத்தியாயம் நான் முன்பே கூறியபடி, தொடங்கியது.

கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் முதலமைச்சருமான 'ஓபிஎஸ்' என்றழைக்கப்படும் ஓ. பன்னீர் செல்வம், தன்னுடைய எதிரியாக தி மு க-வின் ஸ்டாலினுக்குப் பதிலாக, தன் கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் முதலமைச்சருமான, 'ஈ பி எஸ்' என்றழைக்கப்படும் எடப்பாடி பழனிச்சாமியைத்தான் பார்க்கிறார். ஈ பி எஸ்ஸும் அப்படித்தான். ஓ பி எஸ்-ஐ எப்படியாவது அ இ அ தி மு க-விலிருந்து துரத்திவிட்டுக் கட்சியைத் தன்னுடைய முழு அதிகாரத்துக்குள் கொண்டுவர முயற்சிகளைக் கடந்த ஐந்து ஆண்டுகளாகவே நடத்தி வருகிறார்.

2016 டிசம்பர் 5 அன்று ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு, தனது 'அக்கா'விடம் மிகப்பெரிய செல்வாக்கால் சின்னம்மா என்று அழைக்கப்பட்டு, அவருடனே வாழ்ந்து வந்து, கட்சி பிரமுகர்களிடம் மட்டுமன்றி, அரசு இயந்திரத்திலும் தனது கட்டுப்பாட்டைச் செலுத்திவந்த, அவரது தோழி சசிகலா, ஓ பி எஸ்-ஐ முதல்வராக்கினார். தனது முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்தவரானதால் தனக்கு விசுவாசமான அடிமையாக இருப்பார் என்று சசிகலா கருதினார். நீதிமன்றத் தீர்ப்புகளால் சில மாதங்கள் பதவி விலகவேண்டியிருந்த நிலையில், ஜெயலலிதாவே கூட, ஒரு முறை இல்லை, இரு முறை இவரை முதல்வராக நியமித்திருந்தார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. அந்தக் காலகட்டத்தில், அம்மாவுக்கும் சின்னம்மாவுக்கும் மிகவும் விசுவாசமாகவே அவரும் இருந்தார். எனவே, அக்காவின் இறப்பிற்குப் பிறகு, தான் ஆட்டிவைக்கும் படியெல்லாம் ஆடக்கூடிய ஒரு பொம்மையாக இருப்பார் என்ற எண்ணத்தில், இயல்பாகவே சின்னம்மாவும் இவரைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லை.

ஆனால், சின்னம்மா மட்டுமல்லாது அவரது உறவினர்களாலும்கூட ஒரு கைப்பாவையாகவே தான் நடத்தப்பட்டு, அவர்கள் காட்டிய இடத்திலெல்லாம் கையெழுத்திடவேண்டிய நிலை ஏற்பட்டதையடுத்து, அவரும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தத் தொடங்கினார். மரினா கடற்கரையில், ஜெயலலிதாவின் சமாதியில் அவர் தொடங்கிய 'தர்மயுத்தம்' மக்கள் மத்தியில் அவருக்குப் பெரும் அனுதாபத்தை ஏற்படுத்தியதுடன் மட்டுமல்லாமல், மத்தியில் ஆளும் பாஜக தலைமையின் ஆதரவையும் பெற்றுத் தந்தது. அந்த ஆதரவைப் பயன்படுத்தி, தனது அரசியல் அனுபவமும் கொண்டு, கட்சியின் கட்டுப்பாட்டைத் தன் வசப்படுத்தியிருக்கக் கூடிய வாய்ப்பை அவர் தவற விட்டு, புதிய முதல்வராகச் சின்னம்மாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ பி எஸ்-ஐ எதிர்க்கும் மலிவான அரசியலில் அவர் ஈடுபட்டார்.

ஓபிஎஸ்ஸுக்கு இல்லாத, எடுத்த காரியத்தில் எதிர்ப்பைச் சமாளித்து வெற்றியடையும் உறுதி, ஈ பி எஸ்ஸுக்கு ஏராளமாக இருந்தது என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். 2021 மே மாத சட்டமன்றத் தேர்தலில் ஸ்டாலினின் திமுக-வை விழ்த்த வேண்டுமானால், ஓ பி எஸ் அணியுடன் இணைய வேண்டும் என்று கூட்டணி கட்சி பாஜக அளித்த அழுத்தத்துக்கு அவர் பணிந்தாலும், முதல்வராகத் தாமே இருப்பார் என்பதையும் கட்சியின் இணை ஒருங்கிணப்பாளராக இருந்து கட்சிக் கட்டுப்பாட்டிலும் பங்கு வகிப்பார் என்பதையும் ஈ பி எஸ் உறுதியாகச் செயல்படுத்தினார்.

மேலும், சசிகலாவும் அவரது சகோதரி மகன் டிடிவி தினகரனும் கட்சியிலிருந்து வெளியேற்றவும் பட்டார்கள். ஓபிஎஸ்க்கு, துணை முதல்வராகவும் கட்சியின் ஒருங்கிணைப்பாளராகவும் இருப்பதில் திருப்தியடைய வேண்டியிருந்தது. மே மாதத் தேர்தலில் ஆட்சியிழக்கும் வரையில், அரசைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து கட்சியின் செல்வாக்கு மிக்க தலைவர்களையும் திருப்திப்படுத்தி, தனக்கு விசுவாசமானவர்களாக அவர்களை மாற்றி வைத்திருந்தார் ஈ பி எஸ். இப்போது, ஓ பி எஸ்ஸுக்கு எதிராகக் கட்சியின் மொத்தக் கட்டுப்பாட்டு மையத்தை நிர்ணயிக்கும் போட்டியில், அது பயனளிப்பதாகத் தெரிகிறது.

அண்மைக் காலங்களில், பல முன்னாள் அமைச்சர்கள், எம் ஜி ஆர் காலத்திலிருந்து கட்சியில் இருக்கும் மூத்த தலைவர்கள் உட்பட, பல ஓபிஎஸ் ஆதரவாளர்கள் ஈ பி எஸ் பக்கம் வந்து விட்டதையும் நாம் பார்த்தோம்.

கடந்த சில வாரங்களாக, ஒற்றைத் தலைமை கோரிக்கை ஈ பி எஸ் ஆதரவாளர்கள் தரப்பிலிருந்து வலுப்பெற்று வந்துள்ளது. இரட்டைத் தலைமையால் கட்சியின் வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் நில்லாமல், தேர்தல்களில் வீழ்ச்சியடையும் அபாயமும் உள்ளதாகப் பெரும்பான்மையான அதிமுக உறுப்பினர்கள் கருதுவதாக வலியுறுத்திய முன்னாள் அமைச்சர் டி ஜெயக்குமார் தலைமையில் இவர்கள் அணி திரண்டனர். ஜெயலலிதா மறையும் வரை வகித்துவந்த பொதுச் செயலாளர் பதவி காலியாகவே இருப்பதும், ஓபிஎஸ்ஸ/ம் ஈபிஎஸ்ஸும் முறையே, ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற இரு பொறுப்புகளை வகிப்பதும் கட்சியின் வளர்ச்சிக்கு உகந்ததன்று என்பது இவர்கள் வாதம். அ இ அ தி மு க, பொதுச் செயலாளர் ஈபிஎஸ் என்ற ஒற்றைத் தலைமையின் கீழ் வருவதற்கான நேரம் வந்து விட்டதாக ஜெயக்குமார் கூறியுள்ளார்.

'ஒற்றைத் தலைமை' என்ற வாதத்தை ஏற்காமல் ஓபிஎஸ் தவறான பாதையில் செல்கிறார் என்று ஜெயக்குமார் குற்றம் சாட்ட, பதிலுக்கு, கட்டுப்பாடற்றவர்களின் கைப்பிடியில் கட்சி சிக்கியுள்ளதாக ஓபிஎஸ் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், நிர்வாக ரீதியாக 38 மாவட்டங்கள் உள்ளன. ஆனால், பல்வேறு கட்சிகள், தத்தம் கட்சி நிர்வாகத்தை எளிதாக்கவும் வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் அதிகமான மாவட்ட நிர்வாகப் பொறுப்புகளை உருவாக்கவும் பல மாவட்டங்களாகத் தங்கள் கட்சி நிர்வாகத்தைப் பிரித்துள்ளன. அதிமுக-வில் 74 கட்சி மாவட்டங்களும் ஒரு கட்சி செயலாளரும் தவிர, 2665 உறுப்பினர்கள் கொண்ட பொதுக்குழுவும் உள்ளது. எம்ஜிஆர், ஜெயலலிதா காலங்களில் அவர்களிருவரே இறுதி முடிவெடுப்பவராக இருந்தனர் என்றாலும், இந்தப் பொதுக்குழு தான், கட்சியின் உச்ச பட்ச முடிவெடுக்கும் முழு உரிமை கொண்டது. பொதுக்குழு உறுப்பினர்கள் 2190 பேரின் ஆதரவும் மூன்று நான்கு மாவட்ட நிர்வாகிகள் தவிர மற்றவர்கள் அனைவரின் ஆதரவும் ஈபிஎஸ்-க்குத்தான் இருக்கிறது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தனக்குக் கொடுக்கப்படும் பொறுப்பை ஏற்று, மௌனமாக, ஈபிஎஸ்-ன் தலைமையை ஓபிஎஸ் ஏற்க வேண்டும் என்பது தெளிவாக உள்ள நிலை. பொதுச் செயலாளர் என்ற பதவியைத் தான் ஏற்றுக் கட்சிக்குத் தலைமை தாங்க ஆதரவளித்தால், ஓபிஎஸ்-க்குக் கட்சியின் பொருளாளர் பொறுப்பை அளிப்பதாக ஈபிஎஸ் கூறியதாகவும் சிலர் கூறுகின்றனர். 'ஒற்றைத் தலைமை' என்ற கருத்தை ஏற்காத ஓபிஎஸ்ஸுக்கு இப்போது நிலைமை முற்றிலும் கை மீறிப் போய்விட்டதாகவும் தெரிகிறது.

சென்னையில், கட்சித் தலைமையகத்தில், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மூத்த தலைவர்கள் சந்தித்த கூட்டத்தில், ஜூன் 23 அன்று பொதுக்குழு கூட்டப்பட்டுக் கட்சியின் பொதுச் செயலாளராக ஈபிஎஸ் பொறுப்பேற்க வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்தினர். இதைத் தடுக்கத் தன்னால் ஆன முயற்சிகளை ஓபிஎஸ் மேற்கொண்டார். கட்சியின் அடிப்படைச் சட்டங்களைத் திருத்துவதை எதிர்த்து, சென்னை உயர் நீதி மன்றத்தில் அவர் மனு செய்தார். மேலும், தீவிரமான சட்ட ஒழுங்குப் பிரச்னை வரும் என்று தாம் எதிர்பார்ப்பதால், பொதுக்குழு கூடுவதற்கு அனுமதியளிக்கக்கூடாது என்று ஆவடி காவல் துறை கமிஷனருக்கும் அவர் கடிதம் எழுதினார்.

ஜூன் 23 பொதுக் குழு கூடியது. ஈபிஎஸ் ஆதரவாளர்கள் கோலாகலமாக இதை நடத்தி, அவருக்கு கிரீடத்தையும் பரிசளித்தனர். சசிகலாவுடனும் திமுக



### குடியரசுத் தலைவியாகும் பழங்குடியின பெண்!

முதல்வர் ஸ்டாலினுடனும் இரகசிய ஒப்பந்தத்தில் இருப்பதாக ஓபிஎஸ் மீது குற்றம் சாட்டியும் பலர் கோஷமிட்டனர். கட்சியின் மிக மூத்த தலைவரை அவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார் ஈபிஎஸ். தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அவைத் தலைவர், ஜூலை 11 அன்று அடுத்த பொதுக்குழு கூடும் என்றும் அதில், ஒற்றைத் தலைமைத் தீர்மானமும் ஈபிஎஸ் பொதுச்செயலாளராகும் தீர்மானமும் நிறைவேற்றப்படும் என்றும் அறிவித்தார்.

ஈபிஎஸ்ஸுக்குக் கிடைத்த மாபெரும் வரவேற்பைப் பார்த்துத் துணுக்குற்ற ஓபிஎஸ், தனது விசுவாசிகள் ஒரு சிலருடன் வெளிநடப்பு செய்தார்.

கொந்தளிப்பான இச்சூழலில், பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலையும் கட்சியின் தேசியப் பொதுச் செயலாளர் சி டி ரவியும் ஈபிஎஸ், ஓபிஎஸ் ஆகியோரைத் தனித்தனியே அவர்களது இல்லங்களில் சந்தித்ததையடுத்து, மீண்டும் பாஜக, தனது கூட்டணிக் கட்சியில் சமரசத்திற்கு முயல்வதாக ஊடகங்கள் குறிப்பிட்டன. அதற்குக் காரணமாக, 2024 நாடாளுமன்றத் தேர்தலில், நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகும் வண்ணம், திமுகவை எதிர்த்துத் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியின் 40 தொகுதிகளில் பெரும்பான்மையை அதிமுக-பாஜக கூட்டணி வெல்லவேண்டுமானால், கட்சியில் உள்ள வேறுபாடுகளை மறந்து, ஒன்று பட்டுக் கட்சிக்குள் புது ரத்தம் பாய்ச்சவேண்டுமென்பது பாஜகவின் விருப்பம்.

திராவிடக் கடலில் நீந்தி, தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும் தனது கனவை நனவாக்க, காவிக் கழகமான பாஜக பயணிக்கத் திட்டமிட்டிருப்பது, அதிமுக என்னும் படகில்தான் என்பதால், அந்தப் படகில் கசிவு ஏற்படாமல் பார்த்துக்கொள்வது பாஜக-வுக்கு மிகவும் முக்கியம். ஜெயலலிதாவின் மறைவையடுத்து அக்கட்சி உடைந்து, அதிலிருந்து பெரும்பான்மையானவர்கள் பாஜக-வுக்குச் சென்று விடுவார்கள் என்றும், ஒரு சிலர் தாய்க் கழகமான திமுகவைப் புகலிடமாக அடைவார்கள் என்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். ஏன் என்றால், இவர்களுக்குப் பெரிய அளவிலே சமூகச் சிந்தனையும் கொள்கைக் கோட்பாடும் இருந்ததில்லை. பதவியில் இருந்து பணத்தைச் சம்பாதிப்பதுதான் கொள்கையாகவும் குறிக்கோளாகவும் இருந்து வந்தது.

பல ஆண்டுகளாக இரு கழகங்களும் தங்கள் தலைவர்களான எம் ஜி ஆர், ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் செல்வாக்கில்தான் ஆதிக்கம் செலுத்தி வந்தன. சமூக-அரசியல் கொள்கைகள் என்பதெல்லாம் வெறும் வாய்ச் சொல் தான்.

உங்கள் காலை உணவுக்கு நேரமாகிவிட்டது. உங்களிடம் ஒரு நற்செய்தியைப் பகிர்ந்துகொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். இந்தியாவின் 16ஆவது குடியரசுத் தலைவராக ஒரு பழங்குடியினப் பெண்மணி பொறுப்பேற்கக்கூடிய வாய்ப்புள்ளது. இது, மோடியின் பாஜகவிற்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாக இருக்கும். சென்ற முறை இத்தகைய தருணம், 2002இல், பாஜக-வின் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது, அணு விஞ்ஞானி அப்துல் கலாம் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது நிகழ்ந்தது. ஜூலை மாதம் குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்தின் பதவிக்காலம் முடிவுக்கு வருவதையொட்டி, குடியரசுத் துணைத் தலைவரும் என் நண்பருமான வெங்கைய்ய நாயுடு அப் பதவிக்கு வரலாம் என்று நான் எதிர்ப்பார்த்திருந்தேன். ஆனால், ஒடிஷாவைச் சேர்ந்த 64 வயது சந்தால் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்மணி திரௌபதி முர்மு, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையடுத்து, எனது எதிர்பார்ப்பு மறைந்துபோனது. எதிர் தரப்பு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த யஷ்வந்த் சின்ஹாவை முன்னிறுத்தியுள்ளது. 2018 வரை சின்ஹா பாஜகவில் இருந்தவர் என்பதும் நிதி, வெளியுறவு முதலிய முக்கிய துறைகளின் அமைச்சரவை அமைச்சர் பொறுப்பை வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை நாம் சந்திக்கும் நேரத்தில், இந்தக் குடியரசுத் தலைவர் தேர்தல் குறித்து இன்னும் விரிவாகப் பேசலாம்.

வணக்கம்.

# ஒத்துழைப்பை கோரும் பிரதமர்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்து கடந்தவாரமும் பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீண்டதொரு உரையை நிகழ்த்தினார். தீவிரமடையும் பொருளாதார நெருக்கடியை தணிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளை விளக்கிக்கூறிய அவர் எதிர்க்கட்சிகளிடம் ஒத்துழைப்பைக் கோரினார்.

பொருளாதாரம் முற்றுமுழுதாக வீழ்ச்சி கண்டுவிட்டது. அதை மீட்டெடுப்பது, அதுவும் வெளிநாட்டுச் செலாவணி ஆபத்தான அளவுக்கு கீழ்மட்டத்தில் இருக்கும் நிலையில் சுலபமான காரியம் அல்ல. நெருக்கடிக்கு மத்தியிலும் மக்கள் பசியில் வாடாதிருப்பதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறிய அவர் கொழும்பு வந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவை எதிரணி அரசியல் கட்சிகளுடன் பேசுமாறு தான் கேட்டுக்கொண்டதாகவும் முதலில் செய்யவேண்டியது நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு அதனிடமிருந்து கடனுதவியைப் பெறுவதேயாகும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிட்டு முக்கியமான சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பைத் தருமாறு எதிரணி கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்த பிரதமர் பொருளாதாரம் உறுதிநிலைப்படுத்தப்பட்டதும் நாட்டு மக்கள் புதிய பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து புதிய அரசாங்கத்துக்கு ஆணையை வழங்கலாம் என்றும் சொன்னார்.

பிரதமரின் உரை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் அரசாங்கத்துக்கு இன்றைய நெருக்கடியான கட்டத்தில் காலஅவகாசத்தை வேண்டுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், கடந்த வாரம் எதிரணி கட்சிகள் அரசாங்கம் தொடர்பில் எடுத்திருக்கும் நிலைப்பாடுகள் அதற்கு முற்றிலும் முரணாக அமைந்திருந்ததையே காணக்கூடியதாக இருந்தது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, கோட்டாபய - விக்கிரமசிங்க அரசாங்கம் அரசியல், பொருளாதார, சமூக உறுதிப்பாட்டை மீளநிலை நிறுத்துவதற்காக அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு தவறிவிட்டதாக குற்றஞ்சாட்டியதுடன் அதனால் உடனடியாக பதவி விலகி பாராளுமன்றம் புதிய ஜனாதிபதியையும் பிரதமரையும் சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றின் கீழ் அமைச்சரவையொன்றையும் தெரிவுசெய்ய வழிவிட வேண்டும் என்று கேட்டிருக்கிறது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை ஏமாற்றிவிட்டது என்று கூறிய அந்த கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் பாராளுமன்ற எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல, இலங்கை அதன் தற்போதைய பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களும் வெளிநாடுகளும் உதவப்போவதில்லை என்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினால் மாத்திரமே அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடியும் என்பதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் நாடுகளினதும் நம்பிக்கையைப் பெறமுடியும் என்பதுமே கிரியெல்லயின் நிலைப்பாடு.



## சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க கேட்கும் எதிரணி

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச புதிதாக பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்கெனவே முன்வைத்திருந்தார். ஆனால் கிரியெல்ல முன்வைத்த சர்வகட்சி இடைக்கால அரசாங்க கோரிக்கை குறித்து எத்தகைய அபிப்பிராயத்தை பிரேமதாச கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கடந்த மாத முற்பகுதியில் பிரதமர் பொறுப்பை ஏற்க வருமாறு கேட்டபோது பிரேமதாச காட்டிய தயக்கத்தினால் அவர் சவால்களுக்கு முகங்கொடுக்க துணிச்சல் இல்லாதவர் என்ற ஒரு படிமம் அரசியல் அரங்கில் ஏற்பட்டிருந்தது. அதை மாற்றியமைக்க இப்போது சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க ஒத்துழைக்கும் மனநிலையில் அவர் இருக்கிறாரோ தெரியவில்லை. அல்லாவிட்டால் கிரியெல்ல அத்தகையதொரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்க மாட்டார் என நம்பலாம்.



அடுத்ததாக, சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கோட்டாபய - விக்கிமசிங்க அரசாங்கம் பதவியில் இருக்கும்வரை சர்வதேச நிதி நிறுவனங்களும் உதவி வழங்கும் நாடுகளும் இலங்கையை பொருளாதார - அரசியல் நெருக்கடியில் இருந்து மீட்க முன்வரப் போவதில்லை என்று கூறியிருக்கிறார்.

சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் கடந்தவாரம் செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய சிறிசேன இன்றைய அரசாங்கம் உடனடியாக பதவி விலகி பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளை உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கமொன்றை 15 பேர் கொண்ட அமைச்சரவையுடன் அமைக்க வழிவிடுவதே நெருக்கடியில் இருந்து மீள ஒரே வழி என்று வலியுறுத்தினார். அத்துடன் 6 மாதகாலத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று கூறிய அவர் 2015 - 19 அரசாங்கத்தில் தனக்கும் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நிலவியதைப் போன்ற போட்டி தற்போது ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் மூண்டிருப்பதாகவும் அது நாட்டு நிலைவரத்தை மேலும் மோசமாக்கும் ஆபத்தைக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.



மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)வைப் பொறுத்தவரை நாட்டை மீட்டெடுக்க குறிப்பிட்ட ஒரு காலகட்டத்துக்கு சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றில் பங்கேற்பதற்கு தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறது.

ஆனால் 21வது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் அது நிபந்தனை விதிக்கிறது. ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச உடனடியாக பதவி விலகவேண்டும் என்று முன்னர் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்த ஜே.வி.பி. தற்போது நிலைப்பாட்டை தளர்த்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சுதந்திர இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றும் கண்டிராத படுமோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளுக்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் பரவலாக நிலவுகிறது. அதனால் மக்களின் வெறுப்புக்கு ஆளாகிவிடக்கூடாது என்ற எச்சரிக்கையுணர்வு எதிரணி கட்சிகளிடம் இல்லாமல் இல்லை. ஆனால் அவை தற்போதைய அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தயாரில்லை. சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் என்ற கோரிக்கை அதன் விளைவாகவே எழுகிறது.

பாராளுமன்றத்தில் சுயாதீன குழுவாக இயங்கும் 53 பேரைக் கொண்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன அதிருப்தியாளர்கள் குழுவும் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற நிலைப் பாட்டையே கொண்டிருக்கிறது. அத்தகைய ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு தாங்கள் முதலில் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை என்று அந்த குழுவின் முக்கியமானவர்களில் ஒருவரான பொதுநிதி தொடர்பான பாராளுமன்றக் குழுவின் தலைவர் அநுரா பிரியதர்ஷன யாப்பா கூறியிருக்கிறார்.

தாங்கள் அமைச்சர் பதவிகளை எதிர்பார்க்கவில்லையென்றும் அதனால் தான் ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து அரசாங்கத்தை அமைக்க முன்வருமாறு பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியை அழைத்ததாகவும் கடந்த வாரம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் குறிப்பிட்டார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் தான் கதைத்ததாகவும் அவர் அதற்கு சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை தனது கட்சி வெளியில் இருந்து ஆதரிக்கும் என்று பதிலளித்ததாகவும் கூட யாப்பா தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் விக்கிரமசிங்க பதவியேற்ற பிறகு அமைக்கப்பட்ட அமைச்சரவையை ஒரு சர்வகட்சி அமைச்சரவையாக காட்டும் முயற்சியிலேயே ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர கட்சியையும் சேர்ந்த சிலர் கவர்ந்திழுக்கப்பட்டனர்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு





# தம்மிக்க பெரேரா நியமனமும்

## தேசியப்பட்டியல் குளறுபடியும்

பிரபல தொழிலதிபர் தம்மிக்க பெரேரா ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பில் அவருக்கு சாதகமாக உயர்நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிய தீர்ப்பு தேசியப்பட்டியல் நியமனங்களை நெறிப்படுத்தும் அரசியலமைப்பின் சில ஏற்பாடுகளுக்கும் 1981 இல. 1 பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் ஒரு பிரிவுக்கும் இடையில் இருக்கக் கூடிய கடுமையான முரண்பாண்டை எமக்கு நினைவுபடுத்துகிறது.

இந்த முரண்பாடு பல வருடங்களாக சீர்செய்யப்படாமல் இருப்பது விசித்திரமானதாகும். அதனால் வெளியாட்கள் தேசியப்பட்டியல் ஊடாக தொடர்ந்து பாராளுமன்றத்துக்கு வரக்கூடியதாக இருக்கிறது. குறிப்பிடத்தக்க உதாரணங்களாக சரத் பொன்சேகா (2016), சமான் ரத்னப்பிரியா ( 2020) மற்றும் பசில் ராஜபக்ச (2021) ஆகியோரின் நியமனங்களைக் கூறலாம்.

பொதுத்தேர்தல் ஒன்றில் தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பெறுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் செயலாளரை அந்த ஆசனங்களை நிரப்புமாறு தேர்தல் ஆணையாளர் அறிவித்தல் ஒன்றின் மூலமாக கேட்கவேண்டும் என்று அரசியலமைப்பின் 99 ஏ சரத்து கூறுகிறது. (அவ்வாறு நியமிக்கப்படுபவர்களின் பெயர்கள் தேர்தல் ஒன்றில் இந்த சரத்தின் கீழ் கட்சியினால் அல்லது சுயேச்சைக்குழுவினால் தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் அல்லது மாவட்ட வேட்பாளர் பட்டியலில் உள்ளடங்கியிருக்க வேண்டும்) அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டதாக பிரகடனப்படுத்தப்படுவர்.

ஆனால்,1981 இல. 1பாராளுமன்ற சட்டத்தின் 64(5) பிரிவு “எந்தவொரு உறுப்பினரையும்“ தேசியப்பட்டியல் வெற்றிடத்துக்கு நியமிப்பதற்கு அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அதிகாரமளிக்கிறது் இது மக்களின் வாக்குரிமையை மீறுவதாக இருக்கிறது. ஏனென்றால் கட்சிகளின் தலைவர்கள் தேசியப்பட்டியலில் திட்டமிட்டே வெற்றிடத்தை உருவாக்கிவிட்டு பொதுத்தேர்தல் ஒன்றில் தேசியப்பட்டியல் வேட்பாளர்களாக மக்கள் முன்னிலையில் காண்பிக்கப்பட்டவர்களுக்கு புறம்பாக வேறு நபர்களை பாராளுமன்றத்துக்கு கொண்டு வரமுடியும்.

பசில் ராஜபக்சவின் நியமனம் மேலும் கூடுதல் சர்ச்சைக்குரியதாக இருந்தது. ஏனென்றால், 2020 பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றியடைந்து தேசியப் பட்டியல் ஆசனங்களை பெற்றபோது இரட்டைக் குடியுரிமை காரணமாக அவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியை இழந்திருந்தார். ஆனால் பசில் தான் நினைத்ததை சாதித்தார். தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு வந்து நிதியமைச்சராகி பொருளாதாரத்தை பாழ்படுத்தி நாட்டை கண்ணீரில் மூழ்க வைத்திருக்கிறார்.

பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் மேற்கூறப்பட்ட பிரிவை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் துஷ்பிரயோகம் செய்கின்ற அருவருக்கத்தக்க விதத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது விருப்பு வாக்கு முறையை இல்லாதொழிப்பதற்கு அவர்கள் மேற்கொள் கின்ற முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் நிலைவரம் எவ்வளவுக்கு மோசமானதாக இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்ப்பது ஒன்றும் பெரிய கஷ்டமானதல்ல. விருப்பு வாக்கில் இயல்பாகவே தவறு எதவும் கிடையாது.

அரசியல் கழிசறைகள் விருப்புவாக்குகளுக்காக மோதிக்கொள்கிறார்கள் என்பதற்காக அந்த முறையை இல்லாமல் செய்யவும் கூடாது. அதை இல்லாமல் செய்தால் கட்சிகளின் தலைவர்கள் நேர்மையற்ற முறையில் செயற்பட்டு நியமனப்பட்டியல்களை தயார் செய்து தங்களுக்கு விருப்பமானவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு வகைசெய்துவிடுவார்கள். மக்கள்



செல்வாக்குடையவர்கள் பாராளுமன்றம் வரமுடியாமல் போய்விடும்.

மக்களின் விருப்பங்களை கட்சிகளின் தலைவர்கள் மலினப்படுத்துவதை தடுக்கவும் மக்கள் தங்களுக்கு விருப்பமானவர்களை தெரிவு செய்வதற்காகவுமே விருப்புவாக்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. விருப்புவாக்குகளுக்கான சண்டை வேட்பாளர்களுக்கிடையில் மூள்வதற்கு காரணம் அரசியல் தலைவர்கள் தங்கள் கட்சிகளுக்குள் ஒழுங்கு கட்டுப்பாட்டை பேணுவதற்கான ஆற்றலைக் கொண்டிருக்காததேயாகும். மக்களால் வெறுக்கப்படுபவர்களை அவர்கள் தேர்தல்களில் வழமையாக போட்டியிட வைக்கிறார்கள். ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) ஒழுங்கு கட்டுப்பாட்டைப் பேணும் முறை விருப்பு வாக்குச் சண்டை அவர்களுக்குள் இடம்பெறுவதை தடுக்கிறது. அது சிறந்ததொரு முன்மாதிரியாகும். மற்றைய கட்சிகளும் அதைப் பின்பற்றினால், விருப்புவாக்கு முறையை இல்லாமல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

1988 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் (திருத்த) சட்டமூலத்தின் மூலமுதல் வடிவம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டபோது தேசியப்பட்டியல் வெற்றிடத்துக்கு எந்த உறுப்பினரையும் நியமிக்கலாம் என்ற ஏற்பாடு அதில் இருக்கவில்லை என்று இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஜனநாயக விரோதப்பிரிவு அந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னரே சொருகப்பட்டிருக்கிறது. 2015 பொதுத்தேர்தல் முடிந்தபிறகு சில தேசியப்பட்டியல் நியமனங்கள் தொடர்பாக மூண்ட அரசியலமைப்புச் சச்சரவுகளின்போது இது வெளிச்சத்துக்கு வந்தது.

ஜனநாயகத்துக்காகவும் நல்லாட்சி முறைக்காகவும் குரல் கொடுக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களில் எவராவது மேற்கூறப்பட்ட முரண்பாடு குறித்து பாராளுமன்றம் கவனம் செலுத்தி பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் சர்ச்சைக்குரிய அந்தப் பிரிவு அரசியலமைப்பின் சரத்து 99 ஏ க்கு இசைவான முறையில் சீர்செய்யப்படவேண்டும் என்று கேட்பார்களா? நீண்டகாலமாக இருந்துவரும் இந்த ஓட்டையை அடைக்கவேண்டியது அதி அத்தியாவசியமானதாகும். அந்த ஓட்டை நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பை அர்த்தமற்றதாக்குகிறது.

அதேபோன்றே சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிறகு நீதித்துறையின் மீளாய்வுக்கு அவை உட்படுத்தப்படுவதற்கு வகை செய்யக்கூடியதாக அரசியலமைப்பு ஏற்பாடொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஏனென்றால் அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படக்கூடிய தவறான சட்டங்களை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.

தற்போது ஒரு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அத்துடன் அது முடிந்த கதையாகிவிடுகிறது. அது குறித்து எதுவும் செய்ய முடியாது. அதனால் அரசாங்கங்கள் வலுக்கட்டாயமாக சட்டங்களை நிறைவேற்றும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

(த ஐலண்ட் ஆசிரிய தலையங்கம், 23 ஜூன் 2022)

# ஒத்துழைப்பைக் கோரும் பிரதமர்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் அது தனிநபர்கள் தங்கள் கட்சிகளைக் கைவிட்டு அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொண்ட செயலாகப் போனதே தவிர சர்வகட்சி அரசாங்க தோற்றப்பாட்டைத் தரவில்லை. இதனிடையே ஜனாதிபதியை சந்திக்கும் ஆளும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு தங்கள் கட்சியை சேர்ந்த ஒருவரை பிரதமராக நியமிக்குமாறு கேட்கவும் தவறுவதில்லை.

எதிரணி கட்சிகளைப் பொறுத்தவரை கோட்டாபய - விக்கிரமசிங்க அரசாங்கம் தோல்வி கண்டுவிட்டது என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன. அதனால் அவர்கள் ஒத்துழைப்புக் கோரி பிரதமர் விடுக்கும் அழைப்புக்கு செவிசாய்க்கும் மனநிலையில் இல்லை என்றே தெரிகிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அவசியமான அரசியல் உறுதிப்பாடு கானல் நீராகவே இருக்கிறது. எதிரணியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு புதிதாக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனாதிபதி முன்வருவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ராஜபக்சாக்களை பொறுத்தவரை அரசியலில் இருந்து முற்றாகவே ஓரங்கட்டப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கான வியூகங்களையே அவர்கள் வகுக்கிறார்கள் என்று தெரிகிறது.

எது எவ்வாறிருந்தாலும், தற்போதைய பாராளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களின் வகைதொகையைப் பார்க்கும்போது உருப்படியான அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு அவர்கள் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது.

ஏனென்றால், நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியால் திணறிக்கொண்டிருக்கும் நிலையில் கூட கட்சி அரசியலை முன்னெடுப்பதில்தான் தலைவர்கள் எனப்படுவோர் அக்கறை காட்டுகிறார்கள். அதனால் உண்மையான அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுக்க மக்களின் புதிய ஆணையுடன் கூடிய பாராளுமன்றம் ஒன்று தேவை.

ஆனால், தற்போதைய நெருக்கடி நிலையில் தேர்தல் ஒன்றுக்கு நாட்டினால் முகங்கொடுக்க முடியாது. அடுத்த மார்ச் மாதத்துக்கு பிறகு தேர்தல் ஒன்றுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி கோதாபய பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக்குழுவிடம் அண்மையில் கேட்டுக்கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் மார்ச் அளவில் நாடளாவிய தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய அளவுக்கு பொருளாதார நெருக்கடியில் தணிவு ஏற்படக்கூடியதாக இருக்குமா என்பது முக்கியமான கேள்வி.

பிரதமர் விக்கிரமசிங்க பொருளாதார நிலைவரம் குறித்து செய்கின்ற அறிவிப்புக்கள் சில வருடங்களுக்கு நாடு பாரிய நெருக்கடிக்குள் மூழ்கியிருக்கப்போகிறது என்பதையே உணர்த்தி நிற்கின்றன. அதனால் பொருளாதார நெருக்கடியும் அரசியல் உறுதிப்பாடின்மையும் தொடருவதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றன.

# தமிழ்த் தேசியம் என்பது நிறம்மாறி சிறிலங்கா தேசியமாகி வருகிறது!

**பனங்காட்டான்**

**கோ**ட்டாபயவை வீட்டுக்கு அனுப்பும் கொட்டொலியுடன் ஆரம்பமான மக்கள் பேரெழுச்சி எழுபத்தைந்து நாட்களைத் தாண்டியும் அந்த இலக்கை இன்னமும் எட்டவில்லை.

அறுபத்தைந்து லட்சம் மக்களின் வாக்குகள் ஐந்தாண்டு காலத்துக்கு என்பதால், தாம் பதவி துறக்கத் தயாரில்லையென்று பகிரங்கமாகவே கூறிவிட்டார் கோட்டா. அதேசமயம், தமது ஆட்சிக் காலத் தோல்விகளுக்கு அல்லது தவறுகளுக்கு மற்றைய ராஜபக்சக்களே காரணம் என்று காட்டுவதுபோல அவர்களை பதவி விலக வைத்தது அவரது அபார யுக்தி.

அண்ணர்மார் இருவரும், அவர்களின் பிள்ளைகள் இருவருமாக மொத்தம் நால்வர் அமைச்சர் பதவிகளை துறந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அடிக்கடி குரல் கொடுப்பவர்களாக உள்ளனர். தம்பி பசில் மட்டும் அமைச்சர் பதவியுன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறக்க நேர்ந்தது. இரட்டைப் பிரஜாவுரிமைக்கு கிடைத்த பரிசு இது.

பசிலின் இடத்துக்கு நியமனமான சூதாட்ட வணிக முதலாளி தம்மிக்க பெரேரா பல தடைகளைத் தாண்டி நாடாளுமன்றம் புகுந்துள்ளார். கோடீஸ்வரரான இவரது பதவியேற்பு நாட்டு மக்களுக்கு சுபீட்சம் ஏற்படுத்துமென அறிவிக்கப்படுகிறது.

பசில் ராஜபக்சவுக்கு நிதியமைச்சர் பதவி வழங்கியபோதும், ரணிலை பிரதமராக நியமித்த போதும் இவ்வாறுதான் எதிர்வு கூறப்பட்டது. காமதேனு, கற்பகதரு என்றவாறு இவர்களை அடையாளப்படுத்தினர்.

ரணிலைப் பொறுத்தளவில் நாட்டின் உண்மை நிலைமையை தொடர்ந்து பகிரங்கமாக எடுத்துக் கூறி வருகிறார். இவ்வாறு கூறுவதனூடாக, கோட்டா - மகிந்த கூட்டாட்சியில் என்ன நடைபெற்றது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த அவர் முனைகிறார். அது பரவாயில்லை, மக்களுடன் அவர் சம்பாசித்துக் கொள்ளட்டும் - பிரச்சனைகள் இப்போது தம்பக்கம் திரும்பாவிட்டால் போதுமென்ற போக்கில் ரணிலை கோட்டா சற்று விட்டுப்பிடிக்கிறார் போல தெரிகிறது.

காலிமுகத் திடலில் உருவாகியுள்ள கோட்டா கோ கம, யூலை மாதத்தில் நூறாவது நாளைத் தொடும்போது, போராட்டம் நாடு முழுமையாகத் தழுவி நிலைமை மோசமடையலாமென புலனாய்வு அறிக்கைகள் எச்சரிப்பதால், அதற்கு முன்னராக போராட்டத்தை நசுக்கும் திட்டமும் தயாராகி வருகிறது.

இதன் எதிரொலியாக, ரணிலை பதவி நீக்கலாம் அல்லது பதவி துறக்க வைக்க வேண்டுமென்ற மற்றொரு திட்டம் பசிலின் வழிநடத்தலில் மகிந்தவின் அனுசரணையுடன் பொதுஜன பெரமுனவுக்குள் உருவாகிறது. மக்களுக்கு அரிசி, தானியங்கள், உணவுப் பொருட்கள், எரிபொருள் மற்றும் எரிவாயு இல்லை. கிடைத்தால் அது நூறு வீத அதிகரித்த நிலை. அதங்கு மக்களிடம் பணம் இல்லை. சாதாரண மக்களைவிட மோசமான நிலையில் அரசாங்கம் வங்குறோத்தில் திணறுகிறது.

அண்டை நாடு என்ற பெயரில் இந்தியா தனது நட்புக்கரத்தை தொடர்ந்து நீட்டுகிறது. இதனை எழுதும் வேளையில் இந்திய உயர்மட்டக்குழு கொழும்பில் கோட்டாவையும் ரணிலையும் தனித்தனியாக சந்தித்து தங்கள் உதவிக்கு உறுதி தெரிவித்துள்ளது. சீனா தொடர்ந்து இலங்கைக்கு உதவும்வரை இந்தியாவின் உதவிக்குப் பஞ்சம் இருக்காது.

சர்வதேச நாணய வங்கியால் மட்டுமே இலங்கையை மீட்க முடியுமென்பது ரணிலின் கருத்து. இதற்காக இலங்கை நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் பல. அவைகள் நிறைவேற்றப்படுமானால் இல்லாமைக்கு சற்று ஒய்வு கிடைக்கலாம். ஆனால், ஆட்சித்தரப்பு மக்கள் செல்வாக்கை இழக்கும். இது எதிர்காலத் தேர்தல்களில் அவர்களைப் பாதிக்கும்.




எதற்குமே பணமில்லை என்று அழுது கொண்டு இருக்கையில், அடுத்தாண்டு தேர்தல் என்று பெரிய குண்டொன்றைத் தூக்கிப் போட்டுள்ளார் கோட்டா. இதை அவர் பொதுமக்களுக்குச் சொல்லவில்லை. தம்மைக் கதிரையில் ஏற்றிய பொதுஜன பெரமுன எம்.பிக்கள் மத்தியில் இதனைத் தெரிவித்தார். ஆனால், ஊடகங்கள் இதனை நாட்டு மக்களுக்கான அறிவிப்பாக்கி விட்டன.

இந்த அறிவிப்பினூடாக ஒரு கல்லில் பல மாங்காய்களை வீழ்த்த கோட்டா எத்தனிக்கிறார். ரணிலை பிரதமர் பதவியிலிருந்து நீக்குமாறு கோருபவர்களைப் பார்த்து, அடுத்த வருட தேர்தலில் அவரையும் அவரது கட்சியையும் வீழ்த்துங்கள் என்பது முதலாவது. பொதுஜன பெர முனவை அடுத்த தேர்தலில் மீண்டும் அரியாசனம் ஏற்ற இப்போதே செயற்பாடுகளை ஆரம்பியுங்கள் என்பது இன்னொன்று. கோட்டா வீட்டுக்குப் போ என்று போராட்டம் நடத்துபவர்களுக்கு - அடுத்த வருடம் மாற்றங்கள் வருமென்று தெரிவித்து கொஞ்சம் தாக்காட்டுவது மூன்றாவது.

**த**மிழரின் அரசியல் அபிலாசைகள் பற்றிப் பேச சம்பந்தனுக்கு கோட்டா கொடுத்த இரண்டு மாத தவணை முடிந்து விட்டது. தமிழரின் காணி பறிப்பு, நில அபகரிப்புப் பற்றி பேச சுமந்திரனுக்கு கோட்டாபய அடையாளம் காட்டிய சவேந்திர சில்வாவும், அலி சப்றியும் இன்று அப்பதவிகளில் இல்லை. இவைகளை அம்போ என மறந்துவிட்ட கூட்டமைப்பு ஆட்சி மாற் றம் பற்றி அங்கலாய்க்கி றது. தமிழ்த் தேசியம் என பது இப்போது சிறிலங்கா தேசியமாகி வருகிறது.

தங்கள் தொகுதிக்கும் - சொந்த வீடுகளுக்கும் - பொது நிகழ்வுகளுக்கும் தலைகாட்ட முடியாது, வீதியில் வாகனத்தில்கூட செல்ல முடியாதிருக்கும் ஆளுந்தரப்பு எம்.பிக்கள் எவ்வாறு தேர்தல் பரப்புரையை இப்பொழுது ஆரம்பிக்க முடியும்?



அரசியலில் நினைப்பது எதுவும் நடப்பதில்லை. நினைக்காதவை திடுதிப்பென நடந்துவிடும். கோட்டாபய ஜனாதிபதியாகத் தெரிவான போதும், மகிந்த தலைமையில் பொதுஜன பெர முன பெரும்பான்மை அரசாக வென்ற போதும், அதன் பிதாமகர்களான ராஜபக்சர்களின் ஆட்சிக்காலம் அரைதாண்டுவதற்கு முன்னரே இப்படி நடைபெறலாமென யாராவது எதிர்பார்த்தார்களா? தேர்தலில் படுதோல்வி கண்ட பூச்சியத்தின் மன்னரான ரணில், தமக்கு பிரதமர் அதிர்ஸ்டம் கிடைக்குமென கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்.

அரசியலில் விதி சுழிமாறி சிலரை அடித்து வீழ்த்தும். வேறு சிலரை மேலெழுப்பும். இந்தச் சுனாமி அரசியலில் இப்போது காயப்படுபவர் சஜித் பிரேமதாசதான். எதிர்க்கட்சியென ஒன்றை இல்லாமற் செய்ய கோட்டாபய வியூகம் வகுக்கிறார். தமக்கும் தமது கட்சிக்கும் துரோகம் இழைத்ததற்காக சஜித்தை முழுமையாக அரசியலிலிருந்து அப்புறப்படுத்த ரணில் முழுமையாக முனைகிறார்.

21வது அரசியல் திருத்தம் நிறைவேற்றப்படுவதை தடுப்பதற்காக நாடாளுமன்ற அமர்வை புறக்கணிப்பது, ஹிருணிக பிரேமசந்திர ஊடாக ரணிலின் வீட்டுக்கு முன்னால் பெண்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்பவை சஜித் தரப்பினரின் நிகழ்கால ஏற்பாடுகள். ரணிலின் குடும்பப் பெயரையும் மாற்றி புதுப்பெயர் கொடுத்துள்ளார்கள். அது - ரணில் ராஜபக்ச என்பது. அப்படியென்றால் கோட்டாபயவின் குடும்பப் பெயரை விக்கிரமசிங்க என மாற்றலாம்.

அப்பாவி மக்கள் பஞ்சம் பட்டினியால் அல்லாடிக் கொண்டிருக்க, அரசியல் தலைமைகள் தங்கள் இருப்பையும், அடுத்த தேர்தலையும் நோக்கி ஆலாய்ப் பறக்கிறார்கள். இதில் தமிழ் அரசியல் தலைவர்களும் விதிவிலக்கல்ல.

சிங்கள பௌத்தம் என்பதை நிலைநாட்ட குருந்தூர் மலையில் விகாரை அமைப்பும், புத்தர் சிலை நாட்டல் முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது. ராணுவ பாதுகாப்புடன் பௌத்த துறவிகள் எனப்படுபவர்கள் முழு மூச்சாக இதில் ஈடுபடுகின்றனர். ஆனால், தொல்பொருள் ஆய்வுத் திணைக்கள அதிபதி இது எதுவுமே தமக்குத் தெரியாது என்று கை விரிக்கிறார்.

தரிசு நிலங்களில் விவசாயம் செய்ய வேண்டுமென்ற ஜனாதிபதியின் அறிவிப்பின்படி, தமிழர் வாழுமிடங்களிலுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை மீண்டும் அபகரிக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களைத் தட்டிக்கேட்க உரிமம் பெற்றவர்கள்போல் நடந்து கொண்ட தமிழ்த் தலைமைகள் காணமாற் போய் விட்டனர். இதனை எழுதுகையில் - மார்ச் மாதம் 31ம் திகதி கோட்டாபயவின் மிரிகான வீட்டின் முன்னால் போராட்டம் ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற முக்கிய சந்திப்பொன்று நினைவுக்கு வருகிறது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் கோட்டாபயவுடன் மகிந்தவும் அமர்ந்திருக்க இச்சந்திப்பு இடம்பெற்றது. அவ்வேளை இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் - நீங்கள் இரு தரப்பும் இனிப் பேசி பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று வழங்கிய ஆலோசனையின் பேரில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

தமிழரின் அரசியல் அபிலாசைகள் பற்றிப் பேச இரண்டு மாத தவணை கேட்டார் கோட்டா. அதனை ஏற்றுக் கொண்டது சம்பந்தன் தரப்பு. இது முடிந்து மூன்று மாதமாகிவிட்டது.

தமிழர் காணிகளை ராணுவம் அபகரிப்பது பற்றி சுமந்திரன் இங்கு எடுத்துக் கூறியபோது, அவர்கள் எதற்காக காணிகளை எடுக்கிறார்கள் என்று எதுவுமே தெரியாததுபோல் கோட்டாபய வினவியது அபார நடிப்பு. தொல்பொருள் திணைக்களத்தினர் காணிகளை அபகரிப்பது பற்றி குறிப்பிட்டபோது - அவர்களின் வேலை தொல்பொருள் ஆய்வுதானே என்று நெற்றியைச் சுருக்கி பதில் கேள்வி தொடுத்தது கோட்டாபயவின் குணசித்திரபாகம்.

பேச்சுவார்த்தை முடிந்து வெளியே வந்தபோது அப்போதைய ராணுவத்தளபதி சவேந்திர சில்வா தமது பங் குக்கு தொலைபேசியில் சுமந் திரனுடன் தொடர்பு கொண்டு - ராணுவம் தமிழர் காணி களை சுவீகரிப்பதாகக் கூறினீர் களாமே! அது எங்கே என்று கேட்டது அதியுச்ச நடிப்பு.

இப்பிரச்சனைகள் பற்றி அன்றைய ராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுடனும் அப்போதைய நீதி அமைச்சர் அலி சப்றியுடனும் பேசி ஒரு தீர்வுக்கு வருமாறு சுமந்திரனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இப் போது அப்பதவிகளில் முன்னவர் இருவ ரும் இல்லை. சுமந்திரன் அதே பதவியில் இருந்தபோதும் இந்த விடயத்தை வசதி கருதி மறந்தவராகி விட்டார்.

கடந்த வாரம் குருந்தூர் மலையில் பிக்குகள் அட்டகாசம் நடத்தியபோது சுமந்திரன் எங்கே போனார்? இந்த விவகாரத்தைக் கையில் எடுத்து ஊடகங்களில் பிரகாசமானவர் திடீரென காணாமல் போனது ஏன்?

நல்லாட்சிக் காலத்தில் ரணிலுடன் கூட்டுச் சேர்ந்ததுபோல, அடுத்த தேர்தலில் வெற்றி பெற பசிலூடாக ராஜபக்சக்களுடன் இணைவதில் 'பிசி'யாக இருக்கிறாரா? இவைகளைப் பார்க்கும்போது மக்களுக்கு ஒன்று தெரிகிறது. தமிழ்த் தேசியம் என்பது நிறம் மாறி, சிறிலங்கா தேசியமாகி வருகிறது. தேர்தல் காலத்தில் நம்பி நம்பி வாக்களிக்கும் மக்களே பாவம்!

# வீட்டுத்தோட்டம்...!

## இனி இதுவே ஒரேவழி...!!



அறிக்கையிடல் REPORTING
என். குகராஜ்

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணம் சரியாக 27 ஆண்டுகளுக்கு முன்னர் பொருளாதார தடையை எதிர்கொண்டிருந்தது. அன்றைய நாளிலும் உணவு, எரிபொருள்களுக்கு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார்கள். விவசாயத்திலிருந்து அதிகளவான மக்கள் வெளியேறிவிடாத போதும் அன்றைய நாட்களில் மரக்கறி வகைகள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் விலையேறின.

அப்போது யாழ்ப்பாணத்தின் - வடக்கின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் சென்றடைந்த பிரசாரம் வீட்டுத் தோட்டம் - வெற்றுக் காணிகளிலும் விவசாயம் என்ற விடயம். அத்துடன், கூடவே சுயதேவை மூலம் பொருளாதார நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இயன்றளவில் வடக்கு மண் தன்னிறைவும் கண்டது - பொருளாதார தடையையும் எதிர்கொண்டு நின்றது.

**ஆனால் இன்று,**

யாழ்ப்பாணம் - வடக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கையும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது. இன்றும் வீட்டுத் தோட்டம் - வெற்றுக் காணிகளில் விவசாயம் என்ற தொனிப் பொருள் அதிகம் உச்சரிக்கப்படுகின்றது. ஆனால், இன்று விவசாயத்தை விட்டு அதிகளவானோர் வெளியேறி விட்ட நிலையில், மீண்டும் வீட்டுத்தோட்டம், சுய தேவை பொருளாதாரம் என்று கூறப்பட்டாலும், போதிய விழிப்புணர்வு - இதன் எதிர்கால விளைவுகளை நம் சமூகம் இன்னமும் உணரத் தயாரில்லை.

இந்நிலையில், விழிப்புணர்வை எட்டியவர்கள் தமது சமூகத்துக்காக இங்கே தங்கள் கருத்துக்களை விதைக்கிறார்கள்...!

## சிறு முயற்சிதான் நன்மைகள் பல...!

**சிவகுரு பிரம்மதேவர்,**
பாதுகாப்பு உத்தியோகத்தர், கோண்டாவில் கிழக்கு.



**நா**ன் படிக்கிற காலத்திலிருந்தே ஆசையுடன் வீட்டுத்தோட்டத்தை தொடர்ந்து செய்து வருகிறேன். தற்போது என்னிடம், கீரை, வெண்டி பயிற்றை, கத்தரி, வெற்றிலை, மர வள்ளி, வாழை என்பன உள்ளன.

நான் இந்து மதத்தை சேர்ந்தவன். கூடுதலாக விரதமும் பிடிக்கிறேன். எனக்கு தேவையான மரக்கறிகளை வீட்டு தோட்டத்திலிருந்து காய்கறிகளைப் பெற்று சமையல் செய்கிறோம். எல்லா வகையான வாழையும் வைத்திருக்கின்றேன். வீட்டுக்கு தேவையான பழங்கள் போக ஏனையவற்றை விற்பனை செய்யவும் முடிகிறது.

வீட்டில் மூன்று முருங்கை மரங்கள் உள்ளன. நன்றாகக் காய்க்கின்றன. கிலோ 500 ரூபாய் வீதம் விற்கவும் முடிகிறது. இன்றைய பொருளாதார நெருக்கடியில் வீட்டுத் தோட்டம் செய்வதன் மூலம் நீங்கள் தப்பிக்கொள்ள முடியும். இந்த சிறுமுயற்சி உங்கள் குடும்பத்தின் அன்றாட தேவைக்கு உதவும்.

பாதுகாப்பு ஊழியராக இருக்கிறேன். இரு நாட்களுக்கு ஒருமுறை விடுமுறை உண்டு. இந்த நேரத்தை வீட்டுத் தோட்டத்தில்தான் கூடுதலாக செலவழிக்கிறேன். வீட்டுத் தோட்டத்தில் பூச்சி தாக்கங்களுக்கு கிருமிநாசினி, பீடை நாசினிகளை பயன்படுத்தாதீர்கள். வேப்பிலை, சாம்பல் போன்றவற்றை பயன்படுத்துங்கள்.

சிறிய முயற்சியாக வீட்டு தோட்டத்தை செய்து பாருங்கள். மிகவும் சந்தோசமாக இருக்கும். பொழுது போக்காகவும் இருக்கும். நீங்களும் வீட்டுத் தோட்டம் செய்து பாருங்கள். அதன் அர்த்தம் புரியும்...!

## இலாபம் மட்டுமல்ல மனமகிழ்ச்சியும்கூட..!

**எஸ். தர்சினி,** முன்பள்ளி ஆசிரியர்,
பாண்டவெட்டை, சுழிபுரம்.



**வீ**ட்டில் வீட்டு தோட்டம் செய்து வருகிறேன். தண்ணீரை கிணற்றிலிருந்து அள்ளி ஊற்றித்தான் தோட்டத்தை பராமரிக்கிறேன். எமது பகுதியில் கிணற்று நீரானது மழைகாலத்தில் மட்டும் கிணற்றில் நிற்கும். அதை சரியாகப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டம் மூலம் பயன் பெறுகிறேன்.

வீட்டுத் தோட்டத்தை நீண்ட காலமாக செய்து வருகிறேன். தற்போது கோடை காலத்தில் தண்ணீர் பிரச்சினையால் சிறியளவில் செய்கிறேன். கத்தரி, மிளகாய், பூசணி போன்ற பயன் தரும் மரக்கறி கன்றுகளை பராமரிக்கிறேன். மரக்கறி வாங்குவதற்காக கடைகளுக்கு செல்வதில்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வீட்டிலேயே மரக்கறி கிடைப்பதால் என்னை நெருக்கடிகள் அதிகம் பாதிக்கவில்லை.

முன்பள்ளி ஆசியையான நான், வேலை முடிந்ததும் வீட்டில் தொலைக்காட்சி பார்த்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. தோட்டத்தில் அதிக நேரத்தை செலவழிப்பதால் அதிக பயன்களை பெறுகிறேன்.

ஒவ்வொரு நாளும் வீட்டுத் தோட்டத்தில் இருந்து பெற்ற மரக்கறிகளையே சமையலுக்கு பயன்படுத்துகிறோம். இதனால், நாம் ஆரோக்கியமாக இருப்பதாகவும் உணர்கிறோம். தோட்டத்தில் நேரத்தை கழிப்பது மனதுக்கும் மகிழ்வளிக்கிறது. தவிர, மேலதிகமாக கிடைக்கும் மரக்கறிகளை அயலவர்களுக்கு கொடுக்கிறேன். அவர்களும் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் மேலதிகமாகக் கிடைப்பவற்றை எங்களுக்கு தருவார்கள். வீட்டுத் தோட்டத்துக்கு அதிக நிலப்பரப்போ - பெரிய செலவுகளோ தேவையில்லை.







## சுயதேவை பொருளாதாரம் மூலம் எம்மை நாமே நிமிர்த்துவோம்!



**தர்ஷன்,**
பல்கலை மாணவன்,
சுழிபுரம் மேற்கு.

**இ**ன்றைய காலகட்டத்தில் பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருகின்றது. விலைவாசி அதிகரிக்கப்பட்டு பொருட்களை கொள்வனவு செய்வதில் விலையேற்றம் அதிகளவில் காணப்படுகிறது. இதனை எங்களால் ஈடுசெய்ய முடியாத நிலை உள்ளது.

எம்மை நாமே நிமிர்த்த வேண்டுமாக இருந்தால், சுயதேவை பொருளாதாரத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. நான் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று கொண்டிருக்கின்றேன். எனக்கு நேரம் கிடைக்கும் நேரத்தில் வீட்டுக்கு பின்புறமாக இலவசமாக கிடைத்த மரக்கறி நாற்றுகளுடன் சேர்த்து நானும் கொஞ்ச விதைகளை கொள்வனவு செய்து தோட்டம் செய்கிறேன்.

உரம் இல்லை என்று ஒரு பிரச்னை காணப்படுகின்றது. குறிப்பாக நல்லூர், மானிப்பாய் பிரதேச சபையினரால் 8 ரூபாய் தொடக்கம் 15 ரூபாய் வரை சேதன பசளை உரம் விற்கின்றார்கள். அதனை கொள்வனவு பயிர்களுக்கு போடுவதன் மூலம் பயிர்கள் செழிப்பாக வளர்கின்றன. இந்தப் பயிர்களிலிருந்து அதிக பயன்களைப் பெறக்கூடியதாக உள்ளது.

நமது மரக்கறிக் கன்றுகளில் இருந்து மரக்கறியை எடுத்து சமையலுக்கு பயன்படுத்தும்போது, மகிழ்ச்சியாக இருக்கின்றது. எமது வீட்டில் ஒரு காயொன்று காய்த்து அதை எடுத்து, சமைக்கும்போது வித்தியாசமான ஓர் அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் நமக்கு தருகின்றது. பல்கலைக்கழக மாணவனாக இருந்துகொண்டு கிடைக்கும் நேரங்களில் வீட்டு தோட்டம் செய்வது போல ஒவ்வொருவரும் அரசாங்க வேலை, தனியார்துறை வேலையாக இருந்தாலும் சரி உங்களுக்கு கிடைக்கின்ற நேரத்தைப் பயன்படுத்தி வீட்டு தோட்டத்தை மேற்கொள்வதன் மூலம் உங்களுடைய சுய தேவை பொருளாதரத்தை பூர்த்தி செய்ய முடியும். கட்டாயமாக வீட்டு தோட்டத்தை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

# துருவங்கள் இணைகின்றன!





தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகர்களான விஜய் - அஜித் இருவரும் இணைந்து ஒரே படத்தில் நடிக்கவுள்ளனர் என்று பிரபல இசையமைப்பாளரும் இயக்குநர் வெங்கட்பிரபுவின் தந்தையுமான கங்கை அமரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் படம், இந்தியளவில் உருவாகும். இந்தப் படத்தை வெங்கட் பிரபு இயக்கவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

அஜித்தும் விஜய்யும் திரையுலகில் அறிமுக நாயகர்களாக இருந்த சமயத்தில் - 1995ஆம் ஆண்டு "ராஜாவின் பார்வையிலே " திரைப்படத்தில் விஜய் - அஜித் இருவரும் இணைந்து நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விஜயுடன் சேரும் சமந்தா?

விஜயின் அடுத்த படத்தில் அவரோடு இணைந்து நடிக்க ஆர்வமாக இருக்கிறார் சமந்தா. லோகேஷ் கனகராஜ் இயக்கம், தயாரிப்பு லலித் - ஜெகதீஷ் என முடிவாகி யிருக்கும் நிலையில், சமந்தாவின் கனவு பலிக்க வாய்ப்பிருப்பதாக சொல்கிறார்கள்.

காரணம், ஜெகதீஷ்தான் சமந்தாவுக்கு மேலாளராகப் பல காலமாகப் பணியாற்றி வருகிறார். சமந்தாவின் புகழ், இப்போது பல மொழிகளில் கொடிகட்டிப் பறப்பதால், வியாபாரத்துக்கு பேருதவியாக இருக்கும் என்று விஜயும் கருதுகிறாராம்.



# சைதன்யாவுடன் கீர்த்தி!



இயக்குநர் வெங்கட்பிரபு பிரபல தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவை அடுத்த படத்தில் இயக்குகிறார். பெயரிடப்படாத இந்தப் படம் தமிழ், தெலுங்கில் தயாராகிறது.

நாக சைதன்யாவின் 22ஆவது படமான இதற்கு, இளையராஜாவும் யுவன் சங்கர் ராஜாவும் இணைந்து இசை அமைக்கின்றனர். இதைப் படக்குழுவும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் படத்தின் நாயகியாக கீர்த்தி ஷெட்டி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே, நாக சைதன்யாவுடன் 'பங்கர்ராஜூ' என்ற படத்தில் நடித்திருந்தார்.

# ருத்ரன் முதல் பார்வை




ராகவா லோரன்ஸ் தற்போது "ருத்ரன்" படத்தில் நடித்து வருகிறார். இதில், பிரியா பவானி சங்கர் கதாநாயகியாக நடிக்கிறார்.

இந்தப் படத்தைப் பொல்லாதவன்", "ஜிகிர் தண்டா" போன்ற திரைப்படங்களை தயாரித்த "பைவ் ஸ்டார்" கதிரேசன் இயக்கி வருகிறார். இவரின் முதல் இயக்கம் இதுவாகும். ஜி. வி. பிரகாஷ் இசையமைக்கிறார்.

இவர்களுடன், சரத்குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். தற்போது இந்தப் படத்தின் முதல் பார்வை வெளியாகியுள்ளது. லோரன்ஸ் ஆக்ரோஷத்தோடு கையில் பெரிய இரும்பு தடியுடன் பலரை அடித்து பந்தாடியபடி ஒருவரை தலைமுடியை பிடித்தபடி உள்ளார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு இந்தப் படம் வெளியாகவுள்ளது.

# தேவர் மகன் 2 இல் விஜய்சேதுபதி!

உலகநாயகன் கமல் ஹாசன் நடிக்க உள்ள "தேவர் மகன் 2' படத்தில் கமல்ஹாசனின் மகனாக 'விக்ரம்' படத்தில் நடித்த பிரபல நடிகர் நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளன.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் உலக நாயகன் கமல்ஹாசன் நடித்த 'தேவர்மகன்' திரைப்படம் கடந்த 1992ஆம் ஆண்டு வெளியாகி மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. ராஜ்கமல் பிலிம்ஸ் இன்ரர்நஷனல் நிறுவனம் தயாரித்த இந்த படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் உருவாகவுள்ளது.

இந்த நிலையில் இந்த படம் வெளியாகி 30 வருடம் ஆகி விட்ட நிலையில் கமல்ஹாசனின் மகன் பாத்திரம்தான் முக்கியம் பெறுகிறது. இந்தப் படத்தில், சமீபத்தில் வெளியான கமலின் விக்ரம் படத்தில் வில்லனாக நடித்த விஜய் சேதுபதி மகன் பாத்திரத்தில் நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.







## திரைப்படம் - மாமனிதன்

**இயக்கம் - சீனு ராமசாமி**
**இசை - இளையராஜா, யுவன்ஷங்கர் ராஜா**
**நடிப்பு - விஜய் சேதுபதி, காயத்ரி, குரு சோமசுந்தரம்**

தன்னை விட தங்கள் பிள்ளைகள் நன்றாக வாழ வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு அப்பாவின் பெரும் கனவாக இருக்கும். அப்படி ஒரு பெருங்கனவுடன் இருக்கும் அப்பாவின் வாழ்க்கையில் நடக்கும் ஒரு சம்பவம் அவனை எப்படி மாமனிதனாக மாற்றுகிறது என்பதுதான் இந்தப் படம். இயக்குநர் சீனு ராமசாமி வர்த்தக ரீதியாக எந்தவித சமரசமும் செய்து கொள்ளாமல் ராதாகிருஷ்ணன் என்ற மனிதனின் வாழ்க்கையை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்.

தேனி அருகே பண்ணைபுரம் கிராமத்தில் ஓட்டோ ஓட்டுனராக இருக்கிறார் விஜய் சேதுபதி. அழகான மனைவி காயத்ரி, அன்பான மகன், மகள் என வாழ்க்கை இயல்பாகப் போய்க் கொண்டிருக்கிறது. படிக்காத அவர், தனது பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற ஆசையில் அடுத்த கட்டமாக பணம் சம்பாதிக்க காணி, வீடு விற்பனை தொழில் செய்ய இறங்குகிறார். அதில் அவரும் ஏமாந்து, அவரால் ஊர் மக்கள் பலரும் ஏமாந்து போகிறார்கள். பணத்தைத் திருப்பித் தர முடியாமல் ஊரை விட்டே ஓடுகிறார். தன் குடும்பத்தின்மீது அவ்வளவு பாசமாக இருக்கும் விஜய் சேதுபதி தன் குடும்பத்தைக் காப்பாற்றினாரா அல்லது கைவிட்டாரா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

"காத்து வாக்குல ரெண்டு காதல், விக்ரம்" படங்கள் மாதிரியான விஜய் சேதுபதியை இந்தப் படத்தில் பார்க்க முடியாது. இந்த மாதிரியான கதைகள் மீதும், கதாபாத்திரங்கள் மீதும் நம்பிக்கை வைத்து நடிக்க விஜய் சேதுபதி மாதிரியான நாயகர்கள் தமிழ் திரையுலகில் இருக்கிறார்கள் என்று வெளிப்படுத்தியிருக்கிறார்.




மூன்றாம் வகுப்பு மட்டுமே படித்து இருக்கும் தன்னைப் போல, தன் குழந்தைகள் இருக்கக்கூடாது, அவர்கள் தனியார் பாடசாலையில் படிக்க வேண்டும் என மேலும் பணம் சம்பாதிக்க இறங்கி ஆசைப்பட்டு அவதிப்படுகிறார். அன்பான கணவனாக, அப்பாவாக ராதாகிருஷ்ணன் கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதியின் நடிப்பு கதாபாத்திரத்துக்கு ஏற்றபடி அளவாக, அம்சமாக இருக்கிறது. உச்சக் காட்சியில் அவரின் நடிப்பைப் பார்த்து கண்ணீர் விடாதவர்கள் இருக்க முடியாது.

விஜய் சேதுபதியின் மனைவியாக காயத்ரி. அவருடைய இயல்பான சோக முகம் கதாபாத்திரத்துக்கு அப்படியே பொருத்தமாக அமைந்துவிடுகிறது. தங்களை விட்டுச் சென்ற கணவனை நினைத்து கலங்கும்போது நம்மையும் கலங்க வைக்கிறார்.

விஜய் சேதுபதியின் முஸ்லிம் நண்பராக குரு சோமசுந்தரம். மதத்தை மீறிய இவர்களைப் போன்ற நட்புக்கள் இங்கு பலருக்கும் உள்ளார்கள். அது போல விஜய் சேதுபதி கேரளா சென்றதும் அங்கு தேநீர் கடை நடத்தி வரும் கிறிஸ்துவப் பெண்ணாக ஜ/வர் மேரி, விஜய் சேதுபதியுடன் சகோதர பாசத்தில் பழகுகிறார். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் என மதங்களை மீறிய சகோதரத்துவம் இந்த மண்ணில் இருக்கிறது என்பதை இயக்குனர் சீனு ராமசாமி அழுத்தமாய் உணர்த்தியிருக்கிறார்.

இளையராஜா, யுவன்ஷங்கர் ராஜா முதல் முறையாக இணைந்து இசை அமைத்திருக்கிறார்கள். பின்னணி இசையில் உருக வைத்திருப்பவர்கள், பாடல்களில் இன்னும் உருக வைத்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. தேனி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமப் பகுதிகளை அப்படியே இயல்பாய் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது சுகுமார் ஒளிப்பதிவு.

மெதுவாக நகரும் திரைக்கதை, நகைச்சுவை உள்ளிட்ட வர்த்தகம் சார் விடயங்கள் படத்தில் இல்லாதது சற்றே குறையாகத் தெரிகிறது.

# எதிர்காலத்தின் நம்பிக்கை!

நிலவன்



30 ஆண்டுகளின் பின்னர் தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியை தாயகத்தில் வீழ்த்தியுள்ளது இலங்கை அணி. உலகக் கிண்ணங்களை வென்ற அணி, உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறுவதென்றால் தகுதிச் சுற்றில் ஆடியே ஆகவேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. இந்த அணிதான் இப்போது அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியுள்ளது.

இந்த அவுஸ்திரேலிய அணி, கிரிக்கெட் உலகின் ஆதிக்கம் நிறைந்த அணியாக இருந்தது. இப்போதைய அணி அத்தகைய நிலையில் இல்லைத்தான்... ஆனாலும், டேவிட் வோர்ணர், மக்ஸ்வெல், பின்ஞ், மார்ஷ் கம்மின்ஸ் போன்ற உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் கொண்ட அணியைத்தான் வீழ்த்தியிருக்கிறது இலங்கை அணி.

### இலங்கை அணி...!

ஒரு காலத்தில் உலகக் கிண்ணங்களை கைகளில் ஏந்திய அணி...! இறுதிவரை போராடுவது எப்படி என்று உலக கிரிக்கெட் அணிகளுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்த அணி. வெல்ல முடியாத அணி என்று புகழ்பெற்ற அவுஸ்திரேலிய அணிக்கே சிம்மசொப்பனமாக திகழ்ந்த அணிதான். ஆனால், கடந்த சில வருடங்களில் - குறிப்பாக 5 ஆண்டுகளில் மிக மோசமான தோல்வியை - அவமானகரமான சாதனைகளைப் படைத்ததும் இதே இலங்கை அணிதான்.

ரணதுங்க, சனத் ஜெயசூரிய, அரவிந்த டீ சில்வா, மாவன் அத்தப்பத்து, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், குமார் சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, டில்ஷான், லசித் மலிங்க என கிரிக்கெட் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தவர்களைக் கொண்ட அணிதான் இன்று தனது இருப்புக்காக நம்பிக்கையான வீரர்களை இனங்காண எதிர்பார்த்திருக்கிறது.

இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் அந்தோ பரிதாபம் என்பதுபோலத்தான் - ஒட்டுமொத்த நாட்டின் நிலைமையும்கூட. எரிபொருள் இறக்குமதிக்காக அடுத்த நாட்டின் தயவை எதிர்பார்த்திருக்கும் நிலை, மின் துண்டிப்பு, பொருட்கள் ஏதுமின்றி காணப்படும் - மூடப்படும் வர்த்தக நிலையங்கள்.





ஒருவேளை உணவுக்காக கையேந்தும் நிலைமை அதிகரித்துள்ள தேசமாக மாறிவிட்டது. எரிபொருட்களுக்காக கிலோமீற்றர் கணக்கில் வாகனங்கள் காத்திருக்கின்ற போதிலும் - அடுத்த வேளை உணவுக்கு என்னவழி என்று சிந்திக்கும் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ள போதிலும் கிரிக்கெட் மீதான ஈர்ப்பை - பற்றை - இன்னமும் இலங்கையர்கள் முழுமையாக இழந்து விடவில்லை.

கிரிக்கெட் மீதான இந்த ஆர்வமே - விருப்பமே எரிபொருள் தட்டுப்பாடு - உணவு நெருக்கடிக்கு மத்தியிலும் 30 ஆயிரத்துக்கும் குறையாத ரசிகர்களை மைதானத்தை நோக்கி வரவைத்தது.

இந்த ரசிகர்களை ஏமாற்றி விடாமல் இந்தத் தொடரில் செயல்பட்டிருக்கிறார்கள் இலங்கை அணி வீரர்கள். வீழ்ந்து கிடந்த இந்த அணியை தூக்கி நிறுத்தி தங்களை நட்சத்திர அந்தஸ்துள்ள வீரர்களாக மாற்றியுள்ளார்கள் இலங்கை வீரர்கள்.

தொடக்கம் கொடுக்கும் வீரர்களுக்காக இலங்கை அணி தடுமாறினாலும், பதும் நிசங்க அந்த இடத்துக்கு தான் பொருத்தமானவர் என்று நிரூபித்திருக்கிறார்.

இதேபோன்று, மத்திய வரிசையில் சரித் அசலங்கவும் தனஞ்சய டீசில்வாவும் தங்களை நிரூபித்திருக்கிறார்கள். அடுத்துவரும் ஆண்டுகளில் இலங்கை அணியின் நம்பிக்கை நாயகர்களாக இவர்கள் மாறியிருக்கக்கூடும்.

இதேபோன்று வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன போன்ற பந்துவீச்சாளர்களும் தொடர்ச்சியாக தங்களை நிரூபித்து வருகிறார்கள். இவர்கள், தவிர, நிரோஷன் டிக்வெல்ல, தசூன் சானக, சாமீக கருணாரத்ன போன்றவர்களும் இலங்கை அணிக்கு நம்பிக்கை அளிக்க வல்லவர்களாக மாறுவார்கள்.


இலங்கையின் எதிர்காலத்தை வறுமை சூழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வீழ்ச்சியிலிருந்து மெல்லத் தனது எழுச்சியை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது இலங்கை கிரிக்கெட் அணி. இந்த எழுச்சி இலங்கை கிரிக்கெட்டுக்கு - அதன் ரசிகர்களுக்கு ஒரு நம்பிக்கையை கொடுக்கலாம். இது இலங்கையில் கிரிக்கெட்டின் மீதான ஆர்வத்தை மக்கள் தொலைத்துவிடவில்லை என்பதை உணர்த்தலாம்.



ஒரு காலத்தில் உலகக் கிண்ணங்களை கைகளில் ஏந்திய அணி...! இறுதிவரை போரா டுவது எப்படி என்று உலக கிரிக்கெட் அணிகளுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்த அணி. வெல்ல முடியாத அணி என்று புகழ்பெற்ற அவுஸ்திரேலிய அணிக்கே சிம்மசொப்பனமாக திகழ்ந்த அணிதான். ஆனால், கடந்த சில வருடங்களில் – குறிப்பாக 5 ஆண்டுகளில் மிக மோசமான தோல்வியை – அவமானகரமான சாதனை களைப் படைத்ததும் இதே இலங்கை அணிதான்.

# இலங்கை ஒலிபரப்புத்துறையின் வரலாற்று ஆவணம்

- எஸ்கேராஜென்




## பீ.எச்.அப்துல் ஹமீத் எழுதிய 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூல் அமெரிக்காவில் வெளியீடு

### புலம்பெயர் மடல்

இலங்கை வானொலி நூற்றாண்டு விழாவை மூன்றாண்டுகளில் கொண்டாடப்போகின்றது.

உலக ஒலிபரப்பு வரலாற்றில் இலங்கை வானொலிக்குத் தனியிடம் உள்ளது.

அந்த நீண்ட வரலாற்றைக்கொண்ட கலைக்கூடம் நூற்றுக்கணக்கான ஒலிபரப்புத்துறை ஆற்றலாளர்களை வளர்த்தெடுத்துள்ளது. அன்று தனி ஒரு நிலையமாக நிலைபெற்று தனது பணிகளை ஆற்றி, ஆற்றலாளர்களை நாட்டுக்கும் உலகிற்கும் அறிமுகப்படுத்தியது.

இன்று அறுபது எழுபது வயதை அடைந்திருப்பவர்கள் தங்கள் இளமைக் காலத்தை, வாலிபப்பருவத்தை அசை போடுவதற்கு இலங்கை வானொலி அவர்களுக்குத் துணை நிற்கிறது. அன்று வானலையில் வலம் வந்த நிகழ்ச்சிகளையும், அவற்றை நேர்த்தியாக வானொலியில் வழங்கிய அறிவிப்பாளர்களையும் அந்தக் காலத்து நேயர்கள் மனதிருத்தி வைத்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுதும் வானொலி நிகழ்ச்சிகளில் பேசும் பொழுது தங்கள் அபிமான அறிவிப்பாளர்கள் பெயர் குறிப்பிட்டு, அவர்கள் நடத்திய நிகழ்ச்சிகள் பற்றிப் பேசுகிறார்கள்.

இன்று ஒலிபரப்புத்துறை என்பது மாற்றமடைந்துவிட்டது. பேச்சுக்களும், செய்தி வாசிப்புக்களும் மாற்றத்துக்குள்ளாகி விட்டன.

பி.பி.சி வானொலியின் வழித்தோன்றல்களாக, அவர்களது பயிற்சிகளைப் பெற்று வளமடைந்த இலங்கை ஒலிபரப்புத்துறை இன்று கற்றதை மறந்து மொழியின் செழுமைக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் ஒலிபரப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இவை தொடர்பான கருத்துக்கள் அவ்வப்பொழுது எழுத்தூடகங்களில் வெளிவருவதுடன் நின்று போய்விடுகின்றன.

கவனத்திற்கெடுத்து காரியமாற்ற முன்வருவோர் இல்லாமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மூத்த ஒலிபரப்பாளர்கள் தங்கள் கருத்துக்களையும் வழிகாட்டல்களையும் அவ்வப்பொழுது சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகிறார்கள். ஆனால், சீர்படுத்தல் என்பது சிரம்மாகவே இருக்கிறது.

அன்று ஒரு விடயத்தை எழுதினால் அது பத்திரிகைகளில் வெளிவருவதாக இருந்தால் சிலருடைய பார்வைக்குச் சென்று செதுக்கப்பட்டே பதிவாகும்.

ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் உயர் கல்வி பயிலும் மாணவர்களின் கற்கைக்கு உதவியது என்பது வரலாறு.

அது போல வானொலி பாடசாலைகளில் ஒலித்த காலம் உண்டு. குறிப்பிட்ட நேரத்தில் ஒலிபரப்பாகிவந்த கல்வித்துறை சார்ந்த நிகழ்ச்சி மாணவர்களுக்கு உதவியது.

இன்று அவை எம்மிடமிருந்து அருகிவிட்டன. அப்படித்தான் இருக்க வேண்டுமா? என்ற கேள்வி எழலாம். ஆனால், மாற்றங்கள் என்பவை ஒலிபரப்புத்துறையில் சீராக அமைய வேண்டும். நிகழ்ச்சிகள் நேர்த்தியாக நடைபெற வேண்டும். வழிகாட்டுவதற்கு அந்தத் துறைசார் வல்லுனர்கள் இருக்கிறார்கள்.



அவர்கள் வாழும் பொழுதே அவர்களிடமிருந்து துறைசார்ந்த விடயங்களை ஆழமாக அறிந்து கொள்ள வேண்டும். அவை தலைமுறை தலைமுறையாகத் தொடர வேண்டும்.

உலகில் வானொலியின் வரவு. இலங்கையில் வானொலியின் தோற்றம். அதில் யார் யாரெல்லாம் ஈடுபட்டார்கள்? யார் வழி காட்டினானார்கள்? தமிழ் ஒலிபரப்பு எப்படி ஆரம்பமானது? எப்பொழுது ஆரம்பமானது?

தேசிய சேவை, வர்த்தக சேவை என்பன எவ்வாறு இயங்கின?

எத்தகைய விற்பன்னர்கள் ஒலிபரப்புத்துறை அதிகாரிகளாக விளங்கினார்கள்?

அவர்கள் ஒலிபரப்புப் பணியாளர்களை எவ்வாறு வழி நடத்தினார்கள்?

இலங்கை வானொலி தென்னிந்திய திரையிசைப்பாடல்களுடன் மாத்திரம் பயணித்ததா? புதிய சிந்தனைகள் வானொலி நிகழ்ச்சிகளாக எவ்வாறு வடிவம் பெற்றன? வானொலி நாடகம் எந்தளவுக்குச் சாதனை படைத்தது?

ஒலிபரப்புத்துறையின் முன்னோடிகள் எவ்வாறு இந்தத் துறையில் பயணித்தார்கள்? இது போன்ற ஒலிபரப்புத் துறைசார்ந்த பல்வேறு விடயங்களை, ஊடக வானில் 54 ஆண்டுகால அனுபவத்தைப்பெற்ற உங்கள் அன்பு அறிவிப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் எழுதியுள்ள 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' என்ற நூலில் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளார்.

வானொலித்துறை சார்ந்தவர்கள் அறிந்திடவேண்டிய பல விடயங்கள் இந்நூலில் உள்ளடங்கியிருக்கின்றன.

வானொலி ஆகிய ஜனரஞ்சக ஊடகம் தோற்றம் பெற்றது முதல் இப்பொழுது வரை அது வீழ்ந்து போகவில்லை.

எவ்வகையான புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகமாகின்றபொழுதும் அதற்குள் வானொலியும் வந்து சேர்ந்து விடுகிறது.

இன்று நாம் கைகளில் வைத்திருக்கும் அலைபேசிகளின் வரவின் பொழுது, காட்சிக்கு முன்னர் ஒலி ஊடகங்களே இடம்பிடித்திருந்தன. இன்றும் அந்த அலைபேசிகளில் வானொலி வலம் வந்துகொண்டுதான் இருக்கிறது.

உலகத்தமிழ் ஒலிபரப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்கள் எழுதியிருக்கும் 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூல் ஜூலை 1ம் திகதி முதல் 4ம் திகதி வரை அமெரிக்கா நியூயோக்கில், வட அமெரிக்க தமிழ்ச்சங்கங்களின் பேரவை வழங்கும் முத்தமிழ் விழாவில் முதன் முறையாக வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்களுக்குக் கிடைக்கும் இந்த மாண்பேற்றம், இலங்கை வானொலிக்குக் கிடைப்பதாகவே கருதமுடியும்.

உலகின் எந்த ஒரு நாட்டில் நின்றாலும், அங்கே தனது தாய் வானொலியை முன்னிலைப்படுத்தி “நான் இலங்கை வானொலியில் இருந்து வந்தவன்” என்பதை எப்பொழுதும் நினைவூட்டிக்கொள்வார். அமெரிக்காவிலும் அது நினைவூட்டப்படும்.

அமெரிக்காவைத் தொடர்ந்து கனடா,ஐரோப்பா,இலங்கை என அப்துல் ஹமீத் எழுதிய 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூலின் அறிமுக விழாக்கள் நடைபெறவுள்ளன.



## வியுக்தியார் பதில்கள்

**கே. சிவரூபன், கச்சேரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

பதின்மூன்று லட்சம் புலம்பெயர்ந்த தமிழர்களும் ஒன்றாக வந்து இலங்கையின் கடனை அடைக்க தேவையான ஐம்பதாயிரம் மில்லியன் டொலர்களை வழங்கினால் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கும் மலையக தமிழர்களுக்கும் அரசியல் தீர்வு தருவீர்களா என்று எம்.பி. சிறிதரன் பாராளுமன்றத்தில் கேட்டிருக்கின்றாரே. புலம்பெயர்ந்த தமிழர்கள் அவ்வளவு வசதியாகவா வாழ்கின்றார்கள்.

**வியுக்தியார்:**

இந்தக் கேள்வியை சிறிதரன் எம்.பி.யிடம்தான் கேட்கவேண்டும். என்னிடம் கேட்டுவிட்டீர்கள். அவர் சொன்னதைக் கேட்டு மிச்சமாக இருக்கின்ற நமது இளைஞர்களும் எத்தனை லட்சங்களைக் கொடுத்தென்றாலும் இனி புலம்பெயர வேண்டும் என்று முடிவெடுக்கப்போகின்றார்கள் என்பது மட்டும் தெரிகின்றது. 13 லட்சம் பேரால் 50ஆயிரம் மில்லியன்களை கொடுக்க முடியும் என்றால் தலைக்கு சுமார் நாற்பதாயிரம் டொலர்களை கொடுக்கவேண்டும். உலகம் எங்கும் பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றால் நமது புலம்பெயர் உறவுகளும் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும்போது சிறிதரன் எம்.பி. என்ன தெரியாமலா சொல்லியிருப்பார். அவருக்குத் தெரியும் நாம் அப்படி தருகின்றோம் என்று சொன்னாலும் அவர்கள் தீர்வை தரமாட்டர்கள் என்று. அதுதான் அவர் ஒரு பேச்சுக்கு சொல்லியிருப்பார்.

---

**அன்ரன் செல்வராசா, பெரிய உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:**

பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கோரிக்கை விடுக்கிறாரோ. நாடு இன்றிருக்கும் பொருளாதார நெருக்கடியில் தேர்தல் ஒன்று அவசியம் என்று கருதுகின்றீர்களா?

**வியுக்தியார்:**

அட நீங்கள் வேறு... தமிழீழம்தான் தமிழ் மக்களின் பிரச்னைக்கு ஒரே தீர்வு என்றும் அதற்காக தமிழ் மக்ககளிடம் ஆணை கேட்பதாகவும் கூறி எழுபத்தியேழாம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் போனவர்கள் எமது எம்.பி.க்கள். ஆனால் பல ஆண்டுகள் கழித்து, தமிழீழம் என்று சொன்னாலும் அது கிடைக்காது என்று தெரிந்துகொண்டுதான் கேட்டோம் என்று இப்போது சம்பந்தன் ஐயா சொன்னது ஞாபகம் இல்லையா?. அதுபோலத்தான் இப்போதும் கிடைக்கமுடியாதது எதுவோ அதனைத்தான் நமது தலைவர்கள் கேட்பார்கள். பாராளுமன்றத்தை கலைப்பது என்றாலும் இன்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருக்கும் பொதுஜன முனன்ணி எம்.பி.க்கள் ஆதரவு வழங்கினால் மாத்திரமே கலைக்கமுடியும். அதனைத் தெரிந்துகொண்டே, அவர்கள் அதனை செய்ய முன்வரப்போவதில்லை என்று தெரிந்துகொணடே நாம் கேட்பதை நீங்கள் சீரியசாக எடுக்கக்கூடாது.

---

**எஸ். பிரகலாதன், சங்கானை.**

**கேள்வி:**

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வைக்கோல் பட்டறை நாய் மாதிரி, அதாவது தாங்களும் செய்ய மாட்டார்கள். செய்பவர்களையும் விடமாட்டார்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருப்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:**

அவர் என்ன சொல்ல வரகிறார்? வைக்கோல் பட்டறையில் மாடுகள் வைக்கோல் தின்னுவதை நாய்கள் தடுப்பதுபோல என்கின்றார். அதாவது வைக்கேலை நாயும் தின்னாது மாடுகளும்தின்னவிடாது என்று சொல்வதாக நீங்கள் நினைத்துவிட்டீர்கள் போல?. வைக்கோல் பட்டறையில் இருக்கும் வைக்கோல்கள் மாடுகளுக்காகத்தானே இருக்கின்றது. அதை எஜமான் மாடுகளுக்கு தேவையான நேரத்தில் எடுத்து மாடுகளின் இருப்பிடத் திற்கே கொண்டுவந்து தருவார்தானே அதற்கு முதல் ஏன் சாப்பிடுகிறாய் என்றுதான் நாய்கள் குலைக்கின்றன. பட்டறையில் இருக்கும்போது மாடுகள் சாப்பிட்டால் வைக்கோல் பட்டறையே நாசமாகப்போய்விடும். அதனைத் தடுப்பதற்காகத்தான் நாய்கள் குலைக்கின்றன. அதைத்தான் அவர் சொல்ல வருகிறார் போலும்.

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com



# பேசப்படாத மௌனம்...

**சிறி ரஞ்சனி**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தொடர்ந்து நடந்த விசயங்கள் அவர் மேல ஒரு மதிப்பையும் ஏற்படுத்தின. தனிப்பட்ட காரணங்களுக்கா திருமணம் செய்யிறது எனக்குப் பிடிக்கேல்லை எண்டதைச் சொன்னன்.

"சரி, அப்ப சினேகிதரா எண்டாலும் இருப்பமே, விதி எங்கை கொண்டுபோய்ச் சேர்க்குதோ அங்கை சேர்க்கட்டுமன்," எண்டார்.

அப்பிடியே அடுத்த எட்டு மாதங்களிலை வாழ்க்கை திசை மாறிப்போனது. அம்மாக்கு வந்த கான்சரும், மோசமாய்ப் போன நாட்டு நிலைமையளும் கலியாணம் கட்டுறது ஒரு கட்டாயதேவை எண்டொரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின. முடிவிலை திருமதி. மோகன் ஆனேன். கனடாக்கு வந்த மோகன் பிறகு என்னையும் சுமியையும் இங்கை கூப்பிட்டிருந்தார்.

இருபத்தி ஐந்து வருஷமா இருட் டுக்கை தடுமாறின என்ரை வாழ்க்கைக்கு ஒரு பற்றுக்கோட்டை மோகன் தந்திருந்தாலும்கூட, கடந்துவந்த சுவடுகள் என்னை விட்டு நீங்கினபாடில்லை, காயங்கள் கிளறப்பட்டபடியே இருந்தன. கனநாளா என்னை நெருங்கவிடாமத் தூரத்திலேயே அவரை நான் வைச்சிருந்தன். அவர் சும்மா தொட்டாலே எனக்குள்ளை ஒரு நெருப்புப் பத்திச்சு.

கடைசியிலை, "என்ரை வாழ்க்கேலை நடந்த கசப்பான சம்பவங்களைத் தாண்டி வாறதுக்கு என்னாலை ஏலாமலிருக்கு, கொஞ்சம் பொறுமையா இருப்பியளே?" எண்டு கெஞ்சினன். மனிச மனங்களின்ர உணர்வுகளைப் புரிஞ்ச ஒராளாய் மோகன் இருந்தார்.

முடிவிலை அவற்ரை பொறுமை என்னை அவரிட்டை ஒப்படைச்சுது. துவக்கத்தில மிக கஷ்டமாயிருந்த நெருக்கம், பிறகு மெல்லமெல்லப் பழகிப் போனது. கவுன்சலிங்கும், மோகனின் மென்மையான சுபாவமும், அதிர்ந்து பேசத்தெரியாத இயல்பும்தான் அதுக்கெல்லாம் காரணமெண்டும் சொல்லலாம்.

காலம் ரணங்களை மெல்லமெல்ல ஆத்தியிருந்தாலுங்கூட அந்த வடுக்கள் இடையிடையே வலிக்காமலில்லை.

ரண்டு வருஷத்திலை கர்ப்பமானன். ஆம்பிளைப் பிள்ளை பிறக்கோணுமெண்டு மனசார வேண்டினன். இன்னொரு பொம்பிளை இந்த உலகத்தில் பிறந்து அவஸ்தைப்பட வேண்டாமெண்டு நினைச்சன். அதாலை சுமி பிறந்தபோது எனக்கு சந்தோஷத்திலும் பாக்க அங்கலாய்ப்புத்தான் கூட இருந்துது.

✦ ✦ ✦ ✦ ✦

சுமியின்ர பள்ளிக்கூடத்திலை வேலைசெய்யிற லோகாவை யாழ்ப்பாணத்திலை இருக்கேக்கையே எனக்குத் தெரியும். அவ போனிலை கூப்பிட்டு, "உங்கட மகள் ஏதாவது சொன்னவோ?" எண்டபோது எனக்கு தொண்டேக்கை அடைச்சுது.

சுமியும் மோகனும் மும்மரமாக மெமரி காட்ஸ் விளையாடிக்கொண்டிருந்தினம்.

"ஏன், என்ன நடந்தது?" என்ரை குரல் பதறியது.

"இண்டைக்கு, பார்க்கிலை விளையாடிப் போட்டு வரேக்கே, ரீச்சருக்குச் சொல்லாமல் லைனை விட்டிட்டு ஓடிப்போய் இவ தண்ணி குடிச்சிருக்கிறா. அதாலை அந்த ரீச்சர் அவவைச் சரியாய் பேசிப்போட்டார். தெரியாதே, இவங்களெல்லாம் துவேஷசம் பிடிச்சவங்கள். எனக்கது பிடிக்கேல்லை ..."

அவர் துவேஷம் பிடிச்சவரோ என்னவோ, அவருக்குச் சொல்லாமல் இவள் ஓடியிருக்கிறாள் எண்டதைவிட அப்பிடியொண்டு நடந்ததெண்டு எனக்குச் சொல்லேல்லை எண்டதுதான் எனக்குப் பெரிசாத் தெரிஞ்சுது. ஒரு நிமிஷத்துக்குள்ளை என்ரை உடம்பிலை சூடேறினது.

"சுமி இண்டைக்குப் பள்ளிக் கூடத்திலை என்ன நடந்தது?"

"ம்ம், என்னன...?" அவளின் கவனம் விளையாட்டில இருந்தது.

"கேட்கிறது உனக்கு விளங் கேல்லையே..! பார்க்கிலை விளை யாடிப்போட்டுப் போகேக்கை லைனை விட்டிட்டு ஓடினியாம்!"

அவள் எதுவும் சொல்லாமல் என்னைப் பாத்தாள்.

எனக்குக் கோபம் உச்சிக்கேறியது. குரல் உயர்ந்தது. மோகன் குழப்பத்துடன் என்னைப் பாத்தார். திரும்பவும் கத்தினன்.

"ரீச்சரிட்டைப் பேச்சுவாங்கின கதையைப் பள்ளிக்கூடத்தாலை வரேக்கே எனக்கேன் நீ சொல்லேல்லை?"

என்ரை கோபம் அவளைப் பயப் படுத்தியதோ என்னவோ, அப்பவும் அவள் பேசாமல் நிண்டாள். எனக்கு வந்த ஆத்திரத்திலை அவளின்ரை பிஷ்டத்திலை ரண்டு அடி போட்டன். அவள் என்ரை சட்டையிலை தொங்கிக்கொண்டு அழத்தொடங்கினாள். நான் அவளைத் தள்ளிப்போட்டு விலகிப் போனன். அவள் அழுதுகொண்டேயிருந்தாள். என்ரை அடியைவிட நான் அடிச்சுப்போட்டன் எண்டதுதான் அவளை உலுக்கியிருக்கும் எண்டது எனக்கு விளங்கினது. சட்டென்று என்ரை பிழை எனக்கு உறைச்சுது. வாஷ்ரூமுக்குள்ளை போய் முகத்தைக் குளிர் தண்ணில நல்லாய்க் கழுவினன். ஆழமாய் சில தடவைகள் மூச்செடுத்தன்.

"அம்மா, எனக்குப் பீபீ வந்தால் என்னெண்டு நான் ரீச்சருக்குச் சொல்றது? அங்கை கதைக்கிறது ஒண்டும் விளங்காட்டி நான் என்னசெய்யிறது...?" பள்ளிக்கூடத்துக்குப் போறதுக்கு முதல் நாள் அவள் கவலைப்பட்ட விசயங்கள் என்ரை ஞாபகத்துக்கு வந்துது.

"அம்மா, அம்மா," அழுதபடி திரும்பவும் அவள் என்னட்டை ஓடிவந்தாள்.


"சரி, சரி, நேரம்போட்டுது படுக்கவா," அவளைத் தூக்கிக்கொண்டுபோய் கட்டிலில் கிடத்தினன். என்ரை கோபத்தை என்னால கட்டுப்படுத்த முடியாததுக்காக மனசார அவளுக்குச் சொறி சொன்னன். அதுக்குப்பிறகும் அவள் விம்மியது என்ரை நெஞ்சுக்குள்ளை ஊடுருவி நிண்டு என்னைத் திண்டுகொண்டிருந்துது.

மோகன் நித்திரையாகிப் போயிருந்தார். என்னால நித்திரைகொள்ள ஏலேல்லை, என்ரை காலுக்கு மேலிருந்த மோகன்ரை காலை மெல்லவா இறக்கினன். சத்தம்போடாமல் எழும்பிப்போய் சுமியைக் கட்டிக்கொண்டு அவளோடை படுத்துக்கொண்டன். அப்பவும் என்ரை தலையணை நனைஞ்சுது. நிர்மலமான முகத்துடன் மிக அமைதியா அவள் தூங்கிக்கொண்டிருந்தாள்.

---

# வாழ்நாள் சாதனையாளர் விருது: தமிழ்துறை சேவையில் ஒரு மருத்துவர்

**இணுவை ச. சிறி ரங்கன், லண்டன்**



டாக்டர் எஸ். நவரத்தினம் லண்டனில் தனது வீட்டுக்கு 'ஈழம்' என்று பெயரிட்டவர். தானே மேற்கொண்ட அறப்பணிக்கட்டளைக்கு, 'வளர் ஈழம்' என்று பெயரிட்டு, அறப்பணி செய்தவர். இத்துடன் இவர் ஓயவில்லை. தமிழகத்தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டது மட்டுமன்றி, முன்னாள் பிரதமர்களான இந்திரா காந்தியுடனும், ராஜீவ் காந்தியுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி, தாயகத்தின் விடுதலைக்காகத் தன்னை ஈடுபடுத்தியவர். தந்தை செல்வாவுடனும் பரிச்சயம்கொண்டு, தமிழர் குலம் அடக்குமுறையில் இருந்து விடிவுபெற சாத்வீக வழியில் உழைப்பினை நல்கியவர்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற 'திம்பு பேச்சுவார்த்தை' க்கான முழு ஆதரவையும் இவர் வழங்கினார். "என்று தணியும் இந்த சுதந்திரதாகம்....." என்று பாரதி அன்று எழுப்பிய வினா, இவரிடம் இன்னமும் ஓயவில்லை.

தாயகத்தில் ஏற்பட்ட இந்த தாகம், லண்டனுக்கு மேற்படிப்புக்கு வந்த இவருக்கு இன்னமும் அதிகரித்தது என்றே இவரது நண்பர்கள் கூறுவர். கிராமம் வீடாகி, பின்னர் ஊராகி, இப்போது உலகத் தமிழர் என்ற அளவிற்கு இவரது தமிழ் அபிமானம் விருட்சமாய் கிளைவிட்டுள்ளது. இதனாலேதான், இணுவிலைச் சேர்ந்த இளையதம்பி இரத்தினசபாபதி, 'EROS' என்ற ஒரு புரட்சிகர அமைப்புக்கு லண்டனில் வித்திட்டபோது, அவருடன் இணைந்து இவர், டாக்டர் இரத்தினம் நித்தியானந்தன், அமரர்கள் டாக்டர் ஆறுமுகம், டாக்டர் தயாபரன், குகனேந்திரன் ஆகியோருடன் இன்னும் பலரடங்கிய மூளைவள வல்லுனர்களைச் சேர்த்துக்கொண்டு, தமிழர் நலன்கருதி பலவித திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்ததை மறக்கவியலாதென்று லண்டனில் ஆரம்பகாலத்தில் பயணித்து வந்தோர் தகவல் பகிர்ந்துள்ளனர்.

தாயகத்தில் கல்வி கற்பதற்கு வசதியற்று, அறிவைத் தேடிய பிள்ளைகளுக்காக இவர் ஏற்படுத்திக்கொடுத்த வசதிகள் பலவாகும். 'அன்ன யாவற்றிலும் புண்ணியம் கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற பாரதியின் கவியடிகளால் இவர் ஈர்க்கப்பட்டார். **'கண்ணுடையர் என்போர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் என்போர் கல்லாதவர்'** என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, இவர் ஏழைகளின் கல்விப்பணிக்கு அளவிடற்கரிய பணி செய்துள்ளார். தன் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல வழிகளில் தொண்டாற்றிய இப் பெருமகன், லண்டனிலுள்ள மகாஜனாவின் பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் இருந்து பணிசெய்தார். லண்டனிலுள்ள ஆலயங்களான விம்பிள்டன் ஆலயம், உயர்வாசற்குன்று ஆலயம் ஆகியவற்றோடு தொடர்புகளைக்கொண்டுள்ள இவர், தெற்கு லண்டனிலுள்ள லூசியம் சிவன் ஆலயத் தலைவராகப் பணி யாற்றி, அந்த ஆலயத்தின் அறங்காவல ராகவும் திகழ்ந்துவருகின்றார். லூசியம் சிவன் ஆலயத்திற்கான காணி வாங்குவதற்கும் இவர் நிதிப்பங்களிப்புச் செய்துள்ளார்.

கீரிமலையிலுள்ள நகுலேஸ்வர ஆலயத்தின் சிதைவுற்ற பகுதிகளைச் செப்பனிட நிதிப்பங்களிப்புச் செய்ததுடன், அதன் குடமுழுக்கிலும் கலந்துகொண்டார். லண்டனிலுள்ள பழம் பெரும் அறப்பணி நிறுவனமான 'SCOT' அமைப்பின் அங்கத்தவராயிருந்து, தாயகத்தில் வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்கள் நல்வாழ்விற்கும் தன்கடன் பணி செய்துள்ளார். பழம்பெரும் மகளிர் கல்லூரியான சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் புனரமைப்புக்கு நிதி வழங்கியதன்மூலம் அதன் புது வனப்பிற்கும் இவர் உதவினார்.

கர்நாடக சங்கீததத்தில் ஈடுபாடு கொண்ட இசைப்பிரியரான இவர், தமிழ் நாட்டு கலைஞர்களுக்கும், லண்டன் தமிழர்களுக்கும் இடையே ஒரு கலாசாரப் பரிவர்த்தனையை ஏற்படுத்தினார். தமிழகத்தின் பிரபல கலைஞர்களை லண்டனுக்கு வரவழைத்தார். சுதா ரகுநாதன், சித்திரா விஸ்வேஸ்வரன், சாருமதி இராமச்சந்திரன், பம்பாய் ஜெயசிறி, சௌமியா, வீணை பாலசந்தர், திருச்சூர் இராமச்சந்திரன், எம். எல். வசந்தகுமாரி போன்ற பல கலைஞர்களை இங்கழைப்பித்து, அவர்களின் கலைகளில் பல சுவைஞர்களை மூழ்கச்செய்தமையை எப்படி மறப்பது? தமிழ் நாட்டிலுள்ள ஈழத்து இசைவாணி திருமதி பூஷணி கல்யாணராமனையும் பலமுறை இங்கு அழைத்து, பிரபலப்படுத்தினார்.

லண்டனில் மிக ஆரம்பகாலத்தில், திரு வி. ஆர். இராமநாதன் அறிமுகம் செய்து வைத்த சைவமுன்னேற்றச் சங்கம் மேலும் பல தொண்டுகள் செய்து தழைப்பதற்கு இவர் பேருதவிகள் செய்திருப்பதாகவும் நாங்கள் அறிகின்றோம். லண்டனில் வெளிவந்த பிரபல சஞ்சிகையான 'TAMIL TIMES' ஆசிரியர் அமரர் பி. இராஜநாயகத்தின் சேவைக்கும் இவர் பெரிதும் கைகொடுத்துள்ளார்.

'மக்கள் சேவையே மகேசன் சேவையாய்' தன் வாழ்நாளில் முன்னெடுத்த இப் பெருமகனை 'அறிவு' அறக்கட் டளை வாழ்நாள் சாதனையாளராக நேற்று கௌரவித்திருக்கிறது. வாழும் போதே வாழ்த்தும் பணி மிகவும் உயர்வானது.

அளவெட்டி, விழிசிட்டி கிராமத்தை பிறப்பிடமாகக்கொண்ட டாக்டர் நவரத்தினம், யாழ்ப்பாணத்தின் பிரபல வைத்தியராக திகழ்ந்த டாக்டர் எஸ். தர்மலிங்கத்தின் மருகர்.

ஈழநாடு



## ‘போகன்விலே’ சர்வஜன வாக்கெடுப்பு:

# ஐ.நா. மேற்பார்வையில் அமைதி வழியில் 2027இல் சுதந்திரமடையும் புதிய நாடு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

நீண்ட கால இன முரண்பாடுகளின் பின்னர், சர்வதேச மேற்பார்வையில் அமைதி வழியில் 2027இல் “போகன்விலே” (Bougainville) எனும் புதிய நாடொன்று உருவாக இருக்கிறது. அதுவும் ஆஸ்திரேலியாவிற்கு அருகில், சுமார் 1,500 கிலோமீட்டர் தொலைவில் பசிஃபிக் பகுதியில் ஒரு புதிய நாடு விரைவில் உருவாக இருக்கிறது.

கடந்த வார ஐ.நா பொதுச்சபை தீர்மானத்தின்படி “போகன்விலே” சர்வஜன வாக்கெடுப்பு சர்வதேச மேற்பார்வையில் நடந்து முடிந்ததுடன், நீண்டகால சமாதான முன்னெடுப்பின் முடிவில், பப்புவா நியூகினியாவின் தன்னாட்சி பிராந்தியத்தில் உள்ள போகன்விலே மக்கள், பொது வாக்கெடுப்பின் முடிவுகளின் படி தாம் சுதந்திரமாக வாழ விரும்பியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இரு தசாப்தங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவின் வீட்டு வாசலில் ஒரு இரகசிய இனப்படுகொலைப் போர் நடந்து முடிந்த வரலாற்றை பலரும் மறந்துவிட்டனர். 1960களின் பின் இறுதியில் போகன்விலே உள்ள “பங்குனாவில்” (Panguna) ஆஸ்திரேலியாவிற்கு சொந்தமான கனிம சுரங்கம் நிறுவப்பட்டதில் பல நூறு போகன்விலே மக்கள் நிலமற்றவர்களாகவும், மேலும் பலர் மீன்பிடி உரிமையற்றவர்களாகவும் மாறி இருந்தனர்.

### கனிம வளம் சுரண்டல்

1960 களில் போகன்விலே பூர்வீக நிலத்தை சி.ஆர்.ஏ. (Conzinc Rio Tinto Australia - CRA) சுரங்க நிறுவனத்தால் காடுகள் அழிக்கப்பட்டன. 1960களின் பிற்பகுதியில் பங்குனாவின் இருநூற்று இருபது (220)



ஹெக்டேர் காடுகள் விஷம் கலந்து வெட்டப்பட்டு எரிக்கப்பட்டன. பின்னர் பல ஏக்கர் வளமான கணிம மண் நாசமாக்கப்பட்டன.

போகன்விலே மக்கள் ஆரம்பத்திலிருந்தே கனிம சுரங்கத்தை எதிர்த்தனர். பூர்வீக நில உரிமையாளர்கள், முதன்மையாக பெண்கள், காவல்துறையை எதிர்த்து, தங்கள் நிலத்தில் சுரங்கத்தைத் தடுக்கும் முயற்சியில் புல்டோசர்கள் முன் தங்கள் குழந்தைகளுடன் போரிட்டனர். 20 வருட போராட்டங்கள், மனுக்கள், சர்வதேச பரப்புரைகள் மற்றும் சி.ஆர்.ஏ. உடன் சமமான உடன்படிக்கைக்கு பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சிகளுக்குப் பிறகு பப்புவா நியூ கினி அரசாங்கம், நில உரிமையாளர்களுக்கு போதுமான சலுகைகளை வழங்க முன்வந்தது.

### போகன்விலே புவியியல் மையம்

போகன்விலே வடக்கு ஆஸ்திரேலியாவில், சாலமன் தீவுகள் தீவுக்கூட்டத்தின் மேற்கு முனையில் உள்ளது. இது ஒரு வெப்பமண்டல, மலை சார்ந்த தீவு மற்றும்




புவியியல் ரீதியாகவும் இன ரீதியாகவும் சாலமன் தீவுகளின் ஒரு பகுதியாகும், இது அருகிலுள்ள சாலமன் தீவுகளின் அண்டையிலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

பப்புவா நியூ கினியாவின் பிரதான நிலப்பரப்பில் இருந்து போகன்விலே 500 கிலோமீட்டர் தொலைவில் இருந்த போதிலும், பப்புவா நியூ கினியாவின் அதிகாரத்தை முறியடிக்கும் ஐரோப்பிய காலனித்துவ சக்திகள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், போகன்விலேவை தனி மாநிலமாக ஆக்கியது.

### மெலனேசிய இன குழுமம்

போகன்விலே என்பது மெலனேசிய இன அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகமாகும். இதன் பொருளாதாரம் முக்கியமாக உணவுத் தோட்டங்கள் மற்றும் மீன்பிடித்தலால் பராமரிக்கப்படுகிறது. போகன்விலே மக்கள் தீவிரமாக போராடி 1988 ஆம் ஆண்டில் பங்குனாவில் சி.ஆர்.ஏ. இன் கனிம சுரங்கத்தை வலுக்கட்டாயமாக மூடினர். அந்த நேரத்தில் ‘பங்குனா’ உலகின் மிகவும் இலாபகரமான கனிம சுரங்கமாக இருந்தது. சி.ஆர்.ஏ. , அதன் பங்குதாரர்கள் மற்றும் பப்புவா நியூ கினி அரசாங்கத்திற்கு, இந்த சுரங்கம் பல மில்லியன் டாலர் இலாபமாக அக்காலத்தில் இருந்தது.

ஆஸ்திரேலியாவால் ஆதரிக்கப்படும் பப்புவா நியூ கினி அரசாங்கம், கனிம சுரங்கத்தை மீண்டும் திறக்கும் முயற்சியில் கலகத் தடுப்புப் பொலிஸாரையும் பின்னர் இராணுவத்தையும் அனுப்பியதன் மூலம் போகன்விலே மக்களின் நடவடிக்கைக்கு மேலும் எதிர்ப்பை கூட்டியது.

ஆஸ்திரேலியா மற்றும் பப்புவா நியூ கினியா அரசாங்கங்கள், பங்குனா கனிம சுரங்கத்தை மீண்டும் திறக்கவும், பிரிவினையைத் தவிர்க்கவும், போகன்விலே மக்களுக்கு எதிராக நீடித்த மற்றும் கொடூரமான போரை நடத்தி வந்தன.

### ஆஸி, பப்புவா நியூ கினி முற்றுகை

ஆஸ்திரேலிய இராணுவ உளவுத்துறை ஆலோசனையின் அடிப்படையில், ஆஸ்திரேலிய மற்றும் பப்புவா நியூ கினி அரசாங்கங்கள் இரண்டு முக்கிய நோக்கங்களுடன் ஒரு இராணுவ மூலோபாயத்தை ஏற்றுக்கொண்டன. முதலாவதாக, வான் மற்றும் கடல் இராணுவ முற்றுகையை விதித்ததன் மூலம் உலகின் மற்ற பகுதிகளிலிருந்து போகன்விலே தனிமைப்படுத்துவது. இக் கொடிய முற்றுகையால் வெளி உலகத்திலிருந்து போகன்விலே முழுமையாக மூடி வைக்கப்பட்டது. மத்திய போகன்விலே மக்கள் மருந்துகள், எரிபொருள் மற்றும் மனிதாபிமான உதவிகளை இழப்பதன் மூலம் அவர்களைச் சரண் அடைய கட்டாயப்படுத்த இந்த முற்றுகை வடிவமைக்கப்பட்டது.



சர்வதேச சுகாதாரப் பணியகத்தாலும் மற்றும் யூனிட் டிங் தேவாலயத்தின் அறிக்கைகளின்படி, இந்த முற்றுகை 10,000 க்கும் மேற்பட்ட உயிர்களைக் கொன் றது. இது போகன்விலே குடிமக்கள் மீது நிகழ்த்தப் பட்ட காட்டுமிராண்டித்தனமான உயிரியல் போர் ஆகும்.

பப்புவா நியூ கினியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளும் கையெழுத்திட்ட பல சர்வதேச ஒப்பந்தங்களின்படி இந்த கொடூர முற்றுகை சட்டவிரோதமா னது என ஊடகங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்தன.

சர்வதேச ஊடகவியலாளர்கள் போகன்விலே செல்வ தைத் தடுக்கும் வகையில் இந்த முற்றுகையின் காரண மாக போகன்விலே மீதான போர் பற்றி அதிகம் சர்வதேச ரீதியில் அறியப்படவில்லை. ஆஸ்திரேலிய அரசாங்கம் இராணுவ உதவிகளை வழங்கியதன் மூலம் சர்வதேச சட்டத்தை மீறிய இந்த குற்ற மீறல்கள் குறித்து குறிப்பிடத்தக்கவகையில் வெளியுலகம் அறியவில்லை.

### போகன்விலே புரட்சிகர இராணுவம் (BRA)

இராணுவ நடவடிக்கைகள் மற்றும் வன்முறை மூலம் போகன்விலே தீவின் கட்டுப்பாட்டை மீண்டும் கைப் பற்றுவது இராணுவ மூலோபாயத்தின் இரண்டாவது நோக்கமாகும். இருப்பினும், மத்திய, போகன்விலேவில் மதிப்பிடப்பட்ட மக்கள்தொகையுடன். 100,000 மக்கள் போகன்விலே புரட்சிகர இராணுவமாக களத்தில் இருந்தனர். இந்த முற்றுகையின் நோக்கம், போகன்விலே புரட்சிகர இராணுவத்திற்கு எதிராக மக்களைத் திசை திருப்பி மக்களின் கஷ்டங்களை அதிகரிப்பதாகும்.

### பொகேன்விலில் ஆஸ்திரேலிய இராணுவ தலையீடு

பப்புவா நியூ கினி பாதுகாப்புப் படை போர் நடவடிக்கைகளுக்கு பயிற்சி, ஆயுதம் மற்றும் நிதியுதவி மூலம் ஆஸ்திரேலியா போகன்விலே மீதான போரில் பெரிதும் ஈடுபட்டது.ஆஸ்திரேலியா, பப்புவா நியூ கினி பாதுகாப்புப் படைக்கு ஆண்டுக்கு 32 மில்லியன் டாலர்களை நேரடி இராணுவ உதவியாகவும், பெரிய தொகையை வட்டி கட்டப்படாத கடன் உதவியாகவும் வழங்கியது.



போகன்விலே தீவில் இராணுவ நடவடிக்கை நெருக்கடியின் தொடக்கத்திலிருந்து பாப்புவா நியுகினி படையினர் ஆஸ்திரேலியாவிற்கு பயிற்சிக்காக அழைத்து வரப்பட்டனர். அத்துடன் ஆஸ்திரேலியா, பசிபிக் கிளாஸ் ரோந்துப் படகுகள், வேகப் படகுகள், இரோகுயிஸ் ஹெலிகாப்டர்கள் மற்றும் ரோந்து விமானங்களை PNGக்கு வழங்குகியது. இவை அனைத்தும் போகன்விலே தீவைச் சுற்றி முற்றுகையைப் பராமரிக்கவும் செயல்படுத்தவும் பயன்படுத்தப்பட்டன.

### தீவிரமான மோதல்கள்

1988 இன் பிற்பகுதியில் கனிம சுரங்கத்தின் மீதான பதட்டங்களால் தீவிர வன்முறைக்கு வழிவகுத்தது. அரசாங்க ராயல் பப்புவா நியூ கினி கான்ஸ்டாபுலரி மற்றும் பப்புவா நியூ கினியா பாதுகாப்புப் படையின் படைகளால் ஆரம்பத்தில் சுரங்கத் தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு தடை விதிக்கப்பட்டதுடன், பின்னர் மோதல் தீவிரமடைந்தது.

அரசாங்கப் படைகளுக்கும் போகன்விலே புரட்சிகர இராணுவம் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையின் போது பூர்வீக மக்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை இரு தரப்பும் மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

மோதல் மேலும் தீவிரமடைய சி.ஆர்.ஏ சுரங்க நிறுவனம் சுரங்கத்தை மூடியது, மேலும் பல போகன்விலே மக்கள் தீவை விட்டு வெளியேறினர். ஒரு வருடமாக சண்டைகள் தொடர்ந்தன, இதில் பல கிராமங்கள் எரிக்கப்பட்டன உட்பட பரவலான மனித உரிமை மீறல் கள் நடந்ததாகக் கூறப்பட்டது. (18ஆம் பக்கம் பார்க்க)

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| | | |
|---|---|---|
| **பூக்கள்** | **பழங்கள்** | D |
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 அம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**25.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**25.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பெரும்போக அறுவடை குறைந்தால் மிகப்பாரதூரமான நிலை ஏற்படும்!

## எச்சரிக்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூன். 26

எதிர்வரும் போகத்தில் அறுவடை முப்பது முதல் ஐம்பது சதவீதம் வரை குறைவடையும் என நிபுணர்கள் கணிப்புகளை முன்வைப்பதாகவும் இது மிகவும் பாரதூரமான நிலை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



பாரியளவில் விவசாயம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தில் உள்ள சிலர் நாட்டுக்கு வருவதாக கூறப்படும் உரக்கப்பல் இன்னும் வரவில்லை எனவும் அவர் கூறினார்.

தற்போதைய உணவுப் பற்றாக்குறைக்கு அரசாங்கத்தின் தீர்வு என்னவென்பது அரசாங்கத்துக்குக் கூடத் தெரியவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரிசி தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில், எந்த நாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படப்போகிறது என்பது கூட அரசுக்கு தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

ஊட்டச்சத்தின்மை தலைவிரித்தாடும் நாட்டை உருவாக்க இடமளித்து விட்டு அரசாங்கம் பார்த்துக் கொண்டிருப்பதாக தெரிவித்த சஜித், தற்போதைய நெருக்கடிக்கு அரசாங்கத்தில் எவரிடமும் தீர்வில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கால்நடைத் தீவன உற்பத்திக்கு அரிசி, நெல் பயன்படுத்த தடை

கொழும்பு, ஜூன். 26

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையின் தொடராக நேற்று முன் தினம் முதல் அமுலாகும் வகையில் கால்நடை தீவன உற்பத்திக்காக அரிசி அல்லது நெல்லை விற்பனை செய்வதையோ அல்லது பயன்படுத்துவதையோ தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# ஐ.நா. மேற்பார்வையில்...

### 1990இல் சுதந்திர பிரகடனம்

போர் உக்கிரத்தால் 1990 இன் ஆரம்பத்தில் பப்புவா நியூகினி அரசு போகன்விலேயை விட்டு வெளியேறியது. போகன்விலே புரட்சிகர இராணுவ கட்டுப்பாட்டில் போகன்விலே விட்டுச் சென்றதுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்ட போதிலும், போகன்விலே புரட்சிகர இராணுவ தலைவரான பிரான்சிஸ் ஒனா, மே 1990 இல் ஒரு தலைப்பட்சமாக சுதந்திரத்தை அறிவித்தார்.

இதன்பின் போர் நிறுத்தம் மற்றும் அமைதிக்கான உத்வேகமாக 1997 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், நியூ சிலாந்து மற்றும் பர்ன்ஹாம் ஆகிய இடங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன, இதன் விளைவாக ஒரு போர்நிறுத்தம் ஏற்பட்டது, அத்துடன் நியூசிலாந்து தலைமையிலான ட்ரூஸ் கண்காணிப்புக் குழு ஆஸ்திரே லியா, பிஜி மற்றும் வனுவாட்டு ஆகியவற்றின் ஆதரவுடன் பின்னர் செயற்பட்டது. அப்போதிருந்து தீவில் பெரும்பாலும் போர் நிறுத்தம் உள்ளது.

போகன்விலே புரட்சிகர இராணுவ தலைவர் ஒனாவுடன் உறவை முறித்துக் கொண்டு, மற்றைய தலைவர்க ளான கௌனா மற்றும் கபுய் ஆகியோர் நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச்சில் ஸ்கேட் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டனர், இது ஜனவரி 1998 இல் லிங்கன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதில் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ், பப்புவா நியூகினி தனது வீரர்களைத் திரும்பப் பெறத் தொடங்கியது. அத்துடன் போகன்விலே புரட்சிகர இராணுவத்தை நிராயுதபாணியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது, அதே நேரத்தில் ஆஸ்திரேலிய தலை மையின் கீழ் ஒரு பன்னாட்டு அமைதி கண்காணிப்பு குழு பயன்படுத்தப்பட்டது. போகன்விலே நல்லிணக்க அரசாங்கத்தை நிறுவுவதற்கான சட்டம் டிசம்பர் 1998 இல் பப்புவா நியூ கினி பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறத் தவறியதும் உண்மையே.

### சுதந்திர வாக்கெடுப்பு

இதன்பின் 2001 இல் மற்றொரு சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டது, இது ஒரு தன்னாட்சி போகன் விலே அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வரைபடத்திற்கு வழிவகுத்தது. சமாதான உடன் படிக்கையின் நிபந்தனை என்னவென்றால், போகன்விலே இன் அரசியல் நிலை குறித்த வாக்கெடுப்பு இருபது ஆண்டுகளுக்குள் நடத்தப்படும், இது 2015 மற்றும் 2020 க்கு இடையில் திட்டமிடப்பட்டது.

ஜனவரி 2016 இல் தன்னாட்சி போகன்விலே அரசாங்கமும் பப்புவா நியூகினியா அரசாங்கமும் போகன்விலே பொதுவாக்கெடுப்பு ஆணையத்தை நிறுவ ஒப்புக்கொண்டன. 2019 இல் போகன்விலே இன் எதிர்கால அரசியல் நிலை குறித்த வாக்கெடுப்புக் கான தயாரிப்புகளை ஆணைக்குழு மேற்கொண்டன.

நவம்பர் பிற்பகுதியிலும், டிசம்பர் 2019 இன் தொடக்கத்திலும், சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஜூலை 2021 இல், பப்புவா நியூ கினியா மற்றும் போகன்விலே அரசாங்கங்களுக்கு இடையே ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டது,

ஐ.நா பொதுச்சபை தீர்மானத்தின்படி "போகன் விலே"சர்வஜன வாக்கெடுப்பு முடிவுகளின் படி தாம் தனிநாடாக சுதந்திரமாக வாழ விரும்பியுள்ளதாக அறிவித்துள்ளனர். நீண்ட கொடிய அடக்குமுறைகளின் பின்னர் போகன்விலே மக்கள் சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பினை நடாத்தி, வெற்றிகரமான முடிவுகளின் படி 2027 இல் போகன்விலே சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்படும். •


## மரண அறிவித்தல்



**குமரதாஸ் நடராஜா** B.SC, MSC

**மலர்வு** 28-06-1976 **உதிர்வு** 12-06-2022

அம்பாறை அன்னமலையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா இங்கிலாந்து Swindon ஐ வசிப்பிடமாக வும் கொண்ட குமரதாஸ் நடராஜா கடந்த 12-06-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நடராஜா – அன்னப்பிள்ளை (இலங்கை) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் – மகேஸ்வரி (இலங்கை) தம்பதிகளின் அன்பு மருமகனும், கௌரி அவர்களின் அன்புக் கணவரும், சுலேக், லியன்னா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சிவராஜா (லண்டன்), நவரெட்ணராஜா(இலங்கை), சந்திரகுமார் (இலங்கை), கலா( இலங்கை), தங்கையா (லண்டன்), தயானந்தன் (இலங்கை), ஜெயரூபி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,மேகலா(லண்டன்), சித்திரா(இலங்கை), பிரமிளா (இலங்கை), வரதநாதன் (இலங்கை), வாணி(லண்டன்), கேமினி (இலங்கை), கவிதீஸ்வரன்(சுவிஸ்), தர்மராஜன்(இலங்கை), மோகன்(லண்டன்), யோகேஸ்வரி(இலங்கை), நந்தினி (லண்டன்), றேணுகா(ஸ்கொட்லாண்ட்), சசீந்திரன்(ஸ்கொட் லாண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,வரதராஜன் (இலங்கை), புஸ்பராஜா(லண்டன்), உமாகாந்(ஸ்கொட்லாண்ட்) ஆகியோ ரின் அன்புச் சகலனும்,மோகனவனிதா (லண்டன்), மயூரி(ஸ்கொட்லாண்ட்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோ தரரும்,சிரோஜிதன், மேனுஜன், நதினுஜா, சர்வாகரன், மது ராங்கன், மதுபிரித்தா, லதுசனா, லக்ஷிகா, சஸ்மிரா, ஜதுஷிகா, ஷனா, மிட்வின், விதுஷியா, அக்ஷயா, நேனுஜா, நேப்ராஜித், கிஷாந், சப் தனா, டிலக்ஷிகா, அஜேஷ், தனிஷ், பிரனிதா, சசிதரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், பிரம்மியா, டிலேக்கா, லாவண்யா, ரிஷாந்த், சசிக்காந், நேராகுல், ஜிபேத்திரா, மோனிஷ், டியானா, கிருத்திகன், எஸ்லினா, தேவர்சன் ஆகியோரின் பாசமிகு மாமாவும்,தர்மீத் அவர்களின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

பார்வைக்கு : Sunday, 26 Jun 2022 12:30 PM - 1:00 PM
Park South Community Centre Cranmore Ave, Swindon SN3 2ER, United Kingdom

கிரியை : Sunday, 26 Jun 2022 1:00 PM - 3:30 PM
Park South Community Centre Cranmore Ave, Swindon SN3 2ER, United Kingdom

தகனம்: Sunday, 26 Jun 2022 4:00 PM - 4:30 PM
North Wiltshire Crematorium Swindon Rd, Royal Wootton Bassett, Swindon SN4 8ET, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**தங்கையா - சகோதரன்** Mobile : +447930179638
**மோகன் - மைத்துனர்** Mobile : +447951765107
**கௌரி - மனைவி** Mobile : +447477865491
**சிவராஜா - சகோதரன்** Mobile : +447447661556
**வரதராஜன் - சகலன்ஷ** Mobile : +94776020661
**நவரெட்ணராஜா - சகோதரன்** Mobile : +94715656624

தகவல் :
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



**சற்குணம் முகுந்தன்**

Nissan Exotique Marche *லாச்சப்பல்* France, *உரிமையாளர்*

**மலர்வு** 23-06-1978 **உதிர்வு** 24-06-2022

யாழ். கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட சற்குணம் முகுந்தன் அவர்கள் நேற்று முன்தினம் 24-06-2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னதுரை சற்குணம், சுசிலாதேவி தம்பதி களின் பாசமிகு மூத்த மகனும்,கிருஷ்ணவேணி(பிரான்ஸ்), சைலஜா(இலங்கை), நிசந்தன்(பிரான்ஸ்), தர்சிகா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கருணாமூர்த்தி(பிரான்ஸ்), சுகந்தன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும்,அனுசன், மதுசன், அக்ஷயா(பிரான்ஸ்), ஆதீசன், அக்ஷரன், இஷான்(இலங்கை) ஆகியோரின் மாமனாரும்,சிவலோகநாதன்(இலங்கை), காலஞ்சென்ற சிவகுணநாதன், பரமேஸ்வரன்(நிசான்– La Courneuve), சிவயோகநாதன் (லண்டன்) ஆகியோரின் மருகனும்,காலஞ்சென்ற தனபாலசிங்கம், அமிர்தலிங்கம் (இலங்கை), மகா தேவன் (நோர்வே), சிவனேஸ்வரி(இலங்கை), சறோஜினிதேவி(இலங்கை), விமலாதேவி (இலங்கை), சிவகுணநாயகி(இலங்கை) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைப் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

பார்வைக்கு :
Saturday, 25 Jun 2022 4:00 PM - 5:00 PM
Sunday, 26 Jun 2022 4:00 PM - 5:00 PM
Monday, 27 Jun 2022 3:00 PM - 4:00 PM
Crématorium des joncherolles villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
**சுசிலாதேவி - தாய்** - Mobile : +94779547496
**நிசந்தன் - சகோதரன்** - Mobile : +33668682306
**கருணா - சகோதரன்** - Mobile : +33626756223
**சுகந்தன் - சகோதரன்** - Mobile : +94773577234
**ஈசன் - மாமா** - Mobile : +33699445225
**யோகன் - மாமா** - Mobile : +447780008725

தகவல் :
**குடும்பத்தினர்**

## நகரப்பகுதி...

வெளியிட்டுள்ளது.

இதன்படி, கடந்த வாரம் கிராமியப் பகுதிகளில் பாடசாலைகள் முன்னெடுக்கப்பட்டமை போன்று, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு போக்குவரத்து அசௌகரியமற்ற பாடசாலைகளை வழமைபோன்று இயக்கவேண்டும்.

குறித்த பாடசாலைகளில், போக்குவரத்து பிரச்னை உள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் ஊடாக அந்த ஆசிரியர்களின் பிரத்தியேக விடுமுறையில் விடுவித்து, பொருத்தமான நேர அட்டவணையை தயாரிக்கவேண்டும்.

அதேநேரம், கடந்த வாரம் பாடசாலைகள் இயங்காத நகரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளை வாரத்தில் 3 நாட்களுக்கு இயக்கவேண்டும்.

இதன்படி, செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரையில் குறித்த பாடசாலைகள் இயங்கவேண்டும்.

அந்தப் பாடசாலைகளில், ஆரம்பப் பிரிவு கற்பித்தல் பணிகளை முன்னெடுக்கும் நாட்கள் குறித்து, தீர்மானிக்கும் அதிகாரம் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் வராத நாட்களில் இணையவழி முறைமையில், வீட்டுப் பாடங்களை வழங்குதல் உள்ளிட்ட முறைகள் ஊடாக கற்பித்தல் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவேண்டும்.

போக்குவரத்து பிரச்னை காரணமாக, பாடசாலைகளுக்கு சமூகமளிக்க முடியாத ஆசிரியர்களுக்காக, குறித்த நாட்களை தனிப்பட்ட விடுமுறையாக கருதாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## அமெரிக்க...

வரை இலங்கையில் இருந்து பல்வேறு சந்திப்புக்களில் பங்கேற்கவுள்ளனர்.

இத்தூதுக்குழுவில் ஆசியாவிற்கான பிரதி உதவித் திறைசேரிச் செயலாளர் றொபர்ட் கப்ரொத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலாளரான தூதுவர் கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

அவர்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்டவர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர். (அ)

## தமிழ்...

யின் உயர்மட்டத் தலைவர்கள் அதிருப்தியில் இருப்பதாகவும் அந்த கொழும்பு செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

ஒரு தனிநபர் பிரேரணையாக, கட்சியின் பொதுச்செயலாளர் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்த 21ஆவது அரசமைப்பு திருத்தத்தை, அரசமைப்புக்கு விரோதமானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதனை தயாரிப்பதில் மேற்படி தமிழ் அரசியல்வாதியும் பங்காற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இப்போது அரசாங்கம் சமர்ப்பிக்கவிருக்கும் 21ஆவது திருத்தத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி நிராகரிக்கவேண்டும் என்று அந்த கட்சியினருக்கு அவர் அழுத்தம் கொடுத்து வருவதாகவும், இதனையும் கட்சியின் தலைவர்கள் பலர் விரும்பவில்லை என்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் தமக்கு நெருங்கிய வட்டாரங்களிடம் சினத்துடன் தெரிவித்ததாகவும் மேற்படி கொழும்பு செய்திகள் மேலும் தெரிவித்தன.

இதே போலவே, கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்திலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமாகச் செயற்பட்ட இந்த தமிழ் அரசியல்வாதி, ஐக்கிய தேசியக் கட்சியின் உள் விவகாரங்களிலும் தலையிட்டு, பிரதமர் ரணில் மீது கடுமையாகச் செல்வாக்குச் செலுத்த முற்பட்டார் என்றும், அதன் விளைவாக ஐக்கிய தேசிய கட்சியின் வீழ்ச்சிக்கே அவர் வழிவகுத்திருந்தார் என்றும் சுட்டிக்காட்டுகின்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள், ஆனாலும் இறுதிக் காலத்தில் சுதாகரித்துக்கொண்ட பிரதமர் ரணில் மேற்படி தமிழ் அரசியல்வாதியை ஓரம் கட்டினார் என்பதையும் தமது தற்போதைய தலைவர் சஜித் புரேமதாஸவுக்கு இப்போது நினைவூட்டுவதாகவும் தென்னிலங்கைச் செய்திகள் மேலும் கசிகின்றன.

## 10 அத்தியாவசியப்...

தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (அ)

## திருச்சி...

சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் திருச்சி அகதிகள் முகாமில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 21 பேர் தங்களை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 35 நாட்களாக தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, நேற்றைய போராட்டத்தின்போது ஒருவர் தீக்குளிக்க எடுத்த முயற்சிகள் தடுக்கப்பட்டுள்ளன.

யாழ். பருத்தித்துறையை சேர்ந்த அகதி ஒருவரே சிறப்பு முகாமிலுள்ள உறவுகளை விடுவிக்க கோரியும் மதுரை திருவாதவூர் அகதிகள் மறுவாழ்வு அமையத்தில் உள்ள தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் தன்னை இணைக்குமாறு கோரியும் தீக்குளிக்க முற்பட்டுள்ளார்.

உமா ரமணன் (வயது-44) என்பவர் தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார்.

உடல் கருகிய நிலையில் அவரை மீட்ட முகாம்வாசிகள், திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் உமா ரமணன் சிகிச்சை பெற்று வருகிறார்.

விடுதலை வேண்டி, இலங்கை தமிழர்கள் பலர் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## எரிபொருள்...

ஏற்பாட்டுப் பணிகள் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளதாக விநியோகஸ்தர்கள் அறிவித்துள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த எரிபொருள் கப்பல் துறைமுகத்துக்கு வரும் வரை பொது போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த வாரத்தில் வரையறுக்கப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என்பதால், எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என அவர் பொதுமக்களை கேட்டுள்ளார். (அ)

## மன்னார்...

தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

அண்மைக் காலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சுகாதாரத் துறையினர் எதிர்நோக்கும் பிரச்னைகளை கண்டித்தும் கிளிநொச்சியில் எரிபொருள் நிலையத்தில் கிளிநொச்சி வைத்திய அதிகாரி தாக்கப்பட்டதைக் கண்டித்தும் மன்னார் மாவட்ட சுகாதார ஊழியர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)



# தேசிய மக்கள் சக்தியின் மாநாடு யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஜுன். 26

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பித்த இந்த மாநாடு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

சீரழிந்த தாயகத்தை கட்டியெழுப்புகின்ற தீர்வு எனும் தலைப்பில் நடந்த மாநாட்டில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய, ஜே.வி.பியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன், இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் தலைவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

### தாக்கப்பட்ட இளைஞன் சாவு;

# எரிபொருள் நிலைய முகாமையாளர் உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜுன். 26

யாழ்ப்பாணம் மாநகர் மகாத்மா காந்தி (மணிக்கூட்டு) வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட இளைஞர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மற்றும் தலைக்கவசத்தினால் தாக்குதல் நடத்திய இருவருமே இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் ஜுலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் உடுவில் செபமாலை கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந் (வயது-24) என்பவரே உயிரிழந்தார்.

ஊடக பயிலுநர் நண்பருடன் எரிபொருள் நிரப்ப குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை இளைஞன் சென்றுள்ளார். அப்போது இடையில் புகுந்து வந்தவர்கள் எரிபொருள் நிரப்ப முற்பட்டபோது ஊடக நண்பர் ஒருவர் காணொளி பதிவு செய்துள்ளார். காணொளிப் பதிவை தடுக்க எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஊடக நண்பரின் கையை முறுக்கியுள்ளார்.

அதன்போது நியாயம் கேட்க முற்பட்ட இளைஞனை எரிபொருள் நிலையத்தில் உள்ளவர்கள் தலைக்கவசத்தினால் தாக்கியுள்ளனர். அதனால் இளைஞனுக்கு வாய், மூக்கு வழியாக குருதி ஓடியுள்ளது.

அங்கிருந்து வீடு சென்ற இளைஞன் மறுநாள் மதியம் நெஞ்சுவலி மற்றும் உடல் சோர்வு காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் இரண்டு நாள்களின் பின் அவர் சிகிச்சை பயனின்றி கடந்த புதன்கிழமை இரவு உயிரிழந்தார்.

இளைஞனின் சடலத்தின் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உள்ள தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவம் இடம்பெற்றபோது எரிபொருள் நிரப்பு நிலைய சி.சி.ரி.வி. பதிவு காணப்படவில்லை என விசாரணைகளில் தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் மீது கொலை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து பொலிஸார் பி அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர். அதனடிப்படையில். சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க மறுத்த மன்று ஜுலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் பொலிஸ் நிலையத்தில் தனது சட்டத்தரணி ஊடாக சரணடைந்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் விசாரணைகளின் பின் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். முகாமையாளர் மீதும் கொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அதனால் முகாமையாளர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான், அவரையும் வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

# எரிபொருள் நெருக்கடி மேலும் மோசமடையும்



கொழும்பு, ஜுன். 26

எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கு கொண்டு வரப் படும் எரிபொருளை இறக்கு வதற்கும் அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளுக்கும் பணியாளர்கள் ஒதுக்கப் ஸ்ரீபட வில்லை என தொழிற்சங்கவாதி ஆனந்த பாலித குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாலித, எதிர் வரும் நாட்களில் எரிபொருள் நெருக்கடி மேலும் மோசமடையும் என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

38,000 மெற்றிக் தொன் எரிபொருளை ஏற்றுக்கொள் வதற்கு ஊழியர்கள் தயாராக இல்லாத நிலையில், ஏற்றுமதி தாமதமானது.

இறக்குமதி செய்யப்பட்ட இந்த எரிபொருள் ஏழு நாட்கள் மட்டுமே நீடிக்கும். மாதாந்தம் நான்கு இறக்கு மதிகள் தேவைப்படுகின்றன.

எரிசக்தி அமைச்சரின் கூற்றுப்படி, டீசல் நேற்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் கொள்வனவிற்கான கட் டளைகள் எதுவும் வழங்கப்படவில்லை - என்றார். (அ)

# சுகாதாரத் துறையினர் நேற்று கிளிநொச்சியிலும் கவனவீர்ப்பு




கிளிநொச்சி, ஜுன். 26

கிளிநொச்சி மாவட்ட சுகாதார ஊழியர்கள் நேற்று காலை 9.30 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் சுகாதார ஊழியர் களுக்கு எரிபொருள் விநியோகம்

மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் அங்கு சமூகமளித் திருந்த கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந.சரவணபவன் மீது சிலர் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவித்து அதற்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார ஊழியர்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ளவர்கள் மிகமோசமான வார்த்தை பிரயோகங்களை மேற்கொள்கின்றனர், அவமதிக்கும் வகையில் நடந்துகொள்கின்றனர். மது போதையில் இருப்பவர்கள் தொழில் அடையாள அட்டையை

பரிசோதிக்கின்றனர். எனவே இவ்வாறான சம்பவங்களை நிறுத்தவேண்டும். அத்தோடு சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ளவேண்டும்,

சுகாதார ஊழியர்களுக்கு என கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திற்கு வழங்கப் பட்ட அனுமதியினை நிறுத்தி கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்திற்கு மாற்றுமாறும், சுகாதார பணிப்பாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணி மனையிலிருந்து பேரணியாக மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றையும் அவர்கள் கையளித் தனர். (அ)

# திங்கள் முதல் அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்லமாட்டார்கள்

## உறுதியாக அறிவித்தது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜுன். 26

எதிர்வரும் திங்கள் முதல் ஆசிரியர்கள் அதிபர்கள் பாடசாலைக்குச் செல்லமாட்டோம் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த சங்கத்தின் செயலாளர் சரா. புவனேஸ்வரன் தெரிவிக்கையில்-

நாளை மறுதினம் பாடசாலைகள் ஆரம்பமாகும் போது எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அது இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளை யும் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களை குழப்பு கின்ற அரசியலாகவே இருக்கின்றது. அதாவது நகர்ப்புற பாடசாலைகள் மூன்று நாட்களும் கிராமப்புற பாட சாலைகள் ஐந்து நாட்களும் நடைபெற வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது ஒரு வேடிக்கையான விடயம் கிராமப்புறங் களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒட்டுமொத்தமாக நகரங்களிலிருந்து செல்கின்றவர்கள். அவர்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து மார்க்கங்கள் எதுவுமே இங்கில்லை. பொதுப் போக்குவரத்து பேருந்துகள் கூட அந்த ஆசிரியர்களை ஏற்றிச்செல்ல மறுக்கின்றன. அவர்கள் தனியாகச் செல்வதற்கு எரிபொருள் இல்லை.

இந்த நிலையில் அவர்களை பாடசாலைக்குச் சென்று மாணவர்களுக்கு கற்பியுங்கள் என்று கூறுவது உண்மை யில் மோசமான ஒரு அறிவிப்பு.

நாங்கள் பிள்ளைகளுடைய கல்வியில் அக்கறையாக இருக்கின்றோம். எத்தகைய பயங்கரமான சூழ்நிலைகளி லும் அவர்களுக்கு கல்வி யூட்டியவர்கள் நாங்கள். ஆனால் இன்று ஏற்பட்டிருக்கின்ற இந்த சூழலில் ஒட்டு மொத்த மக்களையும் இன்று வீதிகளில் வரிசைகளில் வைத்திருக்கின்றது இந்த அரசாங்கம்.

இந்த சூழ்நிலையில் மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடிய மனநிலையில் ஆசிரியர்களோ அல்லது கற்கக் கூடிய மனநிலையில் மாணவர்களோ இல்லை என்ப தனை அரசாங்கம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும்.

விசேடமாக அன்றாட வாழ்க்கைக்கு அன்றாட உணவுக்கே வழி இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்ற போது அந்த அவஸ்தைக்கு மாற்றீடாக மாணவர்களுக்கு மதிய போசனத்தை கொடுங்கள், ஆசிரியர்களுக்கு, மாணவர்களுக்கு பொதுப்போக்குவரத்தை இலவசமாக் குங்கள் என்று பல்வேறு விதமான கோரிக்கைகளை முன்வைத்தபோதுஅரசாங்கம் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை.

மாறாக தாங்கள் எடுத்த கொள்கையிலிருந்து மாறாது பாடசாலைகளில் 3 நாட்கள், 5 நாட்கள் நடத்துங்கள் என்று சொல்வது வேதனை அளிக்கின்றது.

எரிபொருளுக்காக தீர்வு கிடைக்கும் வரை திங்கள் முதல் நாங்கள் யாருமே பாடசாலைகளுக்குச் செல்லமாட் டோம். இது உறுதியான அறிவிப்பு.

இதனை மத்திய கல்வி அமைச்சருக்கும் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மாகாணங்களின் கல்வி அமைச்சுச் செயலாளர்களுக்கும் மாகாணங்களின் பணிப்பாளர்களுக்கும் வலயங்களின் பணிப்பாளர் களுக்கு நாங்கள் தெளிவாக அறிவித்திருக்கின்றோம்.

ஆகவே இந்த அறிவித்தலை மாகாண செயலா ளர்கள், மாகாண பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் கூட புரிந்துகொண்டு நடக்க வேண்டும்.

எனவே எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பெற்றோர் கள் தமது மாணவர்களை வீடுகளில் வைத்திருந்து இந்த அரசாங்கத்திற்கு சமாதி நிலையை எடுத்துக் காட்ட வேண்டிய அரசாங்கத்திற்கு காட்டவேண்டிய நிலை காணப்படுகின்றது - என்றார். (அ)

# 15,000 அமெரிக்க டொலருக்கு மேல் வைத்திருப்போருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜுன். 26

பொதுமன்னிப்புக் காலத்தின் இறுதியில், மேலதிக வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருக் கின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தமக்கு அதிகாரம் உள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித் துள்ளது.

இலங்கையிலுள்ள அல்லது வசிக்கின்ற ஆளொருவரி னால் உடைமையில் வைத்திருக்கும் வெளிநாட்டு நாண யத் தொகையை 15,000 டொலரிலிருந்து 10,000 டொலர் அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமனான தொகைக்குக் குறைத்தல் தொடர்ப ான வர்த்தமானி அறிவிப்பு கடந்த 16 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

குறித்த தொகைக்கு மேலதிகமான வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருக்கின்ற, இலங்கை யிலுள்ள அல்லது வசிக்கின்ற ஆட்களுக்காக கடந்த 16ஆம் திகதி முதல் செயற்படத்தக்கவாறு 14 வேலை நாட்களைக்கொண்ட பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியின் இறுதியில் மேலதிக வெளி நாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருக்கின்ற ஆட்களுக்கு எதிராக நடவடிக்கைகளைத் எடுப்பதற் கான உரிமை தங்களிடம் இருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# நிராகரிக்கப்பட்ட பசளைக்கு பதில் புதிய பசளையை வழங்க முடியாது

## அறிவித்தது சீன நிறுவனம்

கொழும்பு, ஜுன். 26

இலங்கையால் நிராகரிக்கப்பட்ட சேதனப் பசளைக்கு பதிலாக புதிய பசளையை வழங்க முடியாது என சீனாவின் ஷின்டாவோ என்ட் பயோரெக் நிறுவனம் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் இலங்கையின் பிரதிநிதி ஊடாக இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அனுப்பிய பசளை தொகை பெற்றுக்கொள்ளவில்லை என்றால், அதற்காக இழப்பீடு செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என நிறுவனத் தின் இலங்கை பிரதிநிதி கூறியுள்ளார்.

நிராகரிக்கப்பட்ட பசளை தொகைக்கு பதிலாக வேறு பசளை தொகையை வழங்க முடியாது எனவும் அனுப்பி வைக்கப்பட்ட பசளையை நிராகரித்தால், அது நிறுவனத்திற்கு அவபெயரை ஏற்படுத்துவதாக கருதப்படும் என நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் இலங்கை பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், சுமார் ஒன்றரை மில்லியன் அமெரிக்க டொலர்களை இழப்பீடாக செலுத்த நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நிராகரிக்கப்பட்ட சீனாவின் பசளை கப்பலுக்கு செலுத்த வேண்டிய 6.7 மில்லியன் அமெரிக்க டொலர் களை செலுத்தியுள்ள போதிலும் அந்த தொகைக்கு ஏற்ப பசளை இலங்கைக்கு இதுவரை கிடைக்கவில்லை. (அ)



# வவுனியா பொது வைத்தியசாலை பணியாளர்கள் நேற்று போராட்டம்

வவுனியா, ஜுன். 26

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்கப்பட்ட மையை கண்டித்து வவுனியா மாவட்ட பொது வைத் தியசாலையில் நேற்று மதியம் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00மணி வரையில் கவனயீர்ப்பு போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தினர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊழியர்கள், மாவட்ட பொது வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்து இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் உயிர்காக்கும் தொழிலுக்கே உயிராபத்தா?, எரிபொருளினால் தாக்கப் படும் சுகாதார ஊழியர்களுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்கு, கிளிநொச்சி பிராந்திய பணிப்பாளர் தாக்கப் பட்டமையை வன்மையாக கண்டிக்கின்றோம், போன்ற வசனங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-வரலாறு
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

07.00 மணி : SPOTLIGHT
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்




10.00 மணி: -நேர்கொண்ட பார்வை



**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சக்தி ரிவி**

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு